# விவேக போதினி

" எப்பொருளெத்தன்மைத்தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு." —திருவள்ளுவர்

தொகுதி VIII { நள ௵ வைகாசி ௴ : 1916-௵ ஜூன் ௴ } பகுதி 12


## ஸ்வகீயம்
### OURSELVES

இச்சஞ்சிகையுடன் விவேக போதினியின் எட்டாவது ஆண்டு நிறைவுபெறுகிறது. இச்சமயத்தில் நமது சந்தா நேயர்களுக்கும், மற்றும் படிப்பு அபிவிருத்தியில் அக்கரையுள்ள அனைவருக்கும் இரண்டொரு மொழிகள் சொல்வது உசிதமற்றிருதென நம்புகிறோம்.

நடந்த எட்டு வருஷங்களாக, இப்பத்திரிகை செம்மையாகப் பலராலும் கொண்டாடும்படியாக நடந்தேறியதற்குக் கடவுளை வந்திப்பதுடன், நம் தமிழபிமானிகளனைவருக்கும் அன்பு பாராட்டும்படியான நிலைமையி லிருப்பதைப்பற்றிச் சந்தோஷப் படுகிறோம். மேலும் இப்பத்திரிகையின் பழைய கையொப்பக்காரர்களும், நேயர்களும் ஆதரவாயிருந்து இப்பத்திரிகையை ஆதரித்து வந்ததற்காகவும், இதனை அவரவர் வீட்டுப் பெண்டுகளும், சிறார்களும், சிறுமிகளும் படித்துக் களிக்கப் பாடசாலை மாணாக்கர்களுக்கும், மற்றைய தமிழ்நாட்டுப் பிள்ளைகளுக்கும், வெகுமதியாகக் கொடுக்கவும் உபயோகப்பட்டு வருவதற்காகவும் நாம் மிகவும் நன்றி பாராட்டுகிறோம். பத்திரிகை நடத்துபவர்களாலும், மற்றோர்களாலும் மிக உயர்வாக நமது போதினி அபிமானிக்கப்படுவதற்கும், நாம் கடமைப்பட்டவராகிறோம். அன்றியும், இவ்விடத்துத் தமிழ்நாட்டாரும், நமது ராஜதானிக்கு வெளிப்பட்ட நாடுகளிலுள்ளவர்களும் நமது பத்திரிகை சீர்பெற்றோங்கி வளரவேண்டுமென்று அவரவர்கொண்ட நற்கருத்துக்களை கண்டு களித்து நாம் நன்கு மதிப்பதல்லாமல், இப்பத்திரிகையை மேன்மேலும்ஜனங்களுக்கு வித்தியா விநோதகரமாக்கி விசேஷிக்கச் செய்ய ஊக்கமு மடைகிறோம்.

இனி ஆரம்பிக்கும் சஞ்சிகைகளும், நாம் இதுவரைகொண்ட கோட்பாடுகளை அனுசரித்தே நடத்தப்படும். இத்தனை நாளாக நீதி விஷயம், சாஸ்திர விஷயம், சிறுவர்கள் விரும்பத்தக்க சிறு கதைகள், நாடகங்கள், போதனை முறைகள், சாஸ்திர விசாரம் முதலான பல விஷயங்கள், பல படங்களுடன் விளக்கிக் காட்டியது போலவே செய்வதல்லாமல், இன்னும் பல சீர்த்திருத்தங்களும் செய்யப்படும். தேசபாஷாபிவிருத்தி, சரித்திரக் கதைகள், தற்கால சாஸ்திர விவேகம், பலநாட்டுச் சமாசாரங்கள், கணிதாதி சாஸ்திர நுட்பங்கள், ஐக்கிய நாணயத்தைப் பற்றிய விசேஷங்கள் இவைபோன்ற விஷயங்களிலும், கவனம் செலுத்தப்படும். மற்றும் சிறு கதைகளும்,நாடகங்களும் அதிசய நவீனங்களும், விநோத விடுகதைகளும், ஹாஸ்யத் துண்டுகளும், ஆங்காங்கு ததும்பிக் கிடக்கும்படியாகவும் நடத்தப்படும். மஹான்களின் சரிதையும், ஜீவஹிம்ஸா விமோசனமும், நன்னெறி வியாசங்களும், மற்றும் பற்பல உபந்நியாசங்களும், எப்போதும்போல் இடம் பெறும். எவ்விதமும் சிறியோர் பெரியோர் எவர்க்கும் எப்பாலவர்க்கும் உபயோகமாகும்படி விஷயங்கள் சேர்க்கப்படுமென்பதற்குச் சந்தேகமில்லை.

மேற்சொன்னவாறு நடக்கத் தெய்வத்தை முன்னிட்டு,இடைவிடாது விடாமுயற்சி

யுடன் உழைப்பதற்கு நாம் கங்கணங்கட்டியிருக்கின்றனம். நாம் உழைப்பதற்கேற்ப, நமது சந்தாநேயர்களும், தமிழபிமானிகளும் உண்மையன்புடன் நம்மை யாதரித்து நமது போதினி எப்போதும்போல் தான் பெற்றிருக்கும் உன்னத நிலையிலிருந்து தாழாதிருக்கும்படியாகச் செய்வாரென நம்புகிறோம். தற்காலம் இருக்கும் காகிதப்பஞ்ச காலத்தில் இந்தப் போதினியை நடத்த நமக்கு நேரும் செலவு ஒன்றுக்கு நான்கு மடங்கென்று நாம் சொல்லாமலே, யாவருமறிவரென்பது புதுமையாகாது. ஆகையினால், நமது நேயரனைவரும், இப்போதினியின் அபிவிருத்தியைத் தமதாகக்கொண்டு இப்போதினியைத் தமது பந்துமித்திரர்களுக்கு எடுத்துக்காட்டிச் சந்தாவினால் ஏற்படும் தொகையை வரவர அபிவிருத்தி செய்து, அதன் மூலமாக இப்பிரசுரம் பணச் செல்வாக்கால் மேன்மேற் சிறந்த பொருள்களை வெளியிடும்படிச் செய்வதல்லாமல், தன்னைத் தானே தாங்கிக் கொள்ளும்படியாகச் செய்வரென நம்புகிறோம். இது அவர் தமிழ் பாஷைக்குச் செய்யவேண்டிய பெரிய கடமையாகும். நமது நாடும் நமது சாஸ்திரங்களும் எவரையும் தமது கடமைகளைச் செய்யும்படிப் போதிப்பதைப்பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. அன்பற்றவர்க்கல்லவா அதைச் சொல்லவேண்டும்?

பல விதத்திலும் நமது அபீஷ்டத்தைப் பூர்த்திபெருமாறு, விஷயங்களைத் தானம் செய்த நண்பரனைவருக்கும், வாழ்வும் பெருமையும் மேன்மேலும் உயரவேண்டுகிறதன்றி, நமது போதினி அவர்களது உயர்ந்த பாவங்கள் நிறைந்த விஷயங்கள் பொதிந்து, பண்டிதபாமர ரஞ்சகமாகித் தேவர் நாட்டுக் கற்பகமென்ன, வேண்டியார் வேண்டியவண்ணம், மன உத்ஸாகத்திற்கும், அதனால் தூண்டப்படும் பெருஞ்செயல்கட்கும் ஜீவாதாரமாக விளங்கி நம் தமிழ் நாட்டுலாவ மூவா முதல்வனை உள்ளன்புடன் வேண்டுகின்றோம். அவரது பெருமையை நம்மாற் புகழ்வதுந்தரமா? எல்லாம் எமையாளும் ஈசன்செயல். அவனன்றி ஓரணுவுமசையாது. அவனது கடாக்ஷத்தைப் பெருவதற்கிணங்க ஸர்வே ஜனா: ஸுகினோ பவந்து.

# சிந்தனை மொழிகள்

## STRAY THOUGHTS

“ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி”—“பொருள் ஒன்றே; பெரியோர் பலவிதங் கூறுவர்”—என வேதம் கோஷமிடுகிறது. “எந்தெய்வமெந் தெய்வமென் றெங்கணும் பெரு வழக்கிற்” கிடந்தரும், பொருள் ஒன்றே. இவ்வுண்மை குரோதமற்ற ஞானியருள்ளத்தே, குடியாயிருக்கும். எம்மதமும் ஸம்மதமாய் உயர்நிலைப் பொருளை உள்ளத்துணர்ந்து விளங்க மனங்கொள்வதே மனிதப் பிறவியின் பயன்.

* * *

நம்மை நாம் ஏய்த்துவிடுவதென்ன ஆச்சரியம்! ‘அவசரகாரியமதிகம்: ஒரு நிமிஷங்கூட நிற்க நேரமில்லை’ என்று சொல்லிக்கொண்டே வீண் வம்பிலுட்கார்ந்து காலத்தை எவ்வளவு சந்தோஷமாக வீணாக்குகிறோம்? ஒரு நிமிஷம் தெய்வத்யானம் என்றால், இப்பொழுது முடியாது முடியாது என்பதற்கு நா கூசுவதில்லை. சீட்டாடுமிடத்தில் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தால், தலைபோகும் காரியமாக விருந்தாலும், அதை விட்டுச்செல்லக் காலெழாது. நம்மிடம் நமது மனம் எவ்வளவு அன்புடன் நடக்கிறது! அதை வெறுத்து, அடக்கியாளும் திறன் எப்போதுதான் நமக்கு வருமோ?

* * *

“நான் கும்பிடும்போது அரைக்கும்பிடு ஆதலால் நான் பூசைசெய்யல் முறையோ” என்று தாயுமானவர் அலறினார். வெளிவேஷத்துடன் செய்யும் பூசை அவ்வளவுதான். கடவுளிடமிருக்கும் பக்தி உடல் பாசத்தைக் கடந்து உள்ளத்துறவுகொண்டாலல்லாமல், நமக்குக் கதியேயில்லை. தன் பசியை நாடிக் காய்ச்சாச் சொல்லிய மாமிசத்தைத், தன் அன்பின் முதிர்ச்சியால், பரமசிவனுக்களித்துத், தன் கண்ணையுங் கொடுத்துநின்ற கண்ணப்பநாயனாரது மனோநிலை வருவதே ஆத்ம நிவேதனம். ஊனுக்கு முந்திக்கொள், உறவுக்குப் பிந்திக்கொள் என்பது கேவலம் உதரநிமித்தம் பஹு

கிருத வேஷங்கொள்ளும் பாமரர் வழி; எம்பெருமானிடம் உறவுகொள்பவர், அவர் உறவுக்குத் தான் முக்திக்கொள்ள வேண்டும்!

***

தூக்கணங்குருவி, அதனது அழகிய கூட்டில் ஊஞ்சலாடுவதைக் கண்ட குரங்கு 'கில் கில கில கில' என்று சத்தஞ்செய்து, முகத்தைச்சுளித்தது. தூக்கணங்குருவி அக்குளிர் நாளில் அக்குரங்கின் பரிதாப நிலையைக் கண்டு, ஆதரவுடன் "மர்கடரே! தாங்கள் இத்தனை நாள் காட்டில் வாசஞ்செய்தும், கூட்டில் வாசஞ்செய்ய அமைத்துக்கொள்ளும்படி, கூடுகட்டும் வித்தை கற்றுக்கொள்ளவில்லையே; இப்பாழும் மழையிற் சிக்கிக் கஷ்டப்படும்படியாக வைத்துக்கொண்டீரே. உமது நிலையைப்பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறதே" எனச் சொல்லியது. இவ்வுபதேச மொழிகளைக் கேட்ட குரங்கு கோபங்கொண்டு, மரத்தின் மீது பாய்ந்து குருவியின் கூட்டை நாசஞ் செய்தது. தூக்கணாங்குருவி குரங்கிற்குப் புத்திசொன்னதுபோல், எத்தனைபேர் நமக்குச் சொல்லவில்லை. குரங்குபோன்ற நமது மனம், அவர்களை எத்துணைமுறை அலக்ஷியம் செய்யச்செய்கிறது. துள்ளும் மான்குட்டி, துரவில் விழுந்ததுபோல, நமது மனம் எத்தனை தரம் படுகுழியில் விழுகிறது. அப்பொழுது, 'துள்ளாதே துள்ளாதே குள்ளா பக்கத்தில் பள்ளம் அடா' என்று எச்சரித்து அதை வெருட்டி நல்வழியில் ஓட்டச்செய்வதே அறிவின் வழி.

***

அன்பு கொண்டவர்களிடம் கடவுளுக்குப் பேதம் என்பதே கிடையாது அவர்க்கு யாவரும் ஒன்றே. மடுவிலிருந்து ஆதிமூலமே என்று அலறின யானையை மனிதர்களைக் காட்டிலும் பெரிதாகவே பாவித்தனர் குரங்கைத் தனது அத்யந்த ஆத்மநேசனாகப் பாவித் தாண்டதும் அக்கடவுள் தானே. சிட்டுக்குருவியிடம் அன்புகொண்டு சொக்கநாதர் எவ்வளவு அன்புடன் உபதேசம் செய்தார்! தாயற்ற பன்றிகளிடம் தாய்போல் வந்து, பால் கொடுத்த கதை நாமறியோமா? பகுத்துணர்வில்லாத இவற்றை எல்லாம் ஆதரவுடன் ஆண்ட பெருமையல்லவா அவரை "ஆண்டவனே! ஆண்டவனே!" என்று அலறி அழைக்கச் செய்கிறது? இந்த ஸத்ய நிலையை யுணர்ந்துதான் "தெய்வத் துணைக்கொள், தேகம் அநித்யம்" எனப் பழமொழியும் ஏற்பட்டிருக்கிறது.

***

இந்தப் பாமர ஜனங்கள் என்னபாடு படுகிறார்கள்? சிவன் வேறு, விஷ்ணு வேறு என அவர் விதண்டவாதம் செய்கிறார்கள். ஆனால் அவர் இருவரும் ஒருவரே, அதற்கவர் பெயரே சாட்சி. ஒருவர் ஸபாநாதர், ஒருவர் ரங்கநாதர்; ஒருவர் விச்வநாதர், ஒருவர் ஜகந்நாதர்; ஒருவர் பசுபதி, ஒருவர் நரபதி; ஒருவர் தேவதேவர்; ஒருவர் மஹாதேவர்; இவைபோலின்னும் பல பெயர் வேறாகத்தோன்றினும் அவற்றின் பொருள் ஒன்றே. சம்புவென்றும் விஷ்ணுவென்றும் அவரவர் அழைத்துப் பஜிப்பதும் ஒரே பொருள்தான் என்று நாம் நன்குணர்ந்து நலம் பெறுவோமாக!

***

சேற்றிற்பிறந்தாலும் செந்தாமரை போற்றிசெய்யும் பெரும் பூவாகும். அவ்வாறே எந்தச் சாதியிற் பிறப்பினும், பெரியோர் யாரினு முயர்த்தப்படுபவர்—இதுதான் ஹிந்துமதத்தின் பெருமை. நந்தன் பிறப்பால் பறையன்; அவனைத்தான் தில்லை மூவாயிரவர் வணங்கியது. கபீர்தாஸர் பிறப்பால் மஹம்மதியர்: அவரைத்தான் வடஇந்தியா முழுதும் வணங்குவது இந்திய நாட்டிற்கே ஞானந்தான் ஏற்றம். அது உண்டாகும் வரைதான் ஜாதிபேதம் முதலியன. தெய்விக ஞான முதிர்வு பலித்தால், எந்த வகுப்பைச் சேர்ந்தவனானாலும் அவன்தான் பிரம்மவித்தாவன். இதுதான் நமது நாட்டிற்கு ஞான பூமி யென பெயர் வரக் காரணம்போலும்!

# விவேக போதினி

தொ. 8] நள௵ வைகாசி௴ [பகுதி.12


## மோக்ஷ ஸோபாநம்

## THE STEPS TO THE GOAL

### ராஜயோகம் (ஆராய்ச்சி)

### மறுபிறப்பிற்குத் திரும்புவது

முன்னர் எடுத்து ஆராய்ந்தவைகளிலிருந்து, மரணம் என்பது வேறு தேஹத்தைப்பற்றி லோகாந்தரம் போவதென்றும், அல்லது சற்றுச்சுற்றும் உலாவி இங்கேயே மறுபடி பிறப்பதற்குக் காரணமென்றும் வெளியாகியிருக்கும். இங்கு மரணத்தின் பின்னரோ, அல்லது லோகாந்தர அனுபவங்களுக்குப் பின்னரோ, ஜீவன் மறுபடி இவ்வுலகில் வந்து பிறக்கத் தயாராகும் விஷயங்களைப்பற்றி ஆராய்வோம்.

இவ்வுலகில் மறுபிறப்பு அடைவதற்கு முன், மறுபிறப்பிற்குத் தயாராகும் ஜீவன் முன்பற்றியுள்ள அதிர்ஷ்டஜ (கர்மஜ) சரீரத்தையோ, பார்த்திவ சரீரத்தையோ விட்டு, இதைச்சுற்றியுள்ள நீராவித்துளிகளை லோகாந்தர அனுபவத்திற்குப் பின்னரோ, அல்லது இங்கு மரணத்திற்குப் பின்னரோ பிடித்தல்வேண்டும். இதன் பின்னர், மழை வழி, தகுந்த தருணத்தில் தகுந்த பிராணிகளுக்கு உணவாகக்கூடிய புற்பூண்டு செடி கொடிகளில் வந்து தங்கி, அதன் காய் முதலியவைகளில் அமரவேண்டும். பின்னர் ஆண் பிராணி ஆஹாரத்தின் வழி அதனுள் புகுந்து தகுந்த பெண் பிராணி கருப்பையுள் புகுந்து தேஹம் பெற்று, அந்தத் திரும்பிவரும் ஜீவன் மறுபிறப்பை அடையும்.

நம்முள் காணப்படும் ஆஹார நியமத்திற்கு, ஜீவர்கள் மறுபிறப்பு ஒழுங்கும் ஒரு தகுந்த முகாந்திரமாகும். செடி கொடி புற்பூண்டுகளெல்லாம் மறுபிறப்பை அடையத் தயாராக இருக்கும் ஜீவர்கள் தங்கி நிற்கும் இடங்கள். ஆகவே இவைகளை உணவாகக் கொண்டால் ஜீவர்களை நம்முள் ஏற்றித் தகுந்த பிள்ளைகளை உண்டாக்கலாம்: எப்பொழுதும் நல்லபிள்ளையே உண்டாக்குவதற்குத் தான் கண்ட காய்கறிகளைத் தின்னலாகாது என்று வேதம் விதிக்கிறது. பிரஹதாரண்யக உபநிஷத்தின் பின் பாகத்தில் உள்ள ஆகாரநியமமும் இதற்கு இசைந்தது தான். எந்த எந்தக் காய்கறிகள் எல்லாம் நரக ஜீவர்கள் வந்து தங்கக்கூடியவைகளோ (உள்ளிப்பூண்டு, வெங்காயம், சொரைக்காய் முதலியவைகளைப்போல) அவைகளை வைதிக வருணத்தார் தின்னலாகாதென்று வேதம் விதிக்கும். இதைக் கவனியாமலிருக்கும் மானிடர் எவ்வளவு ஸத்துக்களாக இருப்பினும், அவர்களுக்குப் பிள்ளைகளாக அஸத்துக்களே பிறப்பர். நல்லோர் குலங்களில் தீயோர் பிறப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

இங்கு கூறப்பட்ட காரணத்தால் மாம்ஸம் தின்னலாகாதென்பது வெளிப்படையாகிவிடும். மாம்ஸம் ஒரு உயிர்ப் பிராணியின் தேஹம். அது தின்னத் தயாராகும்பொழுது உயிரற்ற பிணமாகிறது. காய்கறிகள் போல ஜீவனிருக்கப்பட்ட வஸ்துவாயிராது. ஆதலால் மாம்ஸம் தின்னுவதால்

மறுபிறப்பு ஜீவன் ஒருவனுக்கும் உதவியே இல்லை. தின்பவன் தேஹக்கொழுப்பைத் தவிர வேறு பலன் இல்லை. பெரியோர்களும் 'ஊனைத்தின்றூனை பெருக்காமை முன்னினிது' என்று கூறி இப்பொருளை வெளிப்படுத்தி மரக்கறி தின்னுவது வெறும் ஊனைப் பெருக்குவதல்ல; பரோபகாரத்தையும் அடக்கியுள்ளது என்பது த்வனிக்க வைத்துள்ளார். ஊனையே தின்று வளரும் புலி முதலிய பிராணிகளுக்குங்கூடக் குட்டிகள் பிறப்பதற்கு அவை உண்ட பிராணிகள் வயிற்றிலுள்ள மரக்கறி முதலியவைகளே காரணம்.

ஆனால் யாகங்களில் ஹோமம் செய்த ஆட்டு மாம்ஸத்தைத்தின்ன வேதம் இடங்கொடுத்திருக்கிறதே இது மாத்திரம் ஊனைத் தின்றூனைப் பெருக்குவதாகாதோ என்று சிலர் குதர்க்கம் செய்யத் தொடங்கலாம். முதலாவது, தின்னும்படி விதித்துள்ள மாம்ஸ பாகத்திலிருந்த உயிர் ப்ராணிகள் தகுந்த வேத மந்திர விசேஷங்களாலும், யாகமாகிய ஈச்வராராதனத்தில் உபயோகப்படும் ஆற்றலாலும், நல்ல உயர்ந்த ஜன்மத்திற்கு உடனே எற்றப்பட்ட பின்னர்தான் அந்த மாம்ஸத்தைத் தின்ன இடங்கொடுக்கிறது வேதம். ஸாதாரணர் உயிர்ப் பிராணியைப் பழையபடி மழைத்துளிகளில் அகப்பட்டுத் திண்டாடவிட்டுத் தின்னுவது போலத்தின்ன இடங்கொடுக்கவில்லை. இரண்டாவது, ஈச்வராராதன பிரஸாதமாகச் சிறு பாகம் உட்கொள்ளச் சொல்லியதே ஒழிய வேதம் இவைகளை விருந்தில் வயிறு வீங்க ஆவலோடு உண்ணுவதுபோலத் தின்று ஊனைப் பெருக்க இடமே கொடுக்கவில்லை. மூன்றாவது, இந்தப் பிராணி ஹிம்ஸை. பிராணியின் நன்மைக்கும் யஜமான் நன்மைக்கும் வைதிக ஆராதனை பூர்த்தியாவதற்கும் கடவுள் வழிபாடாகச் செய்தே தீரவேண்டி இருப்பதால் வேதம் ஹிம்ஸா பாக பாபம் நீங்குவதற்குக்கூட ப்ராஹ்மண போஜனத்தை யாகத்தில் விதித்துள்ளது. நான்காவது, யாகஹோமசேஷத்தை முகர்ந்து பார்த்துப் போட்டு விடலாம்; தின்ன வேண்டியதில்லை என்றும் வழிவிட்டுள்ளது. இக்காரணங்களால் ஈச்வர ஆராதன ரூபமான யாகங்களில்கூட, வேதம் ஊனைத் தின்றூனைப் பெருக்க இடங்கொடுக்கவில்லை. இம்மாதிரியான ஆழ்ந்த ஜீவதத்துவ ரஹஸ்யங்கள் நமது வைதிக ஆசாரங்கள் ஒவ்வொன்றிலும் புதைந்து கிடக்கலாம்.

இனி லோகாந்தரங்களையோ அல்லது முன் பார்த்திவ தேஹங்களையோ விட்டு மழைத்துளிகளை வந்து பிடித்து நிற்கும் வரையில் ஜீவர்கள் எந்நிலைகளி லிருப்பர் என்பதைப் பகுத்து ஆராய்வோம்.

(1) நான்கு வருணத்திற்கு வெளிப்பட்ட ஜீவர்கள்.—இவர்கள் மரணமடைந்ததும் தமது புண்யம், தண்டனைப்படாத பாபம், தண்டனைப்பட்ட பாபம் இவைகளுக்கேற்றபடி சுற்றிலும் உள்ள மழைத்துளிகளைப் பற்றி உலாவி, கூடிய சீக்கிரத்தில் தகுந்த மனிதர் உணவு, அல்லது கழுதையாதித் தாழ்ந்த பிராணிகள் உணவானவைகளில் புகுந்து தகுந்த மானிட அல்லது தாழ்ந்த பிராணி ஜன்மத்தையோ அடைவர். மானிடர் ஒழிந்த மற்றைய ப்ராணிகள் கதியும் இப்படித்தான்.

(2) நரக ஜீவர்கள்:— இவர்கள் நரகில் தமது கொடிய கர்மாக்களின் பலன் ஓயும் வரையில் துடித்து மயங்கி, உணர்வு இழந்து முடிவில் அங்கிருந்து இவ்வுலகை

நோக்கித் தள்ளப்பட்டு மயக்கத்திலேயே விஷய ஸுகத்தை எப்பொழுது காணப் போகிறோம் என்ற அடங்கா உள்ளாவலுடன் மேகமண்டலம்வந்து மழைத்துளிகளைப் பற்றித் தமது வாயவிய சரீரத்தை விடுவர். பின்னர், மழைவழி தாழ்ந்த பிராணிகளுக்கு ஆகாரமாகும்செடிகொடியாதிகளாகிக்கிருமி கீடாதிப் பிறவியை அடைந்து, கிடைத்த விஷய ஸுகங்களை ஆவலுடன் பற்றி உழன்று வெகு மெதுவாய் மேல் மேல் ஜன்மங்களடைந்து முடிவில் மானிட ஜன்மத்தை அணுகுவர். இவர்களுக்குத்தான் சாண் ஏறினால் முழம் சருக்கும் என்ற கதி ஏற்பட்டுத் தத்தளிக்கும்படி யாகும். இவர்களுக்கு ஏற்படும் தடைகள் சிசுவைச் சூழ்ந்திருக்கும் கருப்பைபோல பலமாகப் பிறர் உதவியாலேயே நீங்கத்தக்கவையாக விருக்கும்.

(3) பிதிர்லோக ஜீவர்கள்.— முன்னவர்கள் போலவே இவர்கள் கர்மபல காலமுடிவில் மயக்கம்போன்ற உணர்விழந்த நிலைகளையடைந்து தள்ளப்பட்டு மேகமண்டலம் வரை வந்து மழைத்துளிகளைப் பிடித்து ஜலீய சரீரத்தை விட்டு வைதிக தர்மத்தில் மூடப்பிடிப்புள்ள பணக்கார கிருஹஸ்தர்கள் வீட்டில் வந்து பிறவி எடுப்பர். பின்னர் வைதிக கர்மாக்களை நன்ருக அனுஷ்டித்து ஸ்வர்க்கத்திற்கு யோக்யர்களாவர். இவர்களுக்கு ஏற்படும் தடைகள் கண்ணுடியிலுள்ள அழுக்குப்போலப் பெருமுயற்சியால் நீங்குவனவாக விருக்கும்.

(4) ஸ்வர்க்க ஜீவர்கள்.—இவர்கள் மத்யம ஆக்நேய சரீரம்பெற்று ஸ்வர்க்கத்தில் தமது காம்ய வைதிக கர்மபலன் முடியும் வரையில் இருப்பவர். இவர்கள் புண்ய கர்மபலன்கள் முடிவடைந்ததும் முன்பின் எச்சரிக்கையில்லாது திடீரென்று ஸ்வர்க்கத்திலிருந்து தள்ளப்பட்டு நழுவுவர். இவர்கள் ஆக்நேய சரீரம் இவர்கள் முழு உணர்வுடனிருக்கையிலேயே பலவாருகச் சிதறி அணுவணுவாகப் பிரிந்து போய்க்கொண்டே வரும். இவர்கள் கீழே இரங்கிக்கொண்டேவருகையில், இவர்கள் ஆகாயம், வாயுமண்டலம், வைதிக ஸத்கர்மாக்கள் நடைபெறுவதால் ஏற்படும் ஹோமப்புகைகளைப்பற்றிஏற்படும் மழைத்துளிகளையே அடைந்து ஆக்நேய சரீர ஸம்பந்தம் விட்டு வைதிகவிஷயங்களில் உணர்வுடன் கூடிய பிடிப்புள்ளவர்கள் குடும்பத்தில் வந்து பிறப்பர். இவர்கள் ஸ்வர்க்கத்திலிருந்து விழுங்கால் ஏற்படும் துக்கம் நரகதுக்கத்தையும்விட அதிகமாக இருக்கும் என்று கௌடபாதாசாரியாள் தமது ஸ்வராஜ்யஸித்தியில் நன்கு விளக்கிக் காட்டியுள்ளார். நல்ல ஸுக மத்தியத்தில் திடீரென்று உணர்வு மயக்கமின்றி இந்த சரீரமாற்றம் ஏற்படுவதே இந்தத் துயரமிகுதிக்கு முக்யகாரணம். யயாதி ஸ்வர்க்கத்திலிருந்து நழுவித், தனது பேரப் பிள்ளைகள் செய்த யாகத்தில் உண்டான ஹோமப்புகையில் ஸம்பந்தப்பட்டு நின்றதுமே இதற்குத் தகுந்த உதாரணம். இக்கலிபோன்றகொடியகாலங்களில்வைதிக கர்மானுஷ்டானச் சிதைவு ஏற்பட்டு விடுமாயின், ஸ்வர்க்க ஜீவர்கள் நிராதாரமாக மழைத்துளிகளிலேயே இருந்து வைதிக கர்மம் மிகுதியாகும் கிருதயுகத்தைத் தான் எதிர்பார்த்திருக்க வேண்டும். இதனால் தான் ஒவ்வொரு கிருதயுகத்திலும் புண்யவான்கள் இவ்வுலகில் அதிகமாக வந்து பிறப்பர். இந்த ஸ்வர்க்க ஜீவர்கள் புண்ய பலன் முடிவில் அதிகக் கஷ்டப்படுவதால், தாம் அனுபவித்த விஷயம் வரையில் துச்ச புத்தியும் வைராக்யமும் உண்டாக இவர்கள் அவைகட்கு மேல்பட்ட ஸுகத்தை

அடைய முயலவேண்டும் என்ற எண்ணத்துடனேயே வந்து பிறப்பர். ஆகவே ஒரு தரம் ஸ்வர்க்கம்போய் மறுபிறப்படைந்தால் வைராக்கியம் சற்றுத் திடப்படும். இப்படி அடிக்கடி ஸ்வர்கம்போய்த் திரும்புபவர்கள் மனம்சுத்தமாக முறையே மூன்றுவித வைராக்யமும் குடிகொண்டுவந்து நான்காவதும் மோக்ஷஸாதனமுமான வசீகாரஸம்ஞான வைராக்யம் தலை தூக்கத் தொடங்கி, மோக்ஷம் கொண்டுசேர்க்கத் தொடங்கிவிடும். இந்தத் தேவலோகப் போக்குவரவு, அது வைராக்கிய முதிர்ச்சிவழி மோக்ஷம் சேர்ப்பிக்கும்விதம், இவைகளைப் பகவான் கீதை III-ம் அத்யாயம் 11-ம் ச்லோகத்தில்,

பன்னியவிவ் வேள்விகளால் பாலிக்கப் பண்ணவரை, அன்னவரும் பாலிப்பர் ஆருளால்—இன்னவிதம், உற்றொருவர் தம்மை ஒருவருதப்பாலித்துப் பெற்றிடுவீர் மேலாகும் பேறு.

என்று கூறி ஸத்கர்மாக்கள் தேவலோகத்தில் ஸத்துக்கள் குடியேறி செழிக்கச் செய்வதற்கும், அங்கிருந்து புண்ய பலன் முடிந்த ஸத்துக்கள் வந்திறங்கி இங்கு மறு பிறப்படைந்து இவ்வுலகம் செழிப்பதற்கும் காரணம் என்பதை விளக்கியிருக்கிறார். இப்படி வந்து பிறக்கும் ஜீவர்களுக்கு ஏற்படும் தடை அக்னியைச் சூழ்ந்திருக்கும் புகைபோல, அக்னி மூண்டெறியச் சிதறி விடுவதுபோல, விவேக பலத்தால் மாத்திரமே சிதரக்கூடியது. இவர்கள் சற்று ஜடபரதரைப்போல ஏமாந்தால் தாழ்ந்த ஜன்மம் அடையவும் ஏற்படும். ஆனால் உடனே விவேக பலத்தால் இவர், ஜடபரதரைப்போல மானிடப் பிறவிக்கே வந்து விடுவர். இவ்வுலகப் பிறவியில் ஏற்படக்கூடிய தடைகள் பரிபாகத்திற்கு ஏற்ப மூன்றுவிதமாக இருக்கும் என்பதை பகவான் கீதை III-ம் அத்யாயம் 38-ம் ச்லோகத்தில்,

தூமத்தால் தீயும் தூகளால் தர்ப்பணமும்
சேமக் கருப்பையாலே சிசுவும்—மாமை
அறப்பொதியப்பட்டதுபோல் ஆசையால் ஞானம்
உறப்பொதியப் பட்டிடுமென்றோர்.

என்று பகுத்துக் காட்டியிருக்கிறார்.

5. ப்ரஹ்மலோக ஜீவர்கள்:—உத்க்ராந்தி விவரத்தைப்பற்றிக் கூறியவிடத்து, இவர்களை ராகிஸத்துக்கள் என்று குறிக்கப்பட்டுள்ளது. இவர்கள் ப்ரஹ்ம லோகானுபவம் முடிந்த பின்னர், வைதிக நிஷ்காம்ய ஆசையான ஞானப்யாஸத்திற்குவிஷயானுகூலம் வேண்டும் என்ற இவர்கள் ஆவலுக்கேற்பத் தனவந்த மஹான்களான கிருஹஸ்தர்கள் வீட்டில் பிறப்பர். இதையே பகவான் கீதை VI-ம் அத்யாயம் 41-ம் ச்லோகத்தில்:—

புண்ணியர்கள் சேரும் புவனங்களைப் பொருந்தி,
எண்ணரிய காலமவண் இன்புற்று—மண்ணிடைப்
பின், நல்லொழுக்கமுள்ள நவைதீர் செழுங்குலத்
தில், சொல்லுமவன் தோன்றும் துணி.

என்று எடுத்துக்காட்டியிருக்கிறார்.

வேறு ஒருவகை ஸத்துக்களும் உண்டு. இவர்களுக்கு ரோகி ஸத்துக்கள் என்று பெயர். இவர்களுக்கு வைராக்கியம் அதிகமாயினும் பூர்வ கர்மபலத்தால் ஓயா நோயால் வருந்தும்படியாக இருந்து முக்திபெற நோயில்லா வாழ்விருந்தால் போதும் என்ற சிறுபற்றும் அவரது பெறும் ஈச்வரப்பற்றோடு கலந்திருக்கும். இவர்கள் லோகாந்தர கதியில்லாதே சிறந்து யோகிகள் குலத்தில் மறுபிறப்படைவர். அங்கு தம் தந்தையையே குருவாக அடைந்து அந்த ஜன்மத்திலேயே முக்திபெறுவர். இவர்கள் மறுபிறப்படையும் விதத்தைப் பகவான் கீதை VI-ம் அத்தியாயம் 42-ம் ச்லோகத்தில்,

அல்லதுயர் ஞானம் அடைதருமா யோக்கியர்தம்,
மல்லல்பெருங்குலத்தே வந்துதிக்கும்—தொல்லுலகில், இப்பரிசின் ஓர் பிறவி எய்தலரிதென்றும் என,
மற்பொரு தோளாய்நீ மதி.

என்று விளக்கியிருக்கிறார்.

இவ்வாறு லோகாந்தரம் அல்லது பூர்வ ஜன்மம் இவைகளிலிருந்து மறுபிறப்படைய இங்கு திரும்பிவரும் ஜீவர்கள் மறுபிறப்படையும் விவர விஷயங்களைப் பின்னர் எடுத்து விவரிப்போம்.

# கிச்சனர் பிரபு

## LORD KITCHENER

"ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு"

என்றாற்போல யாரொருவர் தமது நிலையைச் செம்மையாகக் காத்து விளங்குகின்றனரோ, அவர்தாமே பெருமை அடைவர். இதற்கு நமது சேனா மந்திரியாக விருந்த கிச்சனர் பிரபுவே திருஷ்டாந்தம். இவர் ஆங்கில ஹ்யுகினாட் தாய் தந்தையர்க்குப் பிறந்தவர். ஐயர்லாந்து தீவில் பாலி லாங்போர்ட் எனும் ஊரில் 1850௵ ஜூன்மீ 20உ பிறந்தவர். அவரது பால்யப் பருவம், ஐயர்லாந்திலும் ஸ்வித்ஸர்லாண்ட் நாட்டிலும் செலவிடப் பட்டது. அம்மனோ ரம்மியமான பிராந்தியங்கள் அவரது மனதைச் செம்மையிற் பாய்ந்து விரப்பிரபாவத்திலன்புகொள்ளுமாறு செய்தன என்பதற்குச் சந்தேகமே கிடையாது. 1868௵ வுல்விச் நகரிலுள்ள ராஜாங்க ராணுவ கலாசங்கத்தில் சேர்க்கப்பட்டு, 1871௵ ராயல் என்ஜினியராக வேலைபெற்றார். இதற்கிடையே அவர் பிரான்ஸ் நாட்டில் நடந்துகொண்டிருந்த பெரும் யுத்தத்தில் வேலையிலமர்ந்து வியாதிமேலிடத் தம்மூரையடைந்தார். இதன்பின் தான் அவர் ராயல் என்ஜினியர் ஆனது. இவ்வாறானதும் அவர் முதலில் ஸைப்ரஸ், பாலெஸ்டின் இவற்றின் ஸர்வே வேலையில் கவனஞ் செலுத்தினர். 1877-முதல் சில வருஷம் அவர் தேல்-எல்-கபீர்மீது படையெடுத்தபோது வுவ்ஸ்லியின்கீழ் வேலைசெய்தார்.



1883௵ அவர் சேனையில் காப்டன் பதவி பெற்று, அக்காலத்துச் சீர்திருத்தப்பட்டுக் கொண்டிருந்த இஜிப்ட் சேனையில் சேர்க்கப் பெற்றார். இவ்விடத்தில் அவர் காட்டிய ஸமயோசிதமான புத்தி நன்கு மதிக்கப்பட்டது. இவ்விடமே அவரது புத்தி பரவுவதற்கு ஆதாரமாக இருந்தது. கார்ட்டூம்மேல் படையெடுத்த கார்டன் கஷ்டதசையிலிருந்தபோது, அவர்க்குதவியாக அனுப்பப்பட்டார்; ஆனால் ஸமயத்திலவரைக் காப்பாற்றப் போகமுடியாது போயிற்று. செங்கடல் லிட்டோரலுக்குக் கவர்னர் ஜெனரலாகவும், ஸுவாகின் நாட்டுப் படைத் தலைவராகவும் அவர் 1886-ம்௵ நியமிக்கப்பட்டனர். மாதி அரசனுடைய நாட்டுக்குக் கிழக்கி லிருந்ததால் அவனுக்கும் அவன்பின் அரசுபெற்றவர்க்குமிவர் பெரும் பகையாகவும், அவன் நாட்டிற்குத் தீராத் தொல்லைக் கிடமாகவுமே இருந்தார். 1888௵ ஹாண்டப் என்னுமிடத்தில் நடந்த சண்டையில் இவர் படைத்தலைமை பூண்டு நேரில் சண்டைசெய்து காயமடைந்தனர். அவ்வருஷத்திலேயே, காமாஜியா, டோஸ்கி என்னுமிடங்களில் நடந்த சண்டைகளிலும் சேனைத் தலைமைபூண்டு அவர் காட்டிய மிக்க விரப்ரதாபம், ஸீ. பீ. என்னும் பட்டத்தால் கௌரவிக்கப்பட்டது. இப்பொழுதுதான், அவர் காலீபாவின் மிகச் சிறந்த சேனாபதியான உஸ்மான் டிக்னா என்பவரது சேனையை முறியடித்துச் சின்னபின்னப் படுத்தியது. 1892-ம்௵ இஜிப்ட் தேசத்துச் சேனையின் ஸர்தாராக நியமனஞ்செய்யப் பெற்றார். அதுமுதல், மூன்று வருஷங்கள்

அவரது கவனம் அந்நாட்டுச் சேனையைச் சீர்திருத்துவதில் செலுத்தப்பட்டது. கலிபாவின் பலத்தை முறியடித்து நாசஞ் செய்யவேண்டிய சூழ்ச்சியை எல்லாம் எண்ணியே வேலைசெய்துவந்து, 1896௵ தனது அபாரபுத்தியை முன்னிட்டு, அதன்மேல் படையெடுத்தார். வாடி ஹாபாமேல் படையெடுத்து, ஸௌடான் நாட்டைக் கவர்ந்து, ஆபூ-ஆஹ்மட் என்னுமிடத்தில் ஜயம் பெற்ற பிறகுதான், மாதியின் பலத்தை நாசஞ் செய்யவேண்டுமென்றுழைத்த கிச்சனரது எண்ணம் பிறரால் அறிய நேர்ந்தது. அவருடைய வினைசெயல்வகையின் ரஹஸ்யத்தின் தன்மைக்கு இது பெரும் உதாரணமாகும். இதற்குள் சைன்யத்தில் அவர் மேஜர் ஜெனரலாகப்பெற்று, கே.ஸீ.பீ. என்னும் பட்டத்தால் அலங்கரிக்கப்பட்டனர். 1898-௵ செப்டம்பர்மீ 2வ உம்டர்மான் என்னுமிடத்தில் ஆங்கில இஜிப்டிய சேனையை நடத்தி மாதியின் பலத்தை முற்றும் நாசஞ்செய்தனர். இப்பெருஞ்செயலுக்காகப் "பியர்" என்னும் பிரபுத்வமும், ஜீ. ஸீ. பீ. என்னுங் கௌரதாப்பட்டமும், கார்ட்டூம் பிரபுவெனும் பெயரும், 4,50,000 ரூ. பரிசும் இவர்க்கு அளிக்கப்பட்டது. இவரது பெருமையும் புகழும் விருத்தியாகிக் கொண்டே வந்து, அவரை யாவருமறியு நிலையில் வைத்துவிட்டது.

1899-ம்௵ போயர்கள் சண்டைசெய்த காலத்தில் ராணுவத்தலைவராகிய ராபர்ட்ஸ் பிரபுவின் ராணுவஸபையின் பிரதானியாக இருந்து, அவர் டிரான்ஸ்வால், ஆரஞ்ச் நதி சுயநாடு, இவற்றை ஜயித்து ஆங்கில ராஜாங்கத்தில் கூட்டியதும், அந்நாடுகளில் அமைதி ஏற்படுத்த கிச்சனரே தலைவராக ஏற்படுத்தப்பட்டனர். தென் ஆப்பிரிக்காவின் சேனாதிபதித் தலைவராக 1900௵ ஏற்படுத்தப்பட்டதும், அவர்க்கு வைகௌண்ட் பட்டமளிக்கப்பட்டது; ஆர்டர்-ஆப்-மேரிட் என்னும் கௌரதாப்பட்டியிலும் அவர் பெயர் சேர்க்கப்பட்டது.

தென் ஆப்பிரிகா யுத்தத்திற்குப் பிறகு, கிச்சனர் இந்தியநாட்டுப் பிரதான சேனாதிபதியாக 1902-௵ நியமிக்கப்பட்டு, அடங்காவன்மையுடன் கர்ஸன் பிரபு இந்நாட்டில் ராஜப்பிரதிநிதியாகவிருந்தபொழுது, அனேக ராணுவ ஸம்பந்தமான சீர்திருத்தங்கள் செய்தனர். இந்தியாவின் காவல்களைச் செம்மையாக அரண்படுத்திச், சேனையானது காவற்கேற்ப நிற்க ஏற்பாடுகள் செய்தனர். இந்திய சேனையானது நான்கு சைன்யங்களுடன் விளங்கியது போதாதெனத் தீர்மானித்து, ஒன்பது சைன்யங்கள் பெற்று விளங்குமாறு செய்து, இந்தியாவில் வெளியிலிருந்து அபாயம் ஏற்படக்கூடிய இடங்களில் பிரபலமான அரண்களை ஏற்படுத்தினர். இவ்வாறு சைன்யங்களை அதிகப்படுத்தி, அரண்களையும் பலப்படுத்தி, அதற்கேற்ப, அச்சைன்யங்களுக்கு வேண்டிய உணவையும் அவற்றைச் சேர்ப்பிக்கும் சாதனங்களை ஏற்படுத்துவதிலேயும், அவர் கவனத்தைச் செலுத்தினார். ஆனால் இந்தியா கவர்ன்மெண்டின் ஆலோசனை சபையின் ராணுவ அங்கத்தினரான ஸர் எட்வின் காலின் என்பவரே இதற்கு முதலில் வேண்டிய ஏற்பாடுகள் எல்லாஞ் செய்திருந்தனர். ஆனால் கிச்சனர் செய்த ஏற்பாட்டின்படி சேனையைப்பற்றிய செலவுகள் குறையும்படி செய்ததல்லாமல், உபய அதிகாரவழி ரத்து செய்யப்பட்டது. இந்தியராணுவ கலாசாலை ஏற்படுத்தியதற் கவரே ஆதாரபூதர்.

தமக்கும் கர்ஸன் பிரபுவுக்கும் மனவொற்றுமை பொருந்தாமையால் அவர் 1909-௵ இந்திய சேனாதிபதித் தலைமை வேலையை ராஜீநாமா கொடுத்துவிட்டார். இந்தியாவை விட்டுப் போகும்பொழுது ஜப்பான் தீவிற்குச் சென்று அங்கு சிலகாலம் யாத்திரை செய்தார். இதற்குள் இவர் மத்தியதரைக் கடல்மீது உலாவும் கப்பல்படைத் தலைமை பெற்றார். அக்காலத்தும், தமது அறிவின் முயற்சியாலவர் குடியேற்றநாட்டின் படைகளைச் செம்மைப்படுத்தினர். 1911-௵ கிச்சனர் இஜிப்ட் தேசத்தில் ஆங்கிலப் பிரதிகார கார்யஸ்தராக நியமிக்கப்பட்டு, நடத்திவந்த வியவஹாரங்கள் முடிவுக்குவரும் ஸமயத்தில், தற்காலம் நடந்துவரும் அகோரஐரோப்பிய மஹாயுத்தம் ஆரம்பமாக ஆங்கிலராணுவப் பிரதான மந்திரியாக அவர் 1914-௵ ஆகஸ்ட மாதம் 4வ அழைக்கப்பட்டனர்.

அவர் தமது முற்றுணர்வும் முந்தியுதவ வேலைசெய்து, 150,000 காலாட்கள் கொண்ட படையை வெகு சீக்கிரத்தில் 5,000,000 காலாட்படையாகச் செய்து, அவற்றின் உணவு விஷயங்களைக் கவனித்து, அவை போதல் வருதலும் தெரியாதிருக்கும்படி தீர்க்க ஏற்பாடுகள் செய்து, நாட்டில் மிக்க குறைவாகி யிருந்த ஆயுதங்களையும், வெடி குண்டுகளையும், போர்ச் சாமான்களையும் ஏராளமாகச் செய்யும்படியாகவும் ஏற்பாடு செய்தனர்.

அவர் ஆங்கிலராணுவ மந்திரி ஸ்தானத்தைப் பெற்ற நாள் முதல் ஓயாமல் ஜர்மானியப் பெரும் பகையை யொழிக்கவேண்டி, ஆளும், படையும், உணவுஞ் சேகரிக்கப் பகீரதப் பிரயத்தினஞ் செய்த தெவர்க்குத் தெரியாது? அவர்தானே, இப்பெரும் யுத்தம் மூன்று வருஷம் வரை முடிவுபெற முடியாதெனச் சொல்லி, வெகு சீக்கிரத்தில் முடிந்து விடும் என்று ஆலோசனையின்றிக் கூறிய தவறான வார்த்தையைத் தடுத்தவர்! மனிதன் என்றிருந்தால் குறையென்று இல்லாதிருக்க முடியுமா? ஸர் ஜான் பிரேஞ்சுக்குப் படையும் ஆளும் அவர் கேட்டவண்ணம் கொடாது, கிச்சனர் நடந்தது, அறிவுடையோர் தக்கதென்று புகழமாட்டார் என்பது நிச்சயம். ஆனாலும் கிச்சனர் செய்த மற்ற காரியங்களின் முன், இது ஸூரியனைக் கண்ட பனிபோல் மறையும்.

ரஷ்யா நாட்டிற்கு ராணுவ விஷயமாகப் போய்க்கொண்டிருக்கும் போது, அவர் சென்று கொண்டிருந்த "ஹாம்ப்ஷயர்" என்னும் ராணுவக் கப்பல், இவ்வருஷம் மேயீ 31வ ஒரு வெடிக்கும் சுரங்கத்தின் மேல் தாக்கிச் சின்னபின்னமாகத், தமது யோசனை யாட்களோடு கிச்சனர் பிரபு, கடல் பிரவாஹத்தில், நம்மை மீண்டு வந்து காணதபடி மயங்கியது, ஆங்கில நாட்டிற்கோர் துரதிருஷ்டமே! ஆயினும் நாம் கவலைப் படுவதற்குச் சிறிதுங் காரணமில்லை. கிச்சனர் மரித்ததினால் நமது யுத்த விஷயங்களுக்கோர் குறையும் வாராது. காலத்திற்கேற்ப மனிதர்கள் முன்னிலைக்கு வருவது ஸஹஜம்.

நிற்க. கிச்சனர் வீட்டு வாழ்க்கையிலும் உத்தமர்; தமது நடத்தையை திருத்து ஸத்யத்திற்கேற்ப உழைத்தவர்; வெகு சிலர். மற்றுக் காரிய பாகத்திலோ தமது புத்தியைத் திராசிலிட்டு இடையிட்டு நடப்பவர். வீரத்திலும், பிரதாபத்திலும், அவற்றிற்கேற்ப ஸத்யத்திலும், தர்மத்திலும், பொறுமையிலும் அவர் மனம் நிறைந்து விளங்கியது. அவர் போன்றவர் உலகத்திற் பிறப்பது ஆயிரத்தில் ஒன்றாகும். அவரைப் பற்றி ஸாலிஸ்பரி ப்ரபு போயர் சண்டைக் காலத்தில் கூறிய மொழிகளை இச்சண்டைக்குமேற்ப நாம் கூறுவ திழுக்காகாது. அவை வருமாறு:—

"ஜயத்திலுயர்ந்த வீரர்களை வருங் காட்டக்கூடிய வீரப்பிரதாபமும் தேச பக்தியும் ஆகிய இவற்றினால் அலங்கரிக்கப் படுவதல்லாமல், காரியசித்தியைத் தெளிந்து அளவிட மதித்துச் செய்யும் அளவை ஞானமும், வியூகரஸஞானமும், இராஜதர்ம சமர்த்த ஞானமும் ஒருங்குகூடி ஸாதாரணமான வீரனுடைய பங்கிற்கேற்படுவதைக் காட்டிலும் அதிகமாகத் திகழ்ந்துவிளங்கும் அத்யத்புதமாக மனதைக் கவருமாச்சரிய விக்ரஹமாக இவர் என்று மிருப்பர். அவர் தமது கார்யங்களைச் செய்ய அத்யாவச்யகமாக எவ்வளவு குறைந்தகாலம்வேண்டுமோ அவ்வளவே அளவு காலம் எடுத்துக் கொள்வர்; அக்காரியங்களுக்கு எவ்வளவு வேலை செய்யவேண்டுமோ அவ்வளவே செய்வர்; ஷை கார்யங்களைப்பற்றிச் செலவிடுவதில் எவ்வளவு காலந்தேவையோ அவ்வளவும், அக்கார்யத்துக் கேற்ப எவ்வளவு ஆதரவும் ராணுவபலமும் வேண்டுமோ அவ்வளவே செலவிடுவர்; அவ்விஷயங்களில் ஜயமும், சாஸ்திர பரிசீலனக் கணக்குகளில் தீர்மானங்கள் சிறிதும் தவறுமல் எவ்வாறு கரதலாமலகமாக வருமோ, அவ்வாறே நிச்சயமாகக் கிடைக்கும்."

இம்மொழிகள் சிறிதும் உத்ப்ரேக்ஷை யலங்காரத்திற் குட்பட்டனவல்ல. தமது வாழ்க்கையையும் காரியங்களையும்அவ்வளவு அளவையி லடங்கும்படியாக நடந்த அவரது வாழ்க்கையை நாம் பின்பற்றி நடப்பது இழுக்கென்று கூற யார் நா எழும்?

## சென்ட்ரல் கவர்ன்மெண்டும் லோகல் கவர்ன்மெண்டும்

## CENTRAL AND LOCAL GOVERNMENTS

சில ஜனங்களுடைய வாஸஸ்தானமாய் இராஜாங்கத்திற்கு இருப்பிடமாக விருக்கும் பூமியின் பாகங்களை, நாம் நாடென்றும் தேசமென்றும் சொல்லுகிறோம். ஆகவே ஒவ்வொரு நாட்டிலும் ஜனங்கள் தங்கள் தேசாசாரமுறை தவறாமலும், சர்க்கார் ஏற்படுத்தியிருக்கும் நிபந்தனைகளுக்குக் கீழ்ப் படிந்தும் வருகிறார்கள். அப்படியிருக்கும் பிரஜைகள் சந்தோஷமாகவும், மன அமைதியாயும் இருக்கக் காரணம் அரசாட்சியால் செய்யப்பட்டிருக்கும் நன்மையான விதிகளே. இராஜ்யாதிகாரமுள்ளவரே இவ்விதமான விதிகளை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவர முடியாதாகையாலும், அவ்விதமான வேலைகளை அவரே மெற்கொண்டுசெய்தால் அவருக்கு ஷெ விஷயங்களில் பூரா கவனம் செலுத்த முடியாமற் போய்விடுமாகையாலும், இராஜ்ய பரிபாலன அலுவல்களை அதிகாரிகள் சரிவர நடத்தும்பொருட்டுப், பல இலாகாக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு கவர்ன்மெண்டிலும் கீழ்வரும் இலாகாக்களை நாம் காணலாம்.

1. அந்நிய நாடுகளைப்பற்றியும், அந்தந்தத் தேசத்தில் நடக்கும் அரசாட்சியைப்பற்றியும் விசாரணை செய்யும் இலாகா—(Home and Foreign Department.)
2. தேசத்தை எதிரிகளினின்றும் காத்துக் கொள்வதற்கு வேண்டிய விஷயங்களைக் கவனிக்கும் இலாகா—(Army and Navy Department.)
3. விவசாயம், கைத்தொழில், வியாபாரம் இவ்விஷயங்களைக் கவனிப்பதற்கு ஏற்பட்டிருக்கும் இலாகா—(Department of Agriculture, Commerce and Industry.)
4. அரசிறை முதலாகிய பண வருமானம், அதைச் சேர்ந்த விஷயங்களை விசாரணை செய்யும் இலாகா-(Finance Department)

மேற்கூறிய பிரிவுகளில் முக்கியமான பிரிவுகள் ஒவ்வொரு தேசத்திலும், வித்தியாசப்படலாம். அப்படி வித்தியாசங்கள் இருந்தபோதிலும், மொத்தமாகப் பார்க்குங்கால் அவை வித்தியாசங்களாகத் தோன்றமாட்டா. இம்மாதிரிப் பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு அதிகாரி அதாவது மந்திரி ஏற்படுத்தப்பட்டு ஷெ மந்திரியால் அவருக்குக் கீழிருக்கும் இலாகாவின் வேலையானது நடந்தேறிவருகிறது. அப்படி நியமனஞ்செய்யப்பட்ட ஒவ்வொரு மந்திரிக்கும், ஒவ்வொரு இலாகாவைக் கொடுத்து, அவரவர் சம்பந்தப்பட்ட பிரிவின் விஷயங்களைச் சரிவர நடத்த, அவர்களில் ஒவ்வொருவருக்கும் வேண்டிய சிப்பந்திகளையும், அதிகாரத்தையும் கொடுத்திருக்கிறார்கள். இம்மந்திரிமார்கள் உதவியைக் கொண்டு அரசன் செய்யும் அரசாட்சியைத்தான் சென்ட்ரல் கவர்ன்மெண்ட் (Central Government) என்று கூறுவது. இம்மந்திரிமார்களால்நியமனஞ்செய்யப்பட்டும், இவர்களுடைய கட்டளைப்படி அரசாட்சி செய்து வரும் அதிகாரிகள் லோகல் கவர்ன்மெண்ட் (Local Government)டைச்சேர்ந்தவர்கள். இக் கவர்ன்மெண்டார் கவனிக்கவேண்டிய விஷயங்கள் அந்தந்தப் பிரதேசத்திற்கு வேண்டிய கல்வி, சரீர சௌக்கியத்தின் பொருட்டுச் செய்யவேண்டிய ஏற்பாடுகள் ஆகிய இத்தகைய விஷயங்களே.

ஆனால் பல இராஜ்யங்கள் சேர்ந்து, தங்களுக்குள் ஏற்பட்டிருக்கும் உடன்படிக்கைப்படி செய்துவரும் பெடரல் அரசாட்சியில் (Federal Government) அரசாட்சியானது.

1. பெடரல் கவர்ன்மெண்ட்
2. மாகாண கவர்ன்மெண்ட்
3. லோகல் கவர்ன்மெண்ட்

ஆக இம்மூன்று கவர்ன்மெண்டாரால் நடத்தப்பட்டு வருகிறது.

### சில ஐரோப்பிய ராஜ்யங்களின் அரசாட்சிகள்

இதுவரையில் துரைத்தனத்தைப் பற்றிப், பொதுவான சில விஷயங்களைச் சொல்லி முடித்தோம். இனி இப்பிரிவில் குறிப்பான சில தேசங்களை எடுத்துக் கொண்டு, அவற்றின் அரசாட்சி எவ்வகைத்து என்பதைப்பற்றிச் சற்றுக் கவனிப்போம்.

### பிரிட்டிஷ் ராஜ்யம்

முதல் முதல் நம்மை அரசாட்சி செய்துவரும் பிரிட்டிஷ் இராஜ்யத்தில் எம்மாதிரி துரைத்தனம் நடந்துவருகிறதென்ற விஷயம் சொல்லப்படும்.

பிரிட்டிஷ் இராஜ்யம் என்பது, தன்னுள் கீழ்வரும் நாடுகளை அடக்கிக் கொண்டுள்ளது. அவையாவன:—

(a) இங்கிலாண்டு, ஸ்காட்லாண்டு, அயர்லாண்டு ஆக இம் மூன்றும் சேர்ந்த நாடாகிய ஐக்கிய நாடு (The United Kingdom);

(b) இந்நாட்டார் குடியேறின நாடுகள்;

(c) இந்நாட்டின் சம்ரக்ஷணைக் குள்ளிருக்கும் சிலதேசங்கள். உதாரணம்—இந்தியா.

இப்பொழுது எடுத்துச் சொல்லும் விஷயம் இங்கிலாந்தில் நடக்கிற துரைத்தனம். இதைமட்டும் இப்பொழுது சிறிது விஸ்தாரமாக எழுதி, பிறகு இதிலடங்கிய கனடா (Canada), ஆஸ்த்ரேலியா (Australia), தென் ஆப்ரிகா (South Africa), இந்தியா (India) இவைகளின் அரசாட்சிகளை எடுத்துக்கொள்ளுவோம்.

### இங்கிலாந்து (England)

முதல் முதல் இதை எடுத்துக் கொள்வதற்கு இரண்டு காரணங்களுள்ளன:—

1. தற்காலத்தில் எல்லா ஐரோப்பிய நாடுகளிலும், இன்னும் வேறு சில நாடுகளிலும், இங்கிலாந்தின் அரசாட்சி மாதிரியே ஏற்படுத்தியிருக்கிறார்கள்.
2. நம் ஜன்ம பூமியாகிய இவ்விந்தியாவானது ஷெ பிரிட்டிஷ் இராஜாங்கத்திற்குக் கீழ் வந்து, அதனால் நாம் பல விதமான நன்மைகளை அடைந்திருக்கிறபடியால் அவ்விதச்சிறந்த இராஜ்யத்தின் துரைத்தனம் எவ்வாறு நடத்தப்பட்டுவருகிற தென்பதை நம்மில் ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ள வேண்டியதவசியம்.

இந்நாடானது 'லிமிடெட் மானார்க்கி'. அதாவது, இந்நாட்டில் செங்கோல் செலுத்திவரும் மன்னன் தன்னிஷ்டப்படி ஒன்றும் செய்யாமல் குடிகளால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஜனப்பிரதிநிதிச் சபை (Parliament) மெம்பர்கள் தீர்மானப்படிதான் ராஜ்ய பரிபாலனம் செய்யவேண்டும்.

# பூமி

## THE EARTH

(400-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆறுமாதங்களுக் கொருதரம் இந்நடவடிக்கை மாறுகிறது. அதாவது வட துருவம் ஆறுமாதங்களுக்குச் சூர்யனுக்கே நேராகவும், தென் துருவம் ஆறுமாதங்களுக்குச் சூர்யனுக்கு நேராகவுமிருக்கும். தென் துருவம் சூர்யனுக்கு நேராயிருக்கும்போது, நாம் முன் பார்த்த விஷயங்களுக்கு நேர் விரோதமான விஷயங்கள் சம்பவிக்கின்றன. நிரட்சரரேகைக்குத் தென்பாகத்திலுள்ள இடங்களுக்கெல்லாம் தினத்தின் பகற்பொழுது அதிகமாகவும், இரவு குறைச்சலாகவும் இருக்கும். முன்போலவே, தென் துருவத்தில் தினம் முழுவதும் பகலாகவும், வட துருவத்தில் தினம் முழுவதும் இரவாகவும் இருக்கும். அதாவது, இத் துருவங்களில் ஆறுமாதம் பகல், ஆறுமாதம் இரவு. இதைப் பற்றித் தெரிந்துகொள்ள நமக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஆனால் இது உண்மை.

நாம் நிரட்சரரேகைக்கு வடக்கில், வட துருவத்திலிருந்து தூரத்திலும், ரேகைக்குச் சமீபத்திலும் இருக்கிறோம். சென்னைப் பட்டணம் ரேகையிலிருந்து சுமார் 13 டிகிரி வடக்கிலிருக்கிறது. குளிர்காலங்களில் பகல் கொஞ்சமாகவும் இரவு அதிகமாவும் இருப்பதை நாம் கவனித்திருக்கிறோம். அப்பொழுது தென் துருவம் சூர்யனுக்கு நேராயிருக்கிறது. டிசம்பர் மாதம் 22-ம் தேதியில், பாக்கி தினங்களைவிட பகற்பொழுது மிகவும் குறைச்சலாகவும், இராப்பொழுது பாக்கி தினங்களைவிட மிகவும் அதிகமாகவும் இருக்கும். ஆனால் ஒவ்வொரு தினத்திலும் பகலும் இரவும் சேர்ந்த காலம் எப்பொழுதும் ஒன்றுதான் என்பதை நாம் மறக்கக்கூடாது. அந்தத் தேதியிலிருந்து பகற்பொழுது அதிகரிக்க ஆரம்பிக்கின்றது. அன்று சூர்யனும் நேர்கிழக்கில் உதிக்காமல், கொஞ்சம் தெற்குப் பக்கமாக ஒதுங்கி உதிக்கின்றது. அன்று முதல், சூர்யன் வடக்குத்திசையை நோக்கிச் செல்ல ஆரம்பிக்கிறது. பிறகு ஆறுமாதத்திற்கு வடக்குத்திக்கை நோக்கியே செல்லும். ஆகையால் அன்று முதல் ஆறுமாதங்களுக்கு உத்தராயணம் என்றும்,

உத்தரதிசை அல்லது வடக்கு திசையை நோக்கிச் சூர்யன் போக ஆரம்பிக்கும் தினத்திற்கு உத்தராயன புண்ணிய காலமென்றும், மகரஸங்கராந்தி என்றும் சொல்லுவதுண்டு. ஆனால் இந்த அயனகாலம் ஹிந்துக்களின் கணக்குப்படி டிசம்பர் மாதம் 22-ம் தேதி வருகிறதில்லை. சாதாரணமாக ஜனவரி மாதம் முதல்வாரக் கடைசியில் இந்தப் புண்ணியகாலத்தை நாம் கொண்டாடுகிறோம்.

இந்தத் தினத்திற்குப்பிறகு,பகல்பொழுது அதிகரித்துக்கொண்டே வருகிறது. கடைசியாக மார்ச்சுமாதம் 21-ம் தேதியில் இரவும் பகலும் ஒரே அளவாயிருக்கிறது. அன்றையதினம் சூர்யனும் நேர்கிழக்கில் உதிக்கப் பார்க்கலாம். இத்தினத்திற்கு 'அரிபதம்' என்று பெயர். உண்மையில் அன்று சூர்யன் வரும் அல்லது வந்திருப்பதாகக்காணப்படும் இடத்திற்கு 'அரிபதம்' என்று சொல்லவேண்டும். இன்றுமுதல் சூர்யன் கொஞ்சம் கொஞ்சமாக வடக்கில் ஒதுங்கி உதிக்கக் காணப்படுகிறது. இதுமுதல் மூன்றுமாதங்களிற்கு பகல் பொழுது அதிகரித்துக் கொண்டே வருகிறது. சூர்யன் சீக்கிரம் உதயமாகி, நேரம் கழித்து அஸ்தமிக்கிறது போல் காணப்படுகிறது.

மறுபடி ஜூன் மாதம் 22-ம் தேதியில் பகல் மற்றைய தினங்களைவிட மிக அதிகமாகவும், இரவு மிகக் குறைச்சலாகவும் இருக்கும். அன்று முதல், பகற்பொழுது குறையவும், இரவு அதிகரிக்கவும் தொடங்குகிறது. வடக்குத் திசையை நோக்கிச் சென்ற சூர்யனும் தெற்குப் பக்கமாகத் திரும்புகின்றது. ஆகையால் அந்தத் தினத்திற்குத் தட்சிணாயன புண்ணியகாலம் என்று பெயர். இத்தினத்தை நாம் ஆடிப் பண்டிகை யென்றும் கொண்டாடுகிறோம். இன்று முதல் ஆறுமாதங்களுக்கு, அதாவது, டிசம்பர் 22-ம் தேதிவரையில் சூர்யன் தெற்கையே நோக்கிச் செல்வதாகக் காணப்படுவதால் இந்த ஆறுமாதங்களுக்கும் தட்சிணாயனம் என்று பெயர்.

கடைசியாகச் செப்டம்பர் மாதம் 23-ம் தேதியில் மறுபடி பகலும் இரவும் ஒரேயளவாயிருக்கிறது. சூர்யனும் நேர்கிழக்கில் உதிக்கிறது. அன்றைய தினத்திற்கு 'விசுபத தினம்' என்று பெயர். மறுபடி டிசம்பர் 22-ந்தேதி வரையில் இரவு அதிகரித்துக் கொண்டும், பகல் குறைந்துகொண்டும் வருகிறது. இப்படிச் சூர்யன் நேர்கிழக்கில் உதிக்கும் தினங்களில் மாத்திரம் பகலும் இரவும் சரியாயிருக்கிறது. சூர்யன் தினம் கிழக்குத் திசையில் உதிக்கிறதென்று நாம் சொல்லுவது வழக்கம். ஆனால் ஒரு வருஷத்தில் இரண்டு தினங்கள் மாத்திரமே சூர்யன் நேர்கிழக்கில் உதிக்கிறது; மற்றையதினங்களில் கிழக்கிற்குக் கொஞ்சம் வடக்கேயாவது தெற்கேயாவது ஒதுங்கி உதிக்கிறது. இந்தத்தூரத்தை அளந்தால்,கிழக்கிலிருந்து வடக்கிலும் தெற்கிலும், 23½ பாகை அளவு சூர்யன் போவதாகக் காணப்படும்.

இவ்விதமாகவே வருஷாவருஷம் சம்பவிக்கின்றது. பூமி சூர்யனைச் சுற்றிவரும்போது நேர் செங்குத்தாயில்லாமல் கொஞ்சம் சாய்ந்திருப்பதால் நாம் முன் பார்த்தவையெல்லாம் உண்டாகின்றன. இதே காரணத்தால்தான் பல இடங்களின் சீதோஷ்ணஸ்திதியும் மாறுகின்றது. வஸந்தகாலம், கோடைகாலம், அறுப்புக்காலம்அல்லது இலையுதிர்காலம், மாரிகாலம் ஆகிய நான்கு காலங்களும் ஒன்றன்பின் ஒன்றாக ஒவ்வொரு வருஷமும் வருகின்றன. நிரட்சரரேகைக்கு வடக்கிலுள்ள இடங்களுக்குப் பகல் அதிகமாகவும், இராப்பொழுது குறைவாகவும் இருக்கும்போது, அந்த இடங்களில் ஒரு தினமாகிய சுமார் 24 மணி நேரத்தில் சூர்யன் காணப்படும் நேரம் அது காணப்படாமலிருக்கும் நேரத்தைக்காட்டிலும் அதிகம். ஆகையால் சூர்யனிடத்திலிருந்து வரும் உஷ்ணம் அதிகரித்துச் சேர்க்கப்படுகிறது. அதாவது அக்காலத்தில் அவ்விடங்களில் உஷ்ணம் அதிகமாயிருக்கும். அதைத்தான் கோடைகாலம் என்று சொல்லுகிறோம்.

இதேகாலத்தில், பூமியின் மத்திய ரேகையாகிய நிரட்சரரேகைக்குத் தெற்கிலுள்ள ஆஸ்த்ரேலியா முதலிய இடங்களில் இதற்கு நேர்விரோதமா யிருக்கும். அதாவது இராப்பொழுது அதிகமாயிருக்கச் சூர்ய உஷ்ணம் குறைந்திருக்கும்; ஆகையால் இது குளிர்காலம் அல்லது மாரிகாலமாயிருக்கும். இம்மாதிரியே நமக்கு மாரிகாலமாயிருக்கும்

போது தென்பாகத்திலுள்ள இடங்களுக்குக் கோடைகாலமாயிருக்கும். கோடைகாலத்தின் முடிவாகிய விசுபதத்திற்குப் பிறகு வரும் அறுப்புக்காலத்தில் அநேக விளைவு பொருள்களும், கனிவகைகளும் பக்குவமாய் முதிர்கின்றன. இக்காலத்தில் இராப்பொழுதும் பகற்பொழுதும் ஏறக்குறைய ஒரே அளவாயிருக்கும். அரிபதத்திற்குப் பின் வரும் வஸந்தகாலத்திலும் இராப்பொழுதும் பகற்பொழுதும் ஏறக்குறைய ஒரே அளவாயிருக்கும். இந்த வஸந்தகாலத்தில் தான் மரம் செடிகள் துளிர்விட ஆரம்பிக்கின்றன. இக்காலம் மிக உற்சாகத்தைத் தரக்கூடியதாக அடிக்கடி வர்ணிக்கப்படுகிறது. இந்த நான்கு காலங்களையும் நமது முன்னோர்கள் ஆறு ருதுக்களாகப் பிரித்திருக்கிறார்கள். அவையாவன:—வஸந்தருது, கிரீஷ்மருது, வர்ஷருது, சரத்ருது, ஹேமந்தருது, சசிர்ரிது. ஆனால் நாம் இக்காலங்களை நன்றாய் அனுபவித்தறிந்ததில்லை. இவைகளின் வித்தியாசம் நாம் துருவங்களுக்குச் சமீபத்தில் போகப்போக நன்றாகத் தெரியும். நமக்கு அநேகமாய் வருஷமெல்லாம் வெயிற்காலமாகவே தோன்றுகிறது. நமக்கு ஜூன் மாதம் 21-ம் தேதியில் இரவைவிட பகல்நேரம் சுமார் ஒரு மணி அதிகமாயிருக்கிறதை நாம் கவனித்திருக்கிறோம். இம்மாதிரியே, டிசம்பர் 23-ம் தேதி பகலைவிட இரவு சுமார் ஒரு மணி அதிகமாயிருக்கிறது. இந்த இரண்டு தினங்களிலும் நம்மேல்படும் சூர்யஉஷ்ணம் வித்தியாசப்பட்டபோதிலும் ஒன்றுக்கொன்று அதிக வித்தியாசப்படவில்லை. ஏனென்றால், சூர்ய உஷ்ணம்படும் நேரத்திற்கும் இது இல்லாத நேரத்திற்கும் அதிக வித்தியாசமில்லை. நம்மைப்போல் நிரட்சரரேகைக்குச் சமீபத்திலுள்ளவர்களுக்கெல்லாம் இம்மாதிரியே யிருக்கும். இந்த ரேகையிலிருந்து 32 பாகை வடக்கிலுள்ள அமிர்தஸரஸ்(Amiritsar)என்னும்பட்டணத்தில் இந்த வித்தியாசம் சுமார் இரண்டு மணி நேரத்திற்குமே லிருக்கிறது. இந்த வித்தியாசம் அதிகரிக்க, நான்குவித பருவகாலங்களும் நன்றாய்த்தெரியும். இந்தக் காலங்களின் மாதங்கள் வெவ்வேறு இடங்களுக்குத்தகுந்தாற்போல் கொஞ்சம் கொஞ்சம் மாறும்.

# ஒவ்வொருவனும் தன் தன் ஸ்தானத்திலுயர்ந்தவன்

## EACH IS GREAT IN HIS OWN PLACE

ஒரு அரசனுக்கு இல்லறம் பெரிதா அல்லது துறவறம் பெரிதா என்ற ஸந்தேகம் மிகுதியாய் உண்டாயிற்று. உலகத்தையும் அதன் இன்பதுன்பங்களையும் பற்றறத் துறந்து,கேவலம் ஸந்யாஸியாக மாறிக் காட்டிற்சென்று, காய்கிழங்கு, சருகு முதலியவற்றையுண்ணும் துறவிஉயர்ந்தவனா, அன்றேல் கிருஹஸ்தாச்ரமம்கைக்கொண்டுதன்மனைவி மக்களுடன் வாழ்ந்துவந்து, தன் சுற்றத்தாரையும், தன்னை நோக்கிவரும் அதிதிகளையும் உபசரிப்பவன் உயர்ந்தவனா என்ற ஸம்சயம் தோன்றிற்று.ஆகவே,தன் ஸபையைக்குறித்துவரும் ஒவ்வொரு புத்திமானையும் நோக்கி, "ஸர்வஸங்க பரித்யாகம் செய்யும் ஸந்யாஸி உயர்ந்தவனா, அல்லது கிருஹஸ்த தர்மத்தை யனுஷ்டிப்பவ னுயர்ந்தவனா" என்று கேட்பான். அவர் ஸந்யாஸமே உயர்ந்தது என்று கூறினால், அதை நிரூபிக்கும்படி வேண்டுவான். அதில் அவர் தவறுவரேல், உடனே அவரைக் கல்யாணஞ்செய்துகொண்டு கிருஹஸ்தர்களாகும்படிக் கட்டாயப்படுத்துவான். அன்றேல், இல்லறம் பெரிதென்று கூறுமவரையும் அதை நிரூபிக்கச் செய்வான். அதில் அவர்கள் தவறினாலும் அவர்களையும் கிருஹஸ்தாச்ரமத்தை வழுவுமாறு நிர்ப்பந்திப்பான்.

இஃதிவ்வாறிருப்ப, ஒருநாள் விருத்த ஸந்யாஸியொருவர் அரசனிடம் வரவே அவரையும் மன்னன்வழக்கம்போன்ற அக்கேள்வியைக் கேட்டான். அதற்கு அவர் "அரசனே! இரண்டும் ஒன்றுக்கொன்று துல்யம்தான். அதது தனித்தனி உயர்ந்ததுதான். எதுவும் உயர்ச்சி தாழ்ச்சியென்பதற்கு, அவ்வவ்வாச்ரமத்தைப் பூண்டவன் அதைப் பரிபாலிப்பதைப் பொறுத்தது" என்றுவிடையளித்தார். அதற்கு அப்பூபதி, அதை நிரூபிக்கவேண்டுமென்று பிரார்த்திக்கவே, துறவி, "நான் அப்படியே செய்கிறேன். ஆனால் நீ என்னுடன் நான் போகுமிடங்

ளுக்கெல்லாம் வந்து, நான் கூறுவனவற்றையும் செய்யவேண்டும்" என்றார். அரசன் அதற்குச் சம்மதித்தான். உடனே இருவருமாகப் புறப்பட்டு வெகு காடு நகரங்களையும், காடு, மலை, வனம், வனாந்தரங்களையுங்கடந்து, ஓரிராஜ்யத்தையடைந்தனர். அந்தராஜ்யத்தின் பிரதான நகரில், விசேஷ ஸம்பவம் ஒன்று அன்றுநடந்துகொண்டிருந்தது. கீதநாதமும், வாத்ய கோஷமும் காலாபக்கங்களிலும் ஒலித்துக்கொண்டிருந்தன. நகரத்தில்வீதிக்குவீதி மகரதோரணங்கள் கட்டப்பட்டன. முத்துப்பந்தல்களமைத்து, வாழை, கமுகு, பலா முதலியவை தூக்கி, நிறைகுடம் தீபம் முதலிய அஷ்டமங்கலம் ஸ்தாபிக்கப்பட்டன. சித்திர வஸ்திராபரண புஷ்பங்களால் அலங்கரித்துக்கொண்டு, கலவைச் சாந்தணிந்து வெகு ஆநந்த பரவசராய் மாந்தர் ஸஞ்சரித்துக் கொண்டிருந்தனர். கரத்திலணிந்த கேடகத்தின் ஒளிவீச, மதக்களிறுபோல் வீரர்கள் வெகு கோலாஹலமாய்த் திரிந்தனர். தவிர, தேரின்மீதும், சிவிகையிலும், ஊர்தியிலும், கால்நடையிலுமாய் அநேக மன்னர், மகுடவர்த்தனர், பட்டவர்த்தனர் முதலியோர் அரண்மனையை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். காரணம் யாதென விசாரிக்கையில் அவ்விராஜ்யத்து அரசனுடைய மகளுக்கு அன்று ஸ்வயம்வரமென்று தெரிந்தது.

ஸ்வயம்வரமென்பது ராஜ கன்னிகைகள் தங்களுக்கேற்ற மணாளனைத் தெரிந்தெடுப்பதற்காக அனுஷ்டிக்கப்பட்ட பிராசீன பகுஸம்மத ஸம்பிரதாயங்களிலொன்று. ஒவ்வொரு மணப்பெண்ணும் தனக்குக் கணவனாய் வரக்கூடியவன் எவ்வாறு இருக்கவேண்டுமென்று ஓர் அபிப்பிராயத்தைப் பெற்றிருப்பாள். சிலர் மெத்தவும் அழகுள்ளவனைத்தான் மணக்க வேண்டுமென்றிருப்பர். சிலர் அழகில்லாவிட்டாலும் கல்வி கேள்விகளையுடையவனாய் மட்டும் இருந்தாற்போதுமென்று திருப்தியடைவர். பின்னுஞ்சிலர் திரவியவந்தனாயிருக்கவேண்டுமென்று விரும்புவர். மற்றுஞ்சிலர் புயபல பராக்ரமத்திற் சிறந்தவனாயிருக்கவேண்டுமென்று கணிசிப்பர். ஆகவே, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு நோக்கமுண்டு. ஸ்வயம்வரம் செய்துகொள்ள விரும்பும் அவ்வனிதையை ஆடையாபரணாதிகளால் அலங்கரித்து, ஒரு பல்லக்கிலேற்றி, அவள் ஊர் பேர் முதலியவற்றைக் கூறி, இன்னார் இன்றையதினம் ஸ்வயம்வரம் செய்துகொள்கிறாள் என்று விளம்பரம் செய்யப்படும். உடனே அருகிலுள்ள ராஜ்யத்து மன்னரனைவரும், தங்களுக்குள்ள கடக கேயூர கவசாதிகளை யணிந்துகொண்டு, தங்கள் வீர சௌர்யப் பிரதாபங்களை விருதுகூறிக்கொண்டு கட்டியக்காரர் முன் செல்ல, தாம் அந்த ஸ்வயம்வர மண்டபத்தை யடைவர். அனைவரும் கூடியபிறகு, கன்னிகையை அவள் தோழியர் மண்டபத்துக்கு இட்டுச் சென்று, அங்கு வந்திருக்கும் ஒவ்வொரு அரசன் முன்னும் நிறுத்தி, அவனுடைய குணாதிகளைத் தமக்குத் தெரிந்தவரை எடுத்துக்கூறுவர். அரச குமாரிக்கு விருப்பமில்லாவிடில் அப்புறம் தன்னையழைத்துச் செல்லுமாறு சைகை செய்வாள். அன்றேல் தன் நோக்கத்துக்கேற்ற மணாளன் கிடைக்கின், தன் கையிலுள்ள ஹாரத்தை அவன் கழுத்திற் போடுவாள். பிறகு அவ்விருவருக்கும் விவாகம் நடைபெறும்.

அன்று ஸ்வயம்வரம் செய்துகொள்ளும் பெண்மணி, அப்பொழுது அந்நாட்டில் அவளுக்கிணையில்லை யென்னும்படி அவ்வளவு அழகுபொருந்தியவள். அதன்றி, அவ்வரசனுக்கு அவள் ஒரே ஸந்ததியானதுபற்றி, அவளை மணப்பவன் அரசனுக்குப் பிறகு அந்த இராஜ்யத்தையடையவும் யோக்யனாகிறான். ஆனால் பெண்ணின் நோக்கமோ நிரம்ப அழகுள்ளவனைத்தான் மணக்க வேண்டுமென்பது. பூதலத்து அரசர்க்குள் தன் மனதிற்கியைந்தவனையும் அவள் கண்டபாடில்லை. இப்படி இவள் ஸ்வயம்வரம்செய்யவாரம்பித்தது இது முதற்றடவையல்ல. இவ்வாறு அநேகந்தடவைஅரசர்கள் வந்து கூடி, ஒரு தடவையாவது அம்மங்கையின் மன நோக்கின்படி மணாளன் கிட்டாமல், அவர்கள் கூடியது வியர்த்தமாய்விட்டது.

ஜோதிர்மயமான நவரத்தினங்களாற் சிங்காரிக்கப்பட்டுள்ள அரியணைமீது உட்கார்ந்த வண்ணம் அரசகுமாரி ஸபைக்கு வந்தாள். அதாவது அவளைச் சேடியர் பல்லக்கிற்றூங்கி

வந்தனர். அருகில் நடந்துவந்த மற்றைச் சேடியருட்சிலர், ஒவ்வொரு அரசனிடமாய் அவளை இட்டுச்சென்று, அன்னவனுடைய வீர, தீர, சூரப்பிரதாபங்களை எடுத்தோத வாரம்பித்தார்கள். அங்கம், வங்கம், களிங்கம், சிம்மளம், நேபாளம் முதலிய ஐம்பத்தாறு தேசத்து மன்னரும் அங்கு கூடியிருந்தனர். ஒருவரிடமாவது அக்கன்னிகையின் நோக்கம் செல்லவேயில்லை. அரசர்களுடைய ஆசையும் நிராசையாய்விட்டது. இத்தத் தடவையும் தாங்கள் கூட்டங் கூடியது வியர்த்தமாய்விடுமோ வென அனைவரும் ஐயுற்றனர்.

இஃதிவ்வாறிருப்ப, மறையவர் குழாத்தின் நடுவில், தபஸே உருவெடுத்து வந்தது போலும் உதிக்கும் பாலஸூர்யன் போலும் பிரகாசிக்கும் ஒரு யௌவன ஸந்யாஸியின்மீது அரசகுமாரியின் கண்ணோக்கம் விழுந்தது. தக்ஷணமே அவள் கரத்தையலங்காரஞ் செய்துகொண்டிருந்த பூமாலை அவர் கழுத்தையலங்காரஞ்செய்தது. ஸந்யாஸிக்கு ஹாரம் கழுத்தில் விழுந்ததும், தூக்கிவாரிப் போட்டது போலிருந்தது. உடனே அவருக்குக் கடுஞ்சினம் உண்டாய்விட்டது. கண்டத்தில் விழுந்த மாலையை வெடுக்கென்றெடுத்தெறிந்துவிட்டு "இதென்ன வெட்கக்கேடு! நான் ஸந்யாஸியல்லவா! கலியாணத்தால் எனக்கு யாது பிரயோஜனம்" என்று முகத்தில் எள்ளுங்கொள்ளும் வெடிக்கக் கூறினர். இதுகேட்ட அரசன் இவர் ஏழையாயிருப்பதாற்ருன் தனது மகளை மணக்கத் தைரியங் கொள்ளவில்லை யென்றெண்ணிக்கொண்டு, அத்துறவியை விளித்து "ஸந்யாஸியே! நீர் ஏழையாயிருக்கிறீரென்று ஐயுறல்வேண்டாம். என் மகளைக்கலியாணஞ் செய்துகொண்டவுடன் என் ராஜ்யத்தில் பாதி உமக்களிக்கப்படும். எனக்குப் பிற்காலம் மிஞ்சிய பாதி ராஜ்யமும் உன்னையே வந்தடைகிறது. ஆகவே நீர் ஏகசக்ராதிபதியாகிவிடுவீர். என் பெண்ணோடு இன்புற்று வாழ்தற்கென்ன ஆலோசனை? வலியவரும் ஸ்ரீதேவியைக் காலாலுதைக்காதேயும்" என வற்புறுத்திக் கூருநிற்கையில் மன்னன் மகள் மறுபடியும் ஹாரத்தை அவர்கழுத்திற்றரித்தாள். துறவிக்குக் கோபம் பன்மடங்காயிற்று. உடனே அவர் அம்மாலையை மறுபடியும் எடுத்தெறிந்துவிட்டு, "என்ன முட்டாள்தனம் இது? எனக்குக் கல்யாணமும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம்" என்று கூறிக்கொண்டு, கூட்டத்தைவிட்டு வெளியே சென்ருர்.

அரசகுமாரியோ அப்பால ஸந்யாஸி மீது ஆற்ருெணுக் காதல் கொண்டவளாய் "அவரையன்றி மற்றெவரையும் நான் அடையேன். அல்லது இறப்பேன்." என்று கூறிக்கொண்டு, எப்படியாவத் அவரைத் திருப்பி யழைத்துவர வேண்டுமென்ற பிடிவாதத்துடனேயே அவரைப் பின்பற்றினுள். நமது விருத்த ஸந்யாஸியும் தன்னுடன் வந்த மன்னனை நோக்க, "அரசனே! நாமும் அவர்களைப் பின்தொடர்வோம்" எனவே இருவருமாக அவர்களைத் தொடர்ந்து சென்றனர். அரசகுமாரியை மணக்கமாட்டேனென்று கூறிவந்த பால ஸந்யாஸியும் வெகு தூரம் நடந்து வந்து, கடைசியில் ஒரு காட்டுக்குள் நுழைந்தார். மன்னன் மகளும், அவரை விடாமலே பின்பற்றிவந்தாள். ஆனுல் அப்பால்ய ஸந்யாஸியோ அக்காட்டின் கொடி வழி முழுதும் நன்ருய் அறிந்தவராதலால் ஒரு சிக்கலான குறுக்கு வழியிற்புகுந்து மான்போற்றுள்ளி மறைந்துவிட்டார். அரசகுமாரி அவரைக் கண்டுபிடிக்க முடியவில்லை. அதற்குள் அந்திப் பொழுதாயிற்று. அவளுக்குச் செய்வது யாதெனத் தோன்ருமல், ஒரு மரத்தடியிலுட்கார்ந்துகொண்டு தேம்பித் தேம்பி யழுவாரம்பித்தாள். உடனே நமது விருத்த ஸந்யாஸியும் அரசனும் அவள் முன்பாகச் சென்று, "பெண்மணி! அழாதே உன்னைக் காட்டினின்றும் விடுவித்து உனது தகப்பனுர் இராஜ்யத்துக்குச் செல்லும் வழியைக் காண்பிக்கிருேம். நீ உன் பிறந்தகஞ் சென்று, அங்கிருந்துகொண்டு உன் மணாளனைத் தேடுதற்குற்ற முயற்சிகளைச் செய்யலாம். ஆனுல் இப்பொழுது அஸ்தமித்துப் போய்விட்டது. இருட்டில் வழி கண்டுபிடிப்பதும் அஸாத்தியம். ஆகவே இதோ ஒரு மரம் தெரிகிறது. அதனடியிற்றங்கிஇரவைக் கழித்தால் பொழுது புலர்ந்தவுடன் புறப்படுச் செல்லலாம்" என்றனர். அந்த வனி

தையும் அதற்கிணங்கவே மூவருமாகச் சென்று மரத்தடியை யடைந்தனர்.

இவர்கள் வந்து தங்கிய மரத்தின் கிளையொன்றில் கூடு கட்டிக்கொண்டு, மூன்று குஞ்சுகளுடன் தன்பேடு ஸஹிதம் ஒரு பக்ஷி வாஸஞ்செய்துகொண்டிருந்தது. இந்தப பக்ஷியானது தனது மரத்தடியில் மூவர் வந்து தங்கியிருப்பதைக்கண்டு தன் மனைவியாகிய மற்றொரு பக்ஷியை நோக்கி, "என் இன்னுயிர்க் காதலி! நாம் இப்பொழுது என்ன செய்யலாம்? நம்முடைய இல்லத்திற்கு இப்பொழுது மூவர் விருந்தினர் வந்திருக்கின்றனரே! அவர்களை நன்கு வரவேற்று உபசரியாமலிருப்பது நம்போன்ற கிருஹஸ்தர்களுக்கழகோ? காலமோ குளிர் காலம். நம்மிடம் நெருப்புமில்லையே" என்றது. சற்று நேரம் என்னென்னவோ சிந்தித்துவிட்டுப் பிறகு எங்கேயோ பறந்து சென்று, எரிகொள்ளி யொன்றை வாயிற் கௌவிக்கொண்டு, திரும்பிவந்து அவர்கள் முன்னிலையில் அதைப் போட்டது. அதிதிகளும் அருகே கிடைத்த சில சுள்ளிகளைச் சேர்த்து ஒன்றுகூட்டி அதில் அந்த எரிகொள்ளியைப் போட்டு ஜ்வாலை யுண்டாக்கித் தங்கள் குளிரைப் போக்கடித்துக் கொண்டனர். ஒரு துன்பம் விலகவே மற்றொன்று தலைகாட்ட வாரம்பித்தது. அதாவது, பசி அவர்கள் வயிற்றைக் கிண்டவாரம்பித்தது. இரவு பத்து நாழிகைக்குமேல் நடுக்காட்டில் ஆகாரத்துக்கு அவர்கள் யாதுசெய்வார்கள்? ஆகவே ஒருவர் முகத்தை யொருவர் பார்த்துக்கொண்டு வீற்றிருக்கையில், மறுபடியும்அந்த ஆண் பறவையானது தன் பேடை நோக்கி, "என் பிரிய ஸகி! இப்பொழுது நாம் யாது செய்யலாம்? வந்த விருந்தினர்க்கு உணவிட்டு உபசரிப்பதன்றோ கிருஹஸ்தர்களின் இலக்ஷணம்! நம்மிடம்உணவு ஒன்றுமில்லையே! அவர்களும்பசியினால்வாடியிருக்கின்றனரே! ஆயினும் என்னாற் கூடியதை நான் செய்துவிடுகிறேன். என் சரீரத்தை இவர்களுக்கு ஸமர்ப்பித்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு உடனே அக்னியில் விழுந்திறந்தது. அதிதிகள் அது விழுவதைக்கண்டு தடுக்க முயன்றனரென்றாலும் அது விழ்ந்த வேகத்தில் இவர்களால் ஒன்றும் செய்யக்கூடவில்லை. உடனே அந்தப் பறவையின் மனைவியானது, "இங்கே மூவர் விருந்தினர் வந்திருக்கின்றனர். அவர்களுக்கு ஒரு பறவையின் உடல் ஆகாரத்துக்கு எப்படிக் காணும்? பர்த்தா ஆரம்பித்த தர்மத்தை நிறைவேற்றவேண்டியது குலமகட்கழகல்லவோ! ஆதலால் அவர்கள் என் சரீரத்தையும் எடுத்துக்கொள்ளட்டும்" என்று கூறிவிட்டுத் தானும் தீயில் விழ்ந்திறந்தது. நடந்ததைக் கவனத்துடன் பார்த்துக்கொண்டிருந்த அதன் மூன்று குஞ்சுகளும், வந்த விருந்தினர்க்கு இட்ட உணவு இன்னும் பற்றாது என்று அறிந்துகொண்டு "நமது பெற்றோர்கள் அதிதிகளை வழிபாடு செய்யும் விஷயத்தில் தங்களால் இயன்றதைச் செய்து தீர்த்தனர். ஆனால் அது போதாது. பெற்றோர்கள் ஆரம்பித்த தர்மத்தை அனுஸரிப்பதன்றோ ஸத்புத்திரர்களுக்கழகு. ஆகவே நமது சரீரங்களையும் அவர்கள் எடுத்துக்கொள்ளட்டும்." என்று மொழிந்துவிட்டு, அவைகளும் நெருப்பில் விழ்ந்து உயிர் துறந்தன. ஒன்றன் பின்னொன்றாக நேரும் இக்கோரஸம்பவத்தைத் திக்பிரமை கொண்டவர்கள்போல் பார்த்துக்கொண்டிருந்த அம்மூவரும் அப்பக்ஷிகளுக்காகச் சாலவும் வருத்தப்பட்டு, அன்றிரவு ஒன்றையும் உண்ணாமல் பித்துப் பிடித்தவர்போல் ஒருவர் முகத்தை யொருவர் நோக்கியவண்ணம் வீற்றிருந்தனர்.

மறுநாள் பொழுதும் புலர்ந்தது. அரசனும் ஸந்யாஸியும் ராஜகன்னிகையின் தகப்பனார் ராஜ்யத்துக்குப் போகும் மார்க்கத்தைக் கண்டுபிடித்து, அவ்வழியே அவனை யனுப்பிவிட்டனர். பிறகு ஸந்யாஸி அரசனை நோக்கிப் பின்வருமாறு கூறினார்:— "வேந்தே! ஒவ்வொருவனும் தன் தன் ஸ்தானத்தில் உயர்ந்தவனெனக் கண்டுகொண்டாயா? நீ கிருஹஸ்தாச்ரமத்தைத் தழுவ விரும்பினாயேயானால் இப்பறவைகள் போலிரு. எந்த ஸமயத்திலும் மற்றவரைத் திருப்தி செய்யும்பொருட்டு ஆத்ம பரித்யாகம் செய்யப் பின்னடையாதே. கிருஹஸ்தாச்ரமம் என்னும் அகராதியில் சுயநலம் என்னும் பதமேயில்லை. அன்றி, துறவறம் கைக்கொள்ள விரும்பி

னையேயானால், நாம் நேற்றுக் கண்ட பால ஸந்யாஸி போலிரு. அவருக்கு அழகிய மடந்தையும், அகன்ற ராஜ்யமும், சிருஞ் செல்வமும் திரணமெனத் தோன்றிற்றல்லவா? சுருங்கச் சொல்லுங்கால், கிருஹஸ்தனாயிருக்க வேண்டின், மற்றோர் நன்மைக்காக உன் உயிரையும் பொருட்படுத்தாதே. துறவியாயிருக்க விரும்பின் அழகையாவது, பணத்தையாவது செல்வாக்கையாவது கணிசியாதே! ஸர்வஸங்க பரித்யாகம் செய்துகொள். அவ்வாறு செய்யும் ஒவ்வொருவனும் தன் தன் ஸ்தானத்தில் உயர்ந்தவனே. ஆனால் ஒருவனுக்கு விதித்த தர்மம் மற்றவனுக்குப் பயன்படாது."

இவ்வுபதேசத்தை மிகுந்த வணக்கத்துடன் கேட்டுக்கொண்டிருந்த மன்னவனுக்கு ஓர் ஸந்தேக நிகழ்ச்சியுண்டாயிற்று. உடனே யதீச்வரரை நோக்கி, "பிரபோ! தாங்கள் உபதேசித்த தர்மத்தை இக்கலியுகத்தில் எல்லாக்கிருஹஸ்தர்களும் யதிகளும்ஸரிவர அனுஷ்டிக்கின்றனரா?" என்று வினவினான். அதற்குப் பதில் வரவில்லை. உடனே துறவிநின்றவிடத்தை நிமிர்ந்துநோக்கினான்; அங்கு துறவியைக் காணவில்லை. ஆனால் ஒரு ஜோதிமட்டும் தோன்றி மறைந்தது.

G. ரகுநாதாசாரி.

---

சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம். எல்லாம் முயற்சியின்பயன் தான். முயற்சி திருவினை ஆக்கும். முயற்சியின்மை இன்மை புகுத்திவிடும். முடியாத காரியம் ஒன்றுமில்லை. காரியங்களைக் கைக்கொண்டால், பின் எண்ணுவோம் என்பது இழுக்கு. பிறரால் செய்ய முடியாத காரியத்தைக் கையெடுத்து முடிப்பதே காரியத்திற்கழகு. தாயுமானவரும், "இல்லாத காரியத்தை யிச்சித்துச் சிந்தை வழி, சொல்லாமை நல்லோர் திறங்காண் பராபரமே" எனவே கூறியுள்ளார். அதனால் வைராக்யத்தைப் பெற்று, மனத்தை அடக்கி நமது தருமத்தை நாம் நடத்துவதே நமது கடனாகும். அவ்வாறு செய்வதற்குச் சலிக்காத மனோநிலையைப் பெறக் கடவுள் நம்மை அனுக்ரஹிப்பாராக!

## ஐரோப்பாவும், உளவறிதலும்

## EUROPE AND ITS SYSTEMS OF ESPIONAGE

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு
மெஃகதனிற் கூரியதில்.
பொருளல்லவரைப் பொருளாகச்செய்யும்
பொருளல்லதில்லைபொருள்.

சாஸ்திர ஆராய்ச்சி மேன்மேலும் அதிக விருத்தியடைந்ததினாலே, பெருத்த ராஜாங்கங்களில் நூதனமாகப் பலவகைப்பட்ட யந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஜனங்களின் சௌகரியத்துக்கேற்பப் பல விதத்திலும் கையாளப்பட்டு வந்தன. மோடார் வண்டிகள், டிரெட்நாட் என்னும் பெரிய நீராவிக் கப்பல்கள், சப்மெரின் என்னும் நீரின் கீழ் மூழ்கிச் செல்லுங்கப்பல்கள், ஆகாய விமானங்கள், ஆகாயக் கப்பல்கள் ஆகிய நூதன சாதனங்கள், ஜனங்களின் போக்கு வரவுக்கும், ராஜாங்கங்களின் பலத்துக்கும்அனுகுணமாக நடவடிக்கைகள் நடத்தவும் ஏற்பட்டன. இவைகளன்றியும் சேனைகளுக்குப் பலத்தைக்கொடுக்கக் கம்பியில்லாத் தந்திக்கருவிகளும்,மெஷீன் பீரங்கிகளும்,பெரிய 'ஹவிட்ஜர்' பீரங்கிகளும், நவீன வெடிமருந்துகளும் உண்டாக்கப்பட்டன. சாஸ்திர ஆராய்ச்சியின் பலனாகக் கைத்தொழிற்சாலைகள் நூதன யந்திர சாதனங்கள் அமைக்கப்பெற்று மகோன்னத பதவியடைந்தன.

இதற்கிணங்கி ஒவ்வொருதேசத்தின் வியாபாரமும் விருத்தியாகி ஐரோப்பாக் கண்டத்தின் 'பொருள் விற்பனைசாலை' யென்று சொல்லப்படும் ஆசியா, ஆப்பிரிக்கா முதலிய கண்டங்களில் பலவிதமான கைத்தொழிற் சாமான்கள் விற்பனையாயின. இவ்விதமாக விற்பனை செய்வதில் ராஜாங்கங்களுக்குள் போட்டியேற்படுவது ஸகஜம். ஆகவே, வியாபாரச் சுதந்தரங்களைப்பற்றி மனஸ்தாபமும், கைத்தொழிலபிவிர்த்தியைப் பற்றிப் பொறாமையும் ஐரோப்பிய ராஜாங்கங்களுக்குள் ஏற்பட்டன. இவைகளில் ஜெர்மனியும் இங்கிலாந்துமே முக்கியம்.

ஜெர்மனிக்குக் குடியேற்ற நாடுகள் மிகவும் கொஞ்சம். இருபது வருஷங்களாக ஜெர்மனி தேசத்தில் ஜனத்தொகையும் அதிகப்பட்டுக்கொண்டே வந்தது. ஜனசங்கியை

அதிகப்படவே பலர்க்குத் தொழில் ஒன்றும் ஏற்படாது போயிற்று. இதனால் ஜெர்மானியர் தங்கள் சொந்த தேசத்தை விட்டு வெளிக்கிளம்பி வேறு ராஜாங்கங்களுக்குக் கீழ்ப்பட்ட தேசங்களில் கைத்தொழிலோ, வியாபாரமோ அல்லது மற்றெந்தத் தொழிலோ செய்யும்படியாயிற்று. ஆகையினால் இந்த இருபது வருஷமாக உலகமெங்கும் ஜெர்மானியர் பரவிவிட்டனர். ஜெர்மானியர் சாஸ்திர ஆராய்ச்சியிற் சிறந்தவர்களாகையால் அவர்கள் வியாபாரத்திலும் கைத்தொழிலிலும் மேன்மேலும் அபிவிருத்தியடைந்து தங்கள் சரக்குகளை உலகமெங்கும் பரவச்செய்தனர். நமமிந்தியாவிலுங்கூட ஜெர்மன் சரக்குகள் மிகுதிப்பட்டன. இந்தியக் கைத்தொழில் அபிவிருத்தியடையாததற்கு இதுவும் ஒரு காரணமாயிற்று. ஜெர்மானியர் தங்கள் வியாபாரத்தை அதிகப்படுத்தப் பல தந்திரங்களையும் வழிகளையும் உபயோகித்திருக்கிறார்கள். மேற்சொன்ன காரணங்களால் ஜெர்மனி, தேசங்களைத் தன் வசப்படுத்தவெண்ணி, அதற்கு அனுகுணமாகத் தரைப்படை, கடற்படை முதலியவைகளைப் பலவருஷங்களாகப் பலப்படுத்திக்கொண்டே வந்தது.

ஐரோப்பாவானது, யுத்தம் தொடங்குவதற்கு முன்னமேயே பெரிய சேனைகளின் பாசறைபோல விருந்தது. உடன்படிக்கைகளிருந்தபோதிலும், ராஜாங்கங்களில் ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் பரஸ்பர ஸம்சயமும் அவநம்பிக்கையும் பயமும் இருந்துகொண்டிருந்தது. இதனால் ஜெர்மனி, இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷ்யா முதலிய ராஜ்யங்கள் யுத்த சன்னத்த தளவாடங்களிலும் கப்பற்படைகளிலும் கோடிக்கணக்கான திரவியம் செலவிடவேண்டியதாயிற்று. ஜெர்மனி ஒரு போர்க்கப்பல் கட்டினால் இங்கிலாந்து இரண்டு கட்டியது; பிரான்ஸ் தன் சேனைக்கு 10 படை வகுப்புகள் சேர்த்தால், ஜெர்மனி 20 சேர்த்தது. இவ்வண்ணம் ஒன்று மற்றொன்றைவிட பலங்கொண்டு, முன் செல்லப் பிரயத்தனம் செய்தது. ஆகவே ஒரு ராஜாங்கம் மற்றொன்றின் நடவடிக்கைகளைக் கண்கொட்டாமல் ஜாக்கிரதையாகக் கவனிக்கவேண்டி வந்தது.

இவ்வாறு கவனித்து ரகஸ்யங்களைக் கண்டுபிடிப்பது ராஜாங்கங்களின் தூதர்களாலும் பிரதிநிதிகளாலும் முடியாத காரியம். உத்தியோக முறையிலே வேறு ராஜாங்க விஷயங்களை அறிவதற்கு முன்னமேயே, அம்முறையில் அரைகுறையாக அறிவதைக்காட்டிலும் விஷயங்களின் முழு உண்மையை வேறு வழிகளில் ஆய்ந்தறிவது ஒவ்வொரு ராஜாங்கத்துக்கும் அவசியமாகிறபடியால், உளவாளிகளின் உதவி இன்றியமையாததாகின்றது. மேலும் தூதர்களும் பிரதிநிதிகளும் எல்லாரும் அறிந்த அதிகாரிகளாயிருப்பதினால் ஒருவரும் அவர்களிடத்தில் உண்மையைச் சொல்லார்கள். தூதர்களின் அதிகார நீதியும் வரம்பும் அவர்கள் உளவாளிகளின் தொழிலை மேற்கொள்வதற்கு விரோதமாயிருக்கின்றன. இன்னும் சாதாரண ஜனங்களுடன் கலந்து பழகி அவர்களின் அபிப்பிராயம், நோக்கம் காரியங்கள் முதலியவைகளின் உண்மையை அறிதல் தூதர்களால் இயலாது. இவ்விஷயத்தை அறிந்துகொண்டே ஒவ்வொரு ராஜாங்கத்தாரும் பிரத்யேகமான உளவறியும் இலாகாவை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இப்படி உளவாளிகளை, ஒவ்வொரு ராஜாங்கத்தாரும் தங்கள் தேசப் பாதுகாப்புக்காகவும், வேறு ராஜாங்கங்கள் தங்களைவிட பலமடையாவண்ணம் சூழ்ச்சிகள் செய்வதற்காகவும் ஏவித், தங்களுக்கிணங்கியுதவிபுரிவதற்குத் தகுந்த ராஜாங்கங்களோடு பரஸ்பர சம்பந்தங்களும் உடன்படிக்கைகளும் செய்துகொண்டும், தங்கள் பலம் எப்பொழுதும் எதிரியின் பலத்துக்குச் சமமாகவோ அல்லது அதற்கும் உயர்வாகவோ இருக்க உபாயம் பண்ணுகிறார்கள். வல்லரசுகளான இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ஆஸ்டிரியா, ருஷியா முதலியவைகள், சிற்றரசுகளான இடலி, துருக்கி, பால்கன் நாடுகள், க்ரீஸ், பெல்ஜியம் முதலியவைகளின் விவகாரங்களில் எப்பொழுதும் தலையிட்டுக்கொண்டே வந்திருக்கின்றன. இச்சிற்றரசுகளின் நாடுகளெல்லாம் யுத்த தந்திரத்துக்குரிய சௌகரியங்கள் நிரம்பியுள்ளன. மற்றும் வல்லரசுகளுக்குள் யுத்த காலங்களில் இச்சிற்றரசுகளின் உதவி முக்

கியமாகும். எப்படியெனில், அந்நாடுகளின் வழியாக போக்குவரவுக்கும், ஆகார தளவாட சாமான்கள் சேனைகளுக்கும் போர் முனைக்கும் அனுப்புவதற்கும், அவைகளின் மூலமாக யுத்த காலங்களில் பகைவர் தேசங்களுடனும் வேறு தேசங்களுடனும் வியாபாரம் செய்து, வேண்டிய சாமான்களைத் தந்திரமாகப் பெற்றுக்கொள்வதற்கும் செளகரியங்கள் ஏராளமாக உண்டு. வல்லரசு ஒன்றின் பக்கத்திலுள்ள ஒரு சிற்றரசு, யுத்தத்தில் இறங்காமல் ஒதுங்கி நின்றால், அதனால் அவ்வல்லரசுக்கு உண்டாகும் பிரயோஜனம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்லமுடியாது. இவ்விஷயங்களெல்லாம் இப்பொழுது நடைபெறும் மஹா யுத்தத்தினால் தெளிவாக விளங்குகின்றன.

மேற்கூறிய பலன்களை உத்தேசித்தும், கைத்தொழில் அபிவிர்த்தியைப் பற்றிய பொறாமையினாலும், வியபார சுதந்தரங்களைப்பற்றிய மனஸ்தாபத்தினாலும், வல்லரசுகள் இரு கக்ஷிகளாகப் பிரிந்து ஒவ்வொரு வல்லரசும் தன் நேச வல்லரசுடன் உடன்படிக்கை செய்துகொண்டிருக்கிறது. இங்ஙனம் இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷியா ஆகிய மூன்று வல்லரசுகளும் ஒரு கக்ஷியாகவும், ஜெர்மனி, ஆஸ்ட்ரியா, இடலி இம்மூன்றும் மற்றொரு கக்ஷியாகவும் தனித்தனியே உடன்படிக்கைகள் செய்து கொண்டிருந்திருக்கின்றன. மேலேசொல்லிய சிற்றரசுகளில் சில பகிரங்கமாகவும், சில ரகஸ்யமாகவும் ஏதாவதொரு கக்ஷியில் சேர்ந்தும், மற்றுஞ்சில இரண்டு கக்ஷிகளிலும் சேராமல் ஒதுங்கிநின்றும் வந்திருக்கின்றன. ஐரோப்பாவின் ‘யுத்தகளம்’ என்று சொல்லப்படுகிற பெல்ஜியத்தின் நடுநிலைமையைப் பாதுகாப்பதாக இங்கிலாந்து, பிரான்ஸ், ருஷியா முதலிய ராஜாங்கங்கள் உறுதிமொழி கொடுத்திருந்தன. ஜாதிய ஒற்றுமையினால் ஸெர்வியா என்னும் சிற்றரசு ருஷியாவினிடம் இயல்பாக மனப்பிடித்தம் கொண்டிருந்தது. இவ்வாறு பால்கன் நாடுகளைச் சேர்ந்தவைகளில் மற்றச் சிற்றரசுகளிலும் மனச்சார்பு இருந்துகொண்டே வந்தது.

பால்கன் நாடுகள் ஐரோப்பாவின் சமாதானத்துக்குத் ‘திறவுகோல்’ என்று சொல்லப்படும். ருஷிய ஜப்பானிய யுத்தத்தின் பிறகு ருஷியாவின் கெளரவமும் செல்வாக்கும் ஐரோப்பிய நடவடிக்கைகளில் குறைய ஆரம்பித்தது. இந்தச் சமயத்தில் ஜெர்மனியின் ரகஸ்ய ஆதரவினாலும் பரஸ்பர இணக்கத்தினாலும் ஆஸ்ட்ரியாவானது பால்கன் நாடுகளில் உள்ள ஹேர்ஜகாவினா, பாஸ்னியா என்னும் இரண்டு நாடுகளையும் தன் தேசத்துடன் சேர்த்துக்கொண்டது. ஆகையினால் ருஷியா, தான் இழந்துபோன செல்வாக்கை மீண்டும் அடையவெண்ணி ராஜதந்திரங்கள் செய்ய நேரிட்டது. நம் இந்தியாவிலிருப்பதுபோல, பால்கன் நாடுகளில் ஜாதி வர்ண பேதங்கள் அளவிறந்தன. ஆகவே, அந்நாடுகளில் பெரும்பாலனவற்றைவிசேஷ யூகம் யுக்தி முதலியவைகளைத் தன் செல்வாக்கின் கீழ்க் கொண்டுவந்து தன்வழிப்படுத்த அதிக சிரமமும், மிகுந்த பணச்செலவும் ருஷியாவுக்கு உண்டாயிற்று. ஒன்றுக்கொன்று விரோதமாயிருந்த சிற்றரசுகளெல்லாம் ருஷியாவின் விசேஷ ராஜதந்திரத்தினால் பரஸ்பர அன்னியோன்யமுள்ளவைகளாயின. இந்நாடுகளில் சில, தங்கள் தேசவிஸ்தீர்ணத்துக்கும் வருமானத்துக்கும் மீறிச் செலவுசெய்து தங்கள் சைன்யங்களை ஒழுங்குபடுத்தி, முன்னிலும்பலமடங்குஅதிகமாகப் பலப்படுத்தின. இச்சிற்றரசர்களுக்கு இவ்வளவு திரவியம் எங்கிருந்து வந்தது?

ருஷியாவின் செல்வாக்குக்குட்பட்ட ஸெர்வியா, பல்கேரியா ஆகிய இரண்டும் துருக்கிக்கு மிகுந்த விரோதிகளாயிருந்தன. ஆகையினாலே ஜெர்மனியானது, ஸெர்விய, பல்கேரிய ராஜாங்கங்களில் பல ருஷிய, பிரெஞ்சு உத்தியோகஸ்தர்கள் வேலைக்கமர்ந்து பிரஞ்சுக்காரரால் நவீனமாகக் கண்டுபிடிக்கப்பட்ட பீரங்கிகளுடன் சைன்யங்களைப் பலப்படுத்தியிருப்பதைத் தன் உளவாளிகளால் சூக்ஷ்மமாக அறிந்து, இவ்விரண்டு சிற்றரசுகளும் பலமடைந்திருப்பது ருஷிய, பிரெஞ்சு திரவிய பலத்தினாலே தான் என்று நிச்சயித்துத், துருக்கிய ருமேனிய ராஜாங்கங்களைத் தன் வசப்படுத்தத் தொடங்கிற்று. இந்தச்சமயத்தில் ஜெர்மனிக்கும் இங்கிலாந்துக்கும் ஜெர்மன் சக்ரவர்த்தியின் அபாரமான ராஜதந்திரங்களினால் சிநேக

பாவமேற்பட்டிருந்தபடியால் இவ்விஷயத்தில் இங்கிலாந்துதலையிடவில்லை. ருமேனியா ராஜகுடும்பம் ஜெர்மன் ராஜகுடும்பத்துக்குச் சொந்தமானதால் அது சீக்கிரம் அதன் ராஜதந்திரத்துக்குள் அடங்கியது. பாலஸ்தீன் என்னும் கிறிஸ்தவப் புண்ய பூமிக்கு ஜெர்மன் சக்கிரவர்த்தியும் சக்கரவர்த்தினியும் யாத்திரை போனபொழுது, துருக்கிய சுல்தானே அச்சக்ரவர்த்தி சந்தித்தார். துருக்கிய சுல்தான் அவரை நல்வரவேற்று அவரோடு சிநேகபாவங்கொண்டார். இது ராஜதந்திரத்தினாலும், உளவாளிகளின் உதவியினாலுமே ஏற்பட்டது. இது முதல், துருக்கி ராஜாங்கம் ஜெர்மனியிடமிருந்துஏராளமானபீரங்கி முதலியவற்றை விலைக்கு வாங்கியும், ஜெர்மன் உத்தியோகஸ்தர்களைத்தன் சேனையில் அமர்த்தித் தன்போர்வீரர்களுக்கு யுத்தாப்பியாசம் செய்வித்தும், ஜெர்மன் சாமான்களையே அதிகமாக வாங்கி அதனுடன் வியாபாரஞ்செய்தும், இன்னும் பல வழிகளில் அதனிடம் கொண்ட தன் பரஸ்பரஸ்நேகபாவத்தை அபிவிர்த்தி செய்துகொண்டது. ஜெர்மனியினுதவியினல்தான் தேச கலகம் ஏற்பட்டு, அதன்முடிவாகத்துருக்கியில்ஜெர்மனியின் செல்வாக்குக்குட்பட்ட "யங் டர்க்" என்னும் கக்ஷியார் அதிகாரத்துக்கு வந்தார்கள். ஜெர்மனிதேசத்துக்குச்சென்றுஅங்கே படித்து விசேஷப்பயிற்சி பெற்றவர்களே யுயர்ந்த அதிகாரம் வகித்திருக்கிறார்களாகையால் துருக்கியில் ஜெர்மனியின் செல்வாக்கும் அதிகாரமும் தற்காலமோங்கியிருக்கிறது.

இப்படி ஜெர்மனி ருஷியா, பிரான்ஸ் ஆகிய இந்தத் தேசங்களின் செல்வாக்கைப் பால்கன் நாடுகளில் அழித்து, தன் அதிகாரத்தைத் தந்திரமாக அபிவிர்த்தி செய்து, இப்பொழுது நடந்துவரும் யுத்தத்தில் ருஷ்யாவின் போக்குவரவு யுத்ததளவாட சேகரம் ஆகிய இவைகளைத் தடைப்படுத்தி, ஆகார சாமான்களை வெளிதேசங்களுக்கு அனுப்பவழியில்லாமலும் செய்திருப்பது,துருக்கிக்குச் சொந்தமான டார்டனல்ஸ் ஜலசந்தியின் யுத்ததந்திர சௌகரியங்களைத் தவிர, சாமர்த்தியமாக உளவறியும் ராஜாங்க இலாகாவின்பெருமையாலன்றோ?

## சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S AND LADIES' PAGES

### மூன்று சகோதரர்கள்

முற்காலத்தில் ஒரு குடியானவன் இருந்தான். மிகவும் தரித்திரனாக விருந்தபோதிலும் படிப்பில் அவன் சிறந்து விளங்கினான். அவனுக்கு மூன்று பிள்ளைகள். அவனுக்குவரவர,வயது அதிகமாகத்தள்ளாமை மேலிட்டது. அப்படியிருக்கு நாளில் ஒரு நாள், தன் பிள்ளைகளைத் தன்னிடம் வரவழைத்து மூத்தவனுக்கு ஒரு கோழியும், இளையவனுக்கு ஒரு பூனையும், மற்றவனுக்கு ஒரு அரிவாளும் கொடுத்தான். மேலும் அவர்களைப்பார்த்து, "என் அருமைக் குழந்தைகளே! இப்பொழுது நான் மிகவும் தள்ளாதவனாகி விட்டேன். சில நாள்களில் நான் இறந்துவிடுவேன். அப்போது, உங்களைக் காப்பாற்றவும், உங்களுக்குவேண்டிய புத்திமதிகள் சொல்லவும் வேறொருவரும் இல்லை. என் கையிலும் காசு கிடையாது. பணமற்றவன், பிணமல்லவா? இல்லாதவன் எதுக்கு உபயோகம்? ஆகையால், நான் இப்போது உங்களுக்குக் கொடுக்கும் பொருளோ மிகவும் சொற்பமானது. ஆனாலும், அவற்றை அற்பமாக வெண்ணாமல், புத்தியும் சாமர்த்தியமுங்கொண்டு, நான் தந்த பொருளை அவை இல்லாத தேசத்துக்குக்கொண்டுபோய்த், தகுந்தபடிஉபயோகிப்பீர்களானால், உங்களுக்கு க்ஷேமமே உண்டாகும். இதுதான் அந்திய காலத்தில் நான் உமக்குக் கூறும் உபதேசமாகும். உமது புத்தியைக்கொண்டு, நீங்கள் விருத்தியடைந்து 'சுகமாக வாழவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கின்றேன்" என்று சொன்னான்.

சில நாள்களுக்குள், கிழவன் இறந்தான். பின், அவனுடைய மூத்தமகன், 'தந்தை சொல் மிக்க மந்திரமில்லை' என்னும் ஔவை முதுமொழிக்கிணங்கத்தன் தந்தைகொடுத்த கோழியைக்கொண்டு, பொருள் சேகரிக்கவெண்ணி, யாத்திரை புறப்பட்டான். எங்குசென்றாலும், எவ்வளவு தூரம்போனாலும், கோழியைமதிப்பவரை அவனால் காண முடியவில்லை. அவன் சென்ற விடமெல்

லாம், கோழிகள் ஏராளமாக உலாவி வந்தன. பெரிய பட்டணங்களில், சேவலிடும் சப்தம் அவ்வூரில் நுழைவதற்கு முன்பே அவன் காதைத்துளைக்கும். என்ன துரதிருஷ்டம்! ஆயினும், அவன் ஊக்கம் அழியாமல் பலவிடங்களையும் நாடிச் செல்லலானான். அவ்வாறு செல்லுங்காலத்து, திமிரத்வீபம் என்னும் ஒரு புதிய தீவையடைந்தான். அத்திவாருக்குக் கோழியென்பது இன்னதென்றே தெரியாது. அது ஒரு மிருகமென்றாலும் நம்பக்கூடியவர். அவ்வளவோடு மாத்திரம் இல்லை. இரவும், பகலும் உள்ளபொழுதை அளந்தறிய ஒருவகையும் அவருக்குத் தெரியாது. சூர்யன் உதயமானால் காலையென்றும், அஸ்தமித்தால் மாலையென்றும் மட்டும் அவருக்குத் தெரியும். இரவிலோ, காலத்தைப் பகுத்துணர அவருக்கு வழியே தெரியாது. அவ்விடம் சென்றதும், குடியானவன் மகன், ஜனங்களையெல்லாம் கூட்டிக் கீழ்வருமாறு உற்சாகத்துடன் பேசினான்:— "திமிரத்வீபவாஸிகளே! இதோஎன்னிடம் இருப்பதுசேவல்; இது காலத்தைக் காவல் செய்யும். இதை எப்படிப்பட்ட பறவை யென்று பார்த்தீர்களா? பொழுதை யளக்கும் பக்ஷி ஐயா இது. கால வட்டத்தைபற்றி யிழுத்துக் கூவிப் பொழுதை வெளியிடும் குக்குடமிதுதான். சூர்யன் வரவை ஆவலுடன் எச்சரித்துக் கட்டியம்பேசும் பெருமை இதற்கே உள்ளது. இதனுடைய ஞானத்தைக் காட்டவே கடவுள் அதன் தலையில் முடித்த கிரீடம் என்ன செம்மையாக விளங்குகிறது பாரும்! நன்றாகக் கவனித்துப் பூரும்: பகற்பொழுதை மூன்றாகப் பங்கிட்டுப் பேசும். அது பேசுவதெல்லாம் காலக் கணக்குத்தான். இரவிலும் அப்படியேதான். அதன் ஜாக்ரதை உங்களுக்கேது? அதற்குத் தூக்கமென்பதே கிடையாது. இது தூங்குமூஞ்சிப் பறவையல்ல. நீங்கள் மெய்மறந்து வாய்ப்பிளந்து தூங்கினாலும், இது தூங்காமல், நியதியாக மூன்றுவேளை கூவும். மூன்றாவதுதரம், கூவி விட்டாலோ, விடியற்காலம் சமீபித்ததென்று யாவரும் அறிய வேண்டும். பகலில் கூவுவதினாலும் அப்போது அத்தனை நாழிகையாயிற்றென்றறியலாம். இப்பறவையின் பெருமையை யான் என்னவென்று புகழ்வேன்?"

குடியானவன் மொழிகளைக்கேட்ட அத்வீபத்து ஜனங்கள் மிகச் சந்தோஷத்துடன் அன்றிரவு முழுதும் கோழி கூவுவதைக்கேட்கவென்று அதிக ஆவலுடன் கண்கொட்டாது விழித்துக்கொண்டிருந்தனர். அக்கோழி அன்றிரவு இரண்டாம் ஜாமத்திலும், மூன்றாம் ஜாமத்திலும் விடியற்காலத்திலுமாக மூன்றுமுறை கூவிற்று. அதைக்கேட்டவர்கள் அப்பறவையை விலைக்குக் கொடுப்பீராவெனவும், கொடுத்தால் என்ன விலையெனவும் கேட்டார்கள். சொந்தக்காரன் ஒட்டகை தூக்கக்கூடிய அளவு பொன் கொடுத்தால் தனது காலமளந்துபேசும் கடிகாரப் பறவையைக் கொடுத்துப் பிரியப் பிரியப்பட்டான். வெகு சந்தோஷத்துடன் அவர் ஒப்புக்கொண்டு அச்சேவலைப் பெற்றனர். கோழிக்காரனும் சந்தோஷத்துடன் விட்டுக்குத் திரும்பினான்.

தன் அண்ணன் கொண்டுவந்த பணக்குவியல்களைக்கண்டு அவன் தம்பிகளுக்குண்டான ஆச்சர்யத்திற்கு அளவேயில்லை. அண்ணனுடைய அதிர்ஷ்டத்தினால் தூண்டப்பட்டு இரண்டாவது குமாரன் தன் அரிவாளை எடுத்துக்கொண்டுதிரவியந்தேடத் தன் உடன்பிறந்தவர்களிடமிருந்து செலவுபெற்றுப் புறப்பட்டான். அவ்வரிவாளைச்சீந்துவாரற்று அனேக நாடுகள் கடந்து கடைசியாக ஒரு தேசத்திற்குச் சென்றான். அந்த நாட்டாருக்கு அரிவாள் என்று ஒன்றிருப்பதாகவே தெரியாது. அதன் உபயோகம் அவர்க்கு எப்படித் தெரியும்? அந்நாட்டில் தானியங்களை அறுவடைசெய்ய வகையே தெரியாது. நெற்கதிர்களைப் பறித்தோ அல்லது பிசைந்தோதான் நெல்லை எடுப்பது வழக்கம்; அல்லது கதிர்களையெல்லாம் தாளோடுகொண்டு வந்து தாள்களை நெருப்பிட்டுக் கொளுத்தியாவது அல்லது மாடுகளைவிட்டு மேய்த்தாவது தான் கதிர்களை அவர்களால் சேகரிக்க முடியும். அவ்வாறல்லாமல், தாளோடு அறுத்துக் கட்டிக்கொண்டுபோய் களத்தில்போட்டு அரியடித்துத் தான்யம்சேர்ப்பதென்பது ஒரு காலத்திலும் அவர் செய்ததில்லை. இவ்வாறு செய்யாமையினால் தான்

யங்கள் அநேகமாய்ச் சேதமாய்க் கொண்டிருந்தன அதைப்பற்றிக் குடிகளெல்லாம் கூக்குரலிட்டுக் கொண்டிருந்தார்கள். அந்தச் சமயத்தில் நமது அரிவாள் வீரன் அங்கு சென்று தனது ஆயுதத்தைச் சரேலென எடுத்துத் தரையில்திட்டிப்,பிறகு ஒரு தாள் கூட வீண்போகாதபடி சாவதானமாய் அறுப்பறுத்துக் கட்டிக்கொடுத்துத் தன் ஆயுதத்தின் பெருமையைச் சொல்லாமலே விளக்கினான். அதைக்கண்ட அங்கிருந்தவரெல்லோரும் மூக்கின்மேல் விரல்வைத்து அதிசயமுற்று "எது கேட்டாலும் கொடுப்போம்; எதைச் சொன்னாலும் செய்வோம்; அரிவாளை எங்களுக்கு அவசியம் தாரும்; என்ன விலைகேட்டாலும் கொடுக்கத் தடையில்லை" என வாய்விட்டுக் கேட்டார்கள். குதிரை சுமக்கத்தக்க அவ்வளவு பொன் குவியலுக்கு அரிவாளைக் கொடுக்க ஒப்புக்கொண்டு, அந்தவிதமே பெற்று, அரிவாளை விற்றுக் குடியானவன் மகன் தனது சொந்த ஊரை நாடி நடக்கலானான்.

வீட்டை யடைந்ததும், மூன்றாவது குமாரன் தன் முன்னவர் இருவரும் அளவற்ற பொருள் தேடிவந்ததைக் கண்டு, சந்தோஷங்கொண்டு அவ்விதமாய்த் தானும் தன் அதிர்ஷ்டத்தைப் பார்த்து வரவெண்ணி, தன் பூனையோடு தேசயாத்திரை புறப்பட்டான். ஆனால் அவன் போனவிடத்தில் எங்கும் பூனையைக் கண்ணெடுத்துப் பார்ப்பாரும் கிடையாது. ஆனாலும் போனவிடமெல்லாம், பூனைகள் அளவுக்கு மிஞ்சிக் கிடைப்பதைக் கண்டும் தான் கொண்ட உத்சாகத்தை விடாது நெடுந் தூரம் நடந்தான். சிகரிநகரி யெனும் ஊரை யடைந்ததும், அவனுக்குண்டான ஆநந்தத்திற் களவேயில்லை. அங்கு எலிகள் அளவுகிடந்து விளையாடுவதைத் தடுக்க முடியாது. ஜனங்கள் திண்டாடிய நிலையைக் கண்டதும் இவனுடைய மனத்தில் வரவர ஆநந்தம் அதிகமாகிக் கொண்டேயிருந்தது. பேரெலிகளும், சிற்றெலிகளும், படுக்கையிலும் பரணையிலும் கூடிக் கூத்தாடும். மயிரடர்ந்த எலிகள் மகளிரை முத்தமிட ஓடும். மீசைமுறுக்கிக்கொண்டு வெள்ளை எலிகள் வெண்ணெய் திருடி உண்டு, கிச்கிச்சென்று உலாவும். மற்றும், ஸ்வயம்பாகங்களில், தாமாகவே ஸ்வயம்பாகம் கொள்ளச் சிற்றெலிகள் கூட்டங் கொண்டோடும். அன்னமிட்ட கலங்களில் அன்னத்தை யள்ளி, வேறு சில இலைகளில் சூறையிடும். வேறு சில எலிகள் தொட்டிலி லழும் குழந்தைகளுக்கு அருகிலுட்கார்ந்து, கிள்ளைமொழி படிக்கும். இவ்வாறு எலிகள் சுதந்திரம் பாராட்டித்,தம்மையாள்வாரற்று, ஜனங்களுக்குச் செய்த தொந்தரைக் களவேயில்லை. அந்நகரத்தரசன், மஹாவீரனாயிருந்தும்,இவ்வெலிகளை அடக்க முடியாத வெண்ணெய் வெட்டிச் சிப்பாயாக விருந்தான். அவன் வீட்டிற்கே நமது குடியானவன் குமாரன் ஆர்ப்பாடம் செய்துகொண்டு அதிதியாகச் சென்றான். அவன் பக்கத்தில் மார்ஜால ராயர் மரியாதையாய் உட்கார்ந்திருந்தார். இலையிட்டு அன்னமிட்டதும் ஆகுமூர்த்திகள் ஆர்ப்பாடத்துடன் அதட்டிக்கொண்டு வந்தன. ஜாடராக்னி நிறைந்த மார்ஜால ராயர் ஐந்து ஆகுமூர்த்தியை அப்படியே கௌவினார். அப்பெருஞ்செயலைக் கண்ட அந்நகரத்தரசர் 'அப்பாடா'யென்று நெடு மூச்சுவிட்டார். பாழான எலிகட்குப் பகையாக வந்த பூனையை எவ்வளவு பணம் கேட்பினும் கொடுத்துவாங்க நிச்சயித்துப் பூனைக்காரன் கேட்டபடி இரண்டுயானைகள் சுமக்கத்தக்க பொன் வெள்ளி இரத்தின ஆபரணங்களை யானை மேலேயே ஏற்றி, பூனைக்காரனுக்குப் பரிசுகொடுத்து அப்பூனையை வாங்கிக்கொண்டார். சிறுவனும் தன் ஊருக்குச் சென்றான். அம்மூன்று சகோதரர்களும், மிகுந்த தனவான்களாகி அளவற்ற காணி பூமிகள் வாங்கிப் பெரும் பதவியில் வாழ்ந்திருந்தார்கள்.

நிற்க, அவர்கள் விற்ற பொருள்களை வாங்கினவர்கள் கதி என்ன வாயிற்றெனச் சற்றுக் கவனிப்போம். கோழியும், அரிவாளும் வாங்கிக்கொண்டவர்களுக்குக் குறைவொன்றுமில்லை. அவர்கள் விரும்பின காரியங்கள் சரியாகவே கைகூடி வந்தன. மற்றும் விற்கப்பட்ட அந்தப் பூனையும் ஓயாமல் எலிகளைப் பிடித்துக்கொண்டே வந்தது. ஆனால் ஒருநாள், எலிகளைத் தின்ற சிரமத்தினால் அதிக தாகமடைந்து ராஜ மாளிகையில் ஓரிடத்தில் நின்று தன் தலை

யைத் தூக்கிக்கொண்டு 'மீயா மீயா' என்று பயங்கரமாகக் கூவத் தொடங்கிற்று. பூனையின் கூச்சலை ஒருநாளும் கேளாத அந்நகரத்து அரசன்முதல் அனைவரும் மிகுந்த திகிலுற்று அரண்மனையைவிட்டு அப்புறம் ஓடிப்போனார்கள். மனங்கலங்கின அரசன் தன் மந்திரிகளை எல்லாம் கூப்பிட்டு ஒரு ஸபை கூட்டினான். தடபுடலாக ஆலோசனைகள் நடந்தன. பூனைக்குத் தூதனுப்பி ஊரைவிட்டுப் போகும்படியாகச் சொல்லும்படி தீர்மானஞ் செய்யப்பட்டது. அந்தப்படியே, ஒரு போர்வீரனை மார்ஜாலராயரிடம் சந்து அனுப்பினர். அவனும் சென்று "மார்ஜாலரூபமஹிபா! தாங்கள் தயவுசெய்து இவ்வூரின் எல்லையைவிட்டுப் போவீர்களாக! இல்லாவிடில் உங்களைக் கட்டாயப்படுத்தி ஊருக்கு வெளியேற்ற முயற்சி எடுத்துக் கொள்ளப்படுமென எங்கள் அரசராணையிட்டிருக்கிறார். உங்கள் இஷ்டப்படி செய்யும்" என்று சொன்னான். ஆனால் நீரில்லாமல் வறண்டு தவிக்கு மந்தப் பூனை "மீயா! மீயா!" என்று பதில் கொடுத்தது. "அப்படியா!" என்று அந்த வீரன் கடுகடுத்து, 'அப்பாழும் மிருகக் தொலையமாட்டேன் என்கிறது' என்று அரசனிடம் போய்ச் சொன்னான். அப்போது கலையாதிருந்த ஆலோசனை ஸபையில் பூனையின்மீது இராஜத்ரோஹ கேஸ் எடுத்து, அதைக் குண்டு போட்டு சுட்டுவிடவேண்டுமெனத் தீர்மானஞ் செய்யப்பட்டது. ஆனால் அந்தப்படிப் பூனை படுகுண்டின் இலக்கிலிருந்து தப்பித்துக் கொண்டேயிருந்தது. இதைக்கண்ட அரசன் கவலைகொண்டு, அது யிருக்குமிடத்திற்கே தீயிட்டுவிட்டால் அது ஒழிந்துவிடுமென நிச்சயித்தான். அரண்மனை, முன் அக்கினிபகவானுக் கற்பணமானது. ஆனால் பூனை வேறோர் வீட்டின் கூரைமேலோடிக் கொண்டேயிருந்தது. வீடுவீடாகக் கொளுத்தியும், பூனை கூரைகூரையாகத் தாண்டி ஓடிக்கொண்டே இருந்தது. பட்டணத்து வீடெல்லாம் பாழாயின. ஆனால் பூனையை இப்பொழுதாவது கொன்றாரோ என்னவோ தெரியவில்லை. கம்பியில்லாத் தந்தியிற் கேட்டுச்சொல்லுகிறேன். மறக்காது கேளுங்கள்.

## நல்வாழ்வைப் பெறுதற்குரிய விதிகள்

## MAXIMS FOR A HAPPY LIFE

'க்ளே' என்னும் கப்பலுடன் மூழ்கியிறந்த கனம் ஸ்டீபன் ஆலன் என்பவரின் சட்டைப்பையிலிருந்து அகப்பட்ட ஓர் பிரதியின் மொழிபெயர்ப்புக் கீழ்வருமாறு:—

இதனை மாணவர்களிலோவ்வோருவரும்
தம் மனதில் பதியச்செய்வ தவசியமாகும்.

1. நீ செய்யும் வாக்குறுதிகள் மிகச் சொற்பமா யிருக்கட்டும்.

2. எப்பொழுதும் உண்மையே பேசு.

3. பிறரைப்பற்றி ஒரு பொழுதும் இழிவாகப் பேசாதே.

4. நண்பர் வேண்டுமானால், நல்ல நண்பர்களை நாடு. இன்றேல் நண்பர்களையே தேடாதே.

5 உன் தொழிலுக்குத் தக்கபடி நடந்து கொள்.

6. உதார குண முள்ளவனாக ஆவதன் முன், ஞாயமுள்ளவனாகச் செய்துகொள்.

7. ஜெயிப்பதும் தோற்பதும் அதிர்ஷ்டவசத்தை யொட்டியிருப்பதனால், எந்த விளையாட்டிலும் தலையிட்டுக்கொள்ளாதே.

8. மயக்கத்தைத் தரக்கூடிய பானத்தை ஒரு பொழுதும் குடியாதே.

9. உன்னிடம் ஏதேனும் இரகசியங்களிருக்குமேல், அவைகளைப் பிறரறியாமல் வைத்துக்கொள்.

10. மற்றெல்லா விஷயங்களைக் காட்டிலும் நற்குணமே சிறப்புடைத்து.

11. கூடுமானவரையில் கடன்வாங்காமல் காலந் தள்ளப்பார்.

12. நீ மகிழ்ச்சியுள்ளவனாக விருக்க விரும்பினால், ஒரு பாவமுமறியாதவனாக யிருக்க முயல்.

13. நீ முன்னுக்கு வர விருப்பங் கொண்டால் செல்வவானாவதில் அவசர புத்திகொள்ளாதே.

14. நீ ஒரு மனிதனோடு பேசும்பொழுது அவன் முகத்தைப் பார்த்துப் பேசு.

15. ஒரு மனைவியை ஸம்ரக்ஷணம் செய்யப் போதுமான சக்தியை நீ பெறும்வரையில் கலியாணம் செய்துகொள்ள நினையாதே.

16. உன் வரும்படிக்குள்ளாகவே நீ செலவு செய்துவா.

17. வயது காலத்தில் உபயோகப்படும்படி வாலிபப் பருவத்திலேயே பொருளைச் சேர்த்துவை.

18 ஒரு கடனிலிருந்து வெளிவர முடியுமென்று நிச்சயமான தைரிய மிருந்தாலொழிய கடன்வாங்க எண்ணங் கொள்ளாதே.

19. விணுசையானது பயங்காட்டி உன்னையமுக்கிவிடும். ஆகையால் அதைக் கண்டவுடன் தொலைத்துவிடு.

20. நன்னடத்தையி னடையாளங்கள் நற்பழக்கமும் நற்சம்பாஷணையுமே யாகும்.

21. குறுகியதும் ஒழுங்கானதுமான இலாபமே அமைதியுள்ள மனத்திற்கு இன்பந் தரும்.

22. உன் குணம் உன் நடத்தையினுல் மட்டுமே உண்மையான கெடுதலைப் பெறும். (ஆகையால் உன் நடத்தை, நன்னடத்தையாயிருக்கட்டும்)

23. எவரேனும் உன்னை இழிவு கூறுவரேல், அவரது சொற்களைப் பிறர் நம்ப முடியாதபடி நீ நடந்துகொள்.

24. இரவில் படுக்கைக்குச் செல்லும்பொழுது, நீ அன்று காலை முதல் செய்துள்ள காரியங்களை ஞாபகத்திற்குக் கொண்டுவா.

25. ஒருபொழுதும் சோம்பேறியா யிராதே. உன் கைகள் உபயோகமுள்ள காரியங்களி லமர்ந்திராவிட்டால், உன் மனத்தின் நற்பழக்கத்தைக் கவனி.

# பிரபஞ்ச அபிவிருத்தி
# PROGRESS OF THE WORLD

**யுத்தம்**

மேலரங்கத்தில் வெகு பிடிவாதமாக ஜர்மானியர் சண்டையிடுகிறுர்கள். ஆலோசனை யில்லாமல் ஆட்களையும் பொருளையும் அங்கு பலியிட்டவண்ணமாகவே இருக்கிறுர்கள். ஈப்ரஸ் நதியோரம் ஜர்மானிய வீரம் திண்டுமுண்டாடிக்கொண்டிருக்கிறது. மற்றந்த வேர்டனிலோ இருபுறமும் போர்முனை குறையாமல் வளர்ந்து வருகிறது. ஜர்மானியர் தமது தாழ்ந்த விரநிலை, தமது ஜனங்களுடைய மனத்தில் படாதிருக்கும்படியாக, ஜனநஷ்டத்தையும் பொருள் சேதத்தையுங் கணிசியாது எப்படியும் வெர்டன் கோட்டையைப் பிடித்துக்காட்ட விரும்புகின்றனர் போலும்! அளவுக்கடங்கா ஆட்களைப் பலியிட்டு, அவர் சற்று ஜயம் பெற்ருல், அன்றிரவே, அவரது நிலையை நமது பிரஞ்சுசேனை இல்லையாக்கிவிடுகிறது. ஆயினும், ஜர்மானியர் மிக்க ஆட்களையும், மருந்துகளையும் நாசஞ் செய்து, வாஸ் என்னுங் கோட்டையைத் தகர்த்து, விழும்படி செய்ததாகத் தெரிய வருகிறது. வாஸ் என்பது, வெர்டன் கோட்டைகளில் ஒன்ருகும். இதை அவர் கவர்ந்ததினுல் அவர்க்கொன்றும் லாபமில்லை; ராணுவமாகப் பிரயோஜனமுமில்லை. மியூஸ் நதிக்குக்கிழாக ஜர்மானியர் சற்றுக்கவர்ந்த டூஅமாண்ட்பார்ம் மீண்டுங் கவரப்பட்டது. லாபாஸி கால்வாய்க்கும் அர்ராஸ் இடத்திற்கும் இடையேயுள்ள நமது ஆங்கிலப்படையை வெகு கடூரமாகப் பகைவர் தாக்கினுர்; லூஸிலுள்ள சைன்யத்தையும் அவர் தாக்கினுர்கள். இச்செயல்களால் நமது சேனையை

அசைக்க முடியவில்லை. ஆகாயவிமான வேலைகள் இவ்விடத்தில் முன்னிலும் அதிகமாகப் பகைவரால் செய்யப்படுகின்றன. இது அவர் பிராந்தியத்தில் நமது ஆகாயக் கப்பல்கள் பாய்ந்து, அவரது சேனைகளின் நடவடிக்கைகளைக் காணுதிருக்கும்படிக்கேயாகும். ஆயினும் அவரது ஆகாயக் கப்பல்களுக்கும் நம்மவற்றிற்கும் பல முறை சண்டை நடந்து, பகைவரது பல ஆகாயக்கப்பல்கள் கீழ்விழ்த்தப்பட்டன.

ரூமேனிய எல்லைக்கடுத்தாற்போல இருக்கும் பிரிப்பெட் என்னும் நதிக்குப் பக்கத்தில் ரஷ்யர்கள் ஆஸ்டிரியர்களைத் தோற்கடித்து, 13,000 வீரரைக் கைது செய்தது பெருங்காரியமாகும். ரேயான்ஞ்ஜ் பக்கத்தில் ரஷ்யருக்கும் துருக்கியருக்கும் சண்டைநடந்துவருகிறது. ஒலிகா என்னுமிடத்தில் மூன்று ஆஸ்டிரியச் சைன்யங்களை ஹதஞ் செய்து ரஷ்யர்கள் வெற்றி பூண்டனர். பிரிப்பெட் நதியைத் தாண்டி அவர் லட்ஜ்க் என்னுங் கோட்டையைப் பிடித்துக்கொண்டனர். மேலும் 11,000 ஆட்களைக் கைதி செய்து, தமது ஜயபேரிகையை முழக்கிக்கொண்டே அவர் தென் பார்ச்வமாக வந்து, ஸ்ட்ரைபாவின் தென்பாகத்திலுள்ள பகைவரது பலத்த அரண்தலங்களைக் கவர்ந்து வால்ஹினியா என்னுமிடத்தில் வெற்றிபெற்று க்ஸோர்னேவிட்ஸ் என்னுங் கோட்டைமீது படையெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆஸ்டிரியர்கள் நடுக்கத்தைப்பற்றிச் சொல்ல முடியாது. அவர் திகிலடைந்து லேம்பர்க் கோட்டையை விட்டோடத் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். ஸ்மார்கான் என்னுமிடத்தில் ஜர்மானியர் தாக்கினார்கள்; அவரது செயல் யாவும் பலிக்காதபடி தடுக்கப்பட்டன.

பால்கன் பிராந்தியத்தில் பல்கேரியர்கள் ரூபல் கணவாய் வழியாகக் கடந்து, கிரீஸ் நாட்டிலிருக்கும் ஸ்ட்ரூம் இடுக்கு வழியிலுள்ள கிரீக் கோட்டையுள் நுழைந்து, டேர்மிஹிஸ்ஸார் என்னும் ஊரையும் அதன் பக்கத்திலிருக்கும் பாலத்தையும் கைப்பற்றினர். கிரேக்கர்கள் எதிர்க்காமலே பின்வாங்கினர். எஸ்லிட்ஜ் என்னுமிடத்திலும் ஜர்மானியரும் பல்கேரியரும் வேலைகள் செய்துகொண்டிருக்கிறதாகத் தெரிகிறது. டெர்மிஹிஸ்ஸாரில் பல்கேரியர் நுழைந்ததைப்பற்றிக் கிரேக்க ஜனங்கள் மிக்கக் கோபங்-கொண்டிருக்கிறார்கள். பல்கேரியர்கள் டிராகோடினு, ஸ்பாடாவோ என்னும் பட்டணங்களிற் குடியேறிக் காவல்லா என்னும் பட்டணம் பக்கமாக வருவதாகத் தெரிகிறது. இவ்வாறு கிரீக் பட்டணங்களில் பல்கேரியரை விடுவதற்குக் கிரீஸ், நேசத் துருப்பிற்கு இடங்கொடுத்தாற் போலவே அவர்க்கு மிடங்கொடுத்ததாகத் தெரிவித்ததாம். ஆனால் அது யுத்தத்தில் தலையிடுவதில்லையென்றே சொல்லுகிறதாகத் தெரிகிறது.

இடாலிய நாட்டிற்கு வடக்கெல்லையில் ஆஸ்டிரியர்களது பெரும் பிரயத்தினங்கள் தடுக்கப்பட்டு வருகின்றன. அஸியாகோ பாகத்தில் மாத்திரம் இன்னும் தடுக்கப்படவில்லை. டிரேண்டினோ என்னும் இடத்தில் யுத்தம் முடிந்ததாகவே எண்ணவேண்டும். அஸியாகோ நகரத்தை இடாலியர்கள் காலி செய்துவிட்டனர். ஆயினும் ஊக்கமழியாது போரிடுகின்றனர். தென் டைராலில் நிலை கவலைக் கிடந்தருவதாயினும், முன்னிலும் நல்ல நிலையைப் பெற்றதாகத் தெரிகிறது. ஆஸ்டிரியர்கள் மிகப்பெருஞ் சேனையைத் திடீரெனக் கொண்டுவந்து தாக்கியதால், மாண்டிகேங்கியோ என்னுமிடத்தைக் காலி செய்யும்படி நேர்ந்தது; ஆயினும் அடுத்த நாளே இட்டாலியர் அதைக் கிட்டத்தட்ட முற்றும் கவர்ந்தனர். லகாரினு, ஸுகனு என்னும் பள்ளத்தாக்குகளில் ஆஸ்டிரியர்கள் செக்பந்தி செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆசியத்துருக்கியில் காகஸஸ் பிராந்தியத்தில் நிலை ஒன்றும் மாறவில்லை. ரேவாண்டுஜிலிருந்து டேர்காலாவரையிலிருக்கும் முனையில் துருக்கியர் ரஷ்யரைத்தாக்கி, அபஜயமும் நஷ்டமுமடைந்தனர். டியாப்கர் இடத்தில் துருக்கியர், ஒஹ்நோட் என்னுமிடத்திலிருந்து கோகாபஜார்மீது படையெடுத்துக் கானிரேட்டை ஆக்ரமித்துக்கொண்டனராயினும், உடனே ரஷ்யர்கள் அவரை மறுமுறை தாக்கி ஓடச்செய்தனர். மாமஹ்டன் என்னும் இடத்தில் துருக்கியர் ரஷ்யர்களைத்

தாக்கியதாகத் துருக்கியர் உத்தியோகமுறையில் வெளியிட்டிருக்கிறார்கள்.

மெஸபொடோமியாவில் ஆங்கில சேனையும் ரஷ்ய சைன்யமும் ஒன்றுகூடிவிட்டனர் என்பது ரஷ்யரது வெற்றிநடையை விளக்குமென்பதற்குச் சந்தேஹமில்லை.

ஆங்கில பிரஞ்சுப் படைகள் ஆப்பிரிக்காவில் கோமரூன்ஸ்நாட்டை ஜயித்தனர். மற்று ஜர்மானியக் கிழக்காப்பிரிக்காவில் ஆங்கில சேனை நுழைந்து நியூ லான்கேன்பர்க்கைக் கவர்ந்து யூஸம்பா ரயில்வழியாக விருக்கும் லெஸாராப்பட்டணத்தையு மாக்ரமித்தனர். நமீநா என்னு மிடத்திலுள்ள பகைவரது சேனையும் முற்றுகை யிடப்பட்டுவருகிறது.

இதுவரையும் கீல் கால்வாயில் தூங்கிக் கொண்டிருந்த ஜர்மானியப் போர்க்கப்பல்கள் வெளிக்கிளம்பக்காரணமின்னதென்று தெரியவில்லை. மேமீ 31௳ நமது நாவாய்ப் படையும் ஜர்மானியக் கப்பல் படையும் ஜட்லண்ட் த்விபகல்பத்திற்கு அருகாமையில் ஸந்தித்துக் கடும் போரிட்டதாகத் தெரிகிறது. இதில் ஜர்மானிய நாவாய்ப் படை முழுதும் வேலை செய்தும், தாங்க முடியாமல் பின்வாங்கியது, நமது நாவாய்ப் படையின் பெருமையை வெளியிடும். இந்த யுத்தத்தில் இருபக்கத்திலும் ஜன நஷ்டமதிகமென்று கருதப்படுகிறது. ஆயினும் ஜர்மனியின் பெரிய போர்க்கப்பல்களும், க்ரூய்ஸர்களும், நமது பக்கத்தைக் காட்டிலு மதிகமாக நாசமாயின என்பது இனி ஜர்மனியை வெகுநாள்வரை கடல்மேல் தமது போரை நடத்த முடியாதவண்ணம் செய்யுமெனச் சமர்த்தர்களால் கருதப்படுகிறது.

மற்று, ஸப்மெரீன் கொலை குறையாமலே நடந்துவருகிறது. யுனைடைட் ஸ்டேட்ஸுக்கு ஜர்மனி இவ்விஷயத்தைப்பற்றிக் கண்ணைத் துடைக்கும்படியாகப், பதில் சொல்லியதாகத் தெரிகிறது. இதை நன்குணர்ந்து யுனடெட் ஸ்டேட்ஸ் பிரஸிடெண்டு சீக்கிரத்தில் ஜர்மனியிடம் கோபத்தைக் காட்டுவர் என்பது நிச்சயம்.

***

மேமீ 31௳ ஆர்க்னீஸ்வழியாக ராணுவ விஷயமாகக் கிச்சனர் பிரபு ரஷ்யாவுக்குப் போகும்போது, அவர் போய்க்கொண்டிருந்த போர்க் கப்பல், கடலில் மிதந்துகொண்டிருந்த வெடிச் சுரங்கந்தாக்கி யுடைய, மரணமடைந்தன ரென்பது உலக முழுதையுந் துன்பத்துள் ஆழ்த்தும். அவர் பரமதீரர். அவரது ஜீவியச் சுருக்கம் வேறிடத்தில் எழுதப்பட்டுள்ளது.

கிச்சனர் பிரபு

***

சீனா நாட்டில் அமளியாக இருந்துகொண்டிருக்கிறது. சிலர் ஜனபரிபாலனம் வேண்டுமென்றும், சிலர் அரசியல் வேண்டுமென்றும் விரும்புகிறார்கள். முன்னமேயே அரசனால் ஆட்சி செய்வது கூடாதெனச் சீனா ராஜ்யத்தில் ஜன ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இதற்கு யுவான்ஷி-கே என்பவர் ஜன ஆட்சித் தலைவராக இருந்து பலகக்ஷிகளின் வேலைக்கு மிணங்கத் தமது பதவியைச் சமாளித்தனர். அவரது மரணம் மிக்க துக்கத்தை விளைவிக்குமென்பது திண்ணம். பலவகை வைத்யரும்கொடுத்த மருந்தை யுண்டதால் அவர் மரித்தனரெனவும், விஷத்தால் கொல்லப்பட்டனரெனவும் கருதப்படுகிறது. எப்படியாயினும், அவர் உலக வாழ்க்கையைத் துறந்தார். அவர் ஜன ஆட்சித் தலைவராகச் சீனாவில் நடந்த அமளி குமளி காலங்களிலெல்லாம் மனோவன்மையுடன் ஆண்டதை நினைக்குமிடத்து அவரைச் சாமான்யராகக் கருதமுடியாது!

யூவான்-ஷி-கே

***

கவர்ன்மெண்டாருக்கு 100-க்கு 4-விதம் வட்டிக்கு ஆறுகோடி ரூபாய்கள் கடன் வேண்டுமென்றும், 12 கோடி பெற்றுக்கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அறிக்கையிடப்பட்டிருக்கிறது. இக்கடன் 1931ளு முதல் 1936-ம்வருஷத்திற்குள் திருப்பிக் கொடுக்கப்படும். 100-க்கு $3\frac{1}{2}$-விதம் வட்டிக்குட்பட்டுக் கவர்ன்மெண்டுக்குக் கடன் கொடுத்தவர், விரும்பினால், இந்தக் கடனுக்காக அதை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் 100 ரூ. கவர்ன்மெண்ட் சீட்டு ரூ. $82\frac{1}{2}$ ஆகக் கணக்கிடப்படும். போஸ்டாபீஸ் மூலமாகக் கொடுப்ப

4%-கடன்

வர்களும் கொடுக்கலாம். பணங்கொடுப்பவர்க்குத் தக்க ஸௌகர்யங்கள் செய்துகொடுக்கப்படும். இவ்விஷயத்தில் நமது நேயரனைவரும் கவனஞ் செலுத்துவரென நம்புகிறோம்.

***

**மாணவர் கஷ்டம்**

பாகவதத்தில் கம்ஸன் குற்றமொன்றுமறியாத சிசுக்களைத் தனது பயத்தால் தூண்டப்பட்டுக் கொன்றதாகப் படித்திருக்கிறோம். பைபிலில் ஹேரட் என்பவனும் பயத்தால் மயங்கித் தாட்சணியமில்லாமல் சிசுக்களை எல்லாம் கொன்று களித்ததாகவும் படித்திருக்கிறோம். நமது சென்னை ஸர்வ கலாஸங்கத்தார் நமது சிறுவர்களைப் பரீட்சைக் கத்தியால் கருணையற்ற கல்நெஞ்சோடு கொலை செய்வதற்குக் காரணமெதுவோ தெரியவில்லை. இச்சங்கத்திற்குத் தன் பெருமை குன்றும் என்ற பயம் போலும்! பரீக்ஷை செய்யும் வகை இந்தச் சங்கத்திற்கென்று எம்பெருமான் ஏற்படுத்தினர் போலும்! சிறுவர்களுடைய மனதை விசாலப்படுத்திப் பெருமையிற் பாய்ந்துழைக்கச் செய்வதைவிட்டு, துக்கத்தில் ஆழ்ந்து பித்தம்பிடித்துத் திரியச் செய்வதா படிப்பின் வழி? நமது சங்கத்தின் வழிப்படி போதிக்கப்படும் படிப்பு அவ்வளவழகியது! இவ்வருஷம் இன்டர்மீடியட்டுப் பரீட்சையின் தேர்ச்சிப்பட்டி இதை வெளியிடும். வடிகட்டப்பட்டுப் பரீட்சைக்கனுப்பப்படும் பிள்ளைகளில் 100-க்கு 25க்கு மேல் ஸரியாகப் படிப்பவர்களல்ல போலும்! இதை நோக்குமிடத்துப் போதனை செய்யும் உபாத்தியாயர்களாவது தமது வேலையைச் செம்மையாகச் செய்யவில்லை; அல்லது பரீட்சைக்குப்போன சிறுவர்களாவது முட்டாள்களாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால் வித்தியாயிலாகாத் தலைவர்கள் கவனஞ் செலுத்தாமலிருக்க முடியாது. அல்லது பரீக்ஷகர்களாவது, பரீக்ஷைக் காகிதத்தைத் திருத்துபவர்களாவது ஸரியாக நடக்காமலிருந்திருக்கவேண்டும். வேறெந்தக் காரணத்தால், கஷ்டப்பட்டுப் படித்த நல்ல பிள்ளைகள் பரீட்சையில் தேறாதிருப்பது?

**கனம் ஸ்ரீ சிவஸ்வாமி அய்யர்**

கனம் ஸ்ரீ சிவஸ்வாமி அய்யர் அவர்கள் சென்னை ஸர்வகலாஸங்கத்தின் உப அக்ராஸனாதிபதியாக ஏற்படுத்தப்பட்டதெவர்க்கும் சந்தோஷத்தை விளைவிக்கும். அதுவும் தற்காலம் எல்லாரும் விரும்பத்தக்கது. அவர் தமது கவனத்தைச் சற்று முன் வெளியிடப்பட்ட இன்டர்மீடியட் பரிக்ஷையின் தேர்ச்சி விஷயத்தில் செலுத்தி, வீடுதோறும் கவலையில் ஆழ்ந்து கிடக்கும் தந்தைகளது துயரத்தையும், ஜனங்களுடைய பீதியைப்போக்கவும், மாணாக்கர்களுடைய குறையை ஒழிக்கவும், ஷெ பரீக்ஷையின் தேர்ச்சி விஷயத்தை மீண்டும் விசாரித்துப், பரீட்சையின் தேரிய பட்டியில் காட்டியவரன்றி, மேலும் பலரைக் காட்டும்படி ஏற்பாடு செய்வரென நம்பப்படுகிறது. பணமுற்றும், படிப்பிற்குச் செலவிட்டுத் தத்தளிப்பவரின் கஷ்ட நிவாரணத்திலீடுபட்டு, அவர் சிறுவர்களது பரிதாப நிலையை நிவர்த்திக்கச் செய்வாராக! எம்பெருமான் அவ்வாறு உழைக்கச் செயின், அவர் பெயர் அழியாப் பெருமையுடன் இந்திய இல்லந்தோறும் பழகுமென்பதற்கையமே இல்லை.

***

**மைசூர் பொருளாதாரக் கான்பரன்ஸ்**

இம்மாதம் மைஸூர் பொருளாதாரக் கான்பரன்ஸ் மைஸூரில் கூடியது. இதில் மூன்று பிரிவுகள் உள்ளன. அவை: (1) கல்வி, (2) விவசாயம் (3) தொழில்—வியாபாரம். கல்வித் தரப்பில் பலபிரேரேபணைகள் கொண்டுவரப்பட்டன. வயதானவர்க்குப் படிப்பைப் பற்றியும், அவர்க்கு இரவில் பள்ளிவைத்துப் படிப்பித்தலைப் பற்றியும், தீர்மானங்களேற்பட்டன. அவ்வாறு படிப்பிக்கும் போது லக்ஷணக்கிரந்தங்களுடன் தொழிற் கல்வியும் சொல்லிவைக்க வேண்டியதவச்யமென்றும் வெளியிடப்பட்டது யாவரும் விரும்பத்தக்கது. பெண்கல்வி விஷயமாகக் கவர்ன்மெண்டார் செலவிட்டதும், கிராமங்கள் தோறுஞ் சென்று படிப்பிக்கும் விஷயத்திலும் அவர் கொண்டசிரமமும் மெச்சத்

தருந்தது. மற்று விவசாய விஷயமாகப் பல துண்டுப்பத்திரங்களை வெளியிட்டதல்லாமல், குடியானவர்க்கு விவசாய விஷயங்களைப் போதிக்கும்படியாகவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. தொழிலிலாகாவில் விட்டிற் செய்யப்படும் தொழில்களை முன்னுக்குக் கொண்டுவரும்படியான முறைகள் விஸ்தாரமாக ஏற்படுத்த ஏற்பாடுகள் யோசிக்கப்படுகின்றன. இந்தக் கான்பரன்ஸினுல் ஜனங்கள் தமது குறையையுணர்ந்து நிவர்த்திக்க நல்லவழி ஏற்படும் என்பதற் கையமில்லை.

***

**ந்யூ இந்தியா**

சென்னையில் நடைபெற்றுவரும் ந்யூ இந்தியா பத்திர அச்சுக்கூடத் தலைவியிடமிருந்து கவர்ன்மெண்டார் ரூ. 2000 கட்டும்படி அச்சுச்சட்டத்தின் கீழ்க் கேட்டது, அச்சுச் சட்டத்தால் இந்திய பத்திராதிபர்க் கேற்படக்கூடிய விபத்தை விளக்கும். இவ்வச்சுச்சட்டத்தைச் சீர்திருத்தும்படிச் செய்வது ஒவ்வொரு இந்தியனுடைய அபிஷ்டமே ஆகும்.

***

**மைசூரில் ஜூரி விசாரணை**

மைஸூரிலும் பெங்களூரிலும் குற்றக்கேசுகளை ஜூரிகளின் உதவியைக்கொண்டு பரிசோதனைக்காக நடத்தும்படி மைசூர் தர்பார் உத்தரவு பிறப்பித்திருக்கிறது. இம்மாதிரி ஏற்படுத்தல் மைசூர் ராஜ்யத்தில் புதிதல்ல. சில விஷயங்களில், இந்தியா கவர்ன்மெண்டார் ஸரியாக நடைபெறமுடியாதென அபிப்பிராயப் பட்டனர். மைசூர் தர்பாரும் பரிசோதனைக் கென்றே ஷெ ஏற்பாடுசெய்தனர் என்பது மெச்சத்தருந்தது.

***

**கனம் ஸ்ரீ அப்துல் ரஹீம்**

கனம் ஸ்ரீ அப்துல் ரஹிம் அவர்கள் சென்னை ஹைகோர்ட்டின் முக்கிய ஜட்ஜாக நியமிக்கப்பட்டது யாவர்க்கு மானந்தத்தை யுண்டாக்கும். அவரது, தர்மசிந்தனை, ஸத்தியவழி, நியாயதர்மம், கல்வியபிவிருத்தியில் அக்கரை இவற்றைப்பற்றி நாம் சொல்லவேண்டியதே இல்லை.

# புஸ்தக விமர்சனம்

## REVIEWS OF BOOKS

ஸ்ரீராமன்*.—வாழ்குடைம-ா-ா-ஸ்ரீபி.வேங்கடராம சாஸ்த்ரிகள் இயற்றியது. விலை அணு 4. இனியதமிழில் எழுதப்பெற்றுள்ள இப்புத்தகம், சிறுவர்களுடைய பாடப்புத்தகமாக உபயோகப்படுத்தத் தக்கது. இராமாயணக் கதையைச் சுருக்கமாகப் பட்டாபிஷேகம் வரை அடக்கியுள்ளது. பெண்களும் சிறுவரும் படிக்கும்படியாகப் பள்ளிகளிலும் வீடுகளிலும் இப்புத்தகம் மிக்க நன்மை தரும்படியாக உபயோகித்தல் பயன்தராதிராது.

நளன்: கர்ணன்*.—இப்பெயர்கொண்ட புத்தகங்கள் அவ்வப்பெயர் கொண்ட அரசர்களது சரித்திரத்தைச் சுருக்கமாக எளிய நடையில் யாவரும் அறியும்படியாகத் தமிழில் எழுதப் பெற்றுள்ளன. இடை யிடை, நல்ல புத்திமதிகளை எடுத்துக் காட்டியிருப்பது புகழத்தக்கது. பள்ளியில் படிக்கும் சிறுர்களது கையை யலங்கரிக்கத்தக்க பெருமையுள்ளது. இத்தகைய புஸ்தகங்களை ம-ா-ா-ஸ்ரீ வா. பி. வேங்கடராம சாஸ்திரியார் இயற்றுவது இந்நாட்டுச் சிறுவர்க்குப் பெருமுதவியாகும். நளன் விலை அணு 2, கர்ணன் அணு 3.

இந்திய மாதர் சரித்திரம்†—இப்புத்தகமும் ம-ா-ா-ஸ்ரீ வா. பி. வேங்கடராம சாஸ்திரியார் இயற்றியது. முதற்பாகமாகிய இதில் கிட்டத்தட்ட இருபது இந்தியப் பெண்களைபற்றி ,எழுதப்பட்டுள்ளது. இப்புத்தகம் நமது பெண்பாலார் அனைவரும் படித்தல் பெரும் பயனைத் தரும். தற்கால நாகரீகத்தால் தலைகவிழ்ந்துவிளங்கு மனைவர்க்கும் நல்ல புத்தியை யூட்டக்கூடியது. இத்தகைய புத்தகத்தை எழுதியதற் கெவரும் சாஸ்திரிகளவர்களிடம் அன்பு பாராட்டவேண்டிய தவசியம். விலை அணு 5.

நறுந்தொகை*. — அதிவீரராம பாண்டியன் இயற்றிய நறுந்தொகையை பி. வேங்கட

* சென்னை, மெஸ்ஸர்ஸ் R. வெங்கடேச்வர் கம்பெனி பிரசுரம்.

† சென்னை, மெஸ்ஸர்ஸ் ஆர். திருமலை அண்ட் கம்பெனி பிரசுரம்.

ராம சாஸ்திரிகள் உரையுங் கதைக்குறிப்புடனும் வெளியிட்டிருக்கிறார். இதைச் சிறுவர்க்கு மிகப் பயன்தருமாறு உபயோகப் படுத்தலாம். ஒவ்வொரு அடியிற்கும் பொருள்கூறி இனிய கதையோடு விளக்கப்பட்டிருப்பது, இப்புத்தகத்தின் புதிய குணமாகும். மூன்றணு விலைமாத்திரம் அதிகமாகத் தோன்றுகிறது.

மிதபோஜனமும் மதுபான விலக்கும்.—இது ஸ்கூல்ஸப்அஸிஸ்டெண்ட் இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ S. பஞ்சாபகேச சர்மா அவர்கள் இயற்றிய ஒரு சிறு புத்தகம். எடுத்துக்கொண்ட விஷயத்தை, சர்மா அவர்கள் நன்கு விளங்கியிருக்கிறார் என்பது படிப்பவர்க்குச் சொல்லாமலே விளங்கும்.

ஸ்காந்தபுராண கீர்த்தனங்கள்.—இது மதுரை ஜில்லாவில் இயல் இசை நாடக ஸங்கிதங்களில் பெரும் வித்வானாக விளங்கிய காலஞ்சென்ற கவிகுஞ்சர பாரதிகளியற்றியது. இது கம்பராமாயணத்தைத் தழுவி, இராம நாடகத்தை அருணாசலக் கவிராயர் இயற்றியதைப்போல், கச்சியப்ப சிவாசாரியரது கந்த புராணத்தைத் தழுவி எழுதப்பட்டது. இதன் பெருமையை நாம் அதிகமாகவிஸ்தரித்தெழுத நியாயமில்லை. கவிகுஞ்சர பாரதியின் கீர்த்தனங்களைக் கேட்டு ஆநந்தியாதவரில்லை. இதுவரை அச்சுவாகனங்காணுதிருந்த இந்நூலைச் சேர்த்து ஷெ பாரதியாரது பேரராகிய பிரஹ்மஸ்ரீ கோடீச்வர அய்யர் வெளியிட்டது தமிழ் நாட்டிற்குச் செய்த பேருதவியாகும். மற்றுக் கீர்த்தனங்களின் பெருமைகளை நாடுமிடத்து, நாத பிரஹ்மத்தில் பதங்களடங்கிக், காலவளவிற் தயங்காது மயங்கி, இசை இன்பங் குறையாத வண்ணம், அடைமொழிகளின்றிச் சற்றுங் குறையாது, பதங்கள் உடையாது அர்த்தம் குன்றாது, கதைப் போக்கும் வழுவாது, பல ப்ரௌடவாக்கும் பழமொழிகளும் பொதிந்து, சுருங்கச் சொல்லலென்னுங்குணம் பொதிந்து யாவர்மனத்தையும்மயக்கித் தன்பால்இழுத்துப் பக்தியிற் பாயச் செய்யுந் தன்மையது. குறையென்பதில்லாததென்றே மதிக்கக் கூடியதாயினும், சில கீர்த்தனங்களில் கஷ்டமான பதங்கள் நிறைந்திருப்பது, பொருளைச் சீக்கிரத்தில் எல்லாரும் அறியும்படி செய்யாது என்று சிலர் எண்ண இடந்தரும். ஆயினும் பெரும் பாவங்களை வெளியிடும் பொழுது வெறும் வெள்ளைப் பதங்களால் சிறந்த பொருளை வெளியிடமுடியாமை யாவருமறிந்த விஷயம். அச்சமயங்களில்தான் ஒருவேளை கஷ்டமான பதங்கள் இக்கீர்த்தனங்களில் இடை இடை ஏதாவது வந்திருக்கலாமென்று இக்கீர்த்தனங்களை முற்றுமனுபவித்தவர் கூறுவரென்பது திண்ணம். 404 பக்கங்கள் கொண்ட இப்புத்தகத்தின் விலை ரூ 1-8-0 அதிகமென்று சொல்ல முடியாது. யாவருமிதை ஆதரிப்பது தமிழிடையும் சங்கிதத்திடையுமுள்ள அபிமானத்தையே வெளியிடும். கீர்த்தனைக் கிரந்தங்களில் பெருமையுடன் விளங்கும் நூல்கள், தற்காலம் இராமநாடகமும், நந்தன் சரித்திரமும்,இந்நூலுமே. ஆதலால் இந்நூலை யாவரும் ஆதரிப்பதுஇழுக்காகாது; தமிழிடம்பட்ட கடனேயாகும்.

அழகர் குறவஞ்சி.—இதுவும்கவிகுஞ்சரபாரதியார் இயற்றியது.அவர் பேரர் ம-ா-ா-ஸ்ரீ கோடீச்வரய்யர் வெளியிட்டது. இதுவரை தமிழில் திருக்குற்றாலக் குறவஞ்சி பெரும் புகழுடன் உலாவிவந்தது. அழகர் குறவஞ்சி வெளிவந்த பின்னர் இரட்டையர்போல் அவையிரண்டும் சேர்ந்துதான் உலாவமுடியும். இரண்டிற்கும் வேற்றுமை யிருப்பதாக வெளியிட முடியாது. ஸங்கித விஷயத்தில் குற்றாலக் குறவஞ்சியினும் அழகர் குறவஞ்சி ஓங்கி விளங்குவது வெளிப்படை. விஷயத்தில் ஒன்றிற் கொன்று தாழாது. யாவரு மாதரிக்கத்தக்க பெருநூலாகும். இதன் விலை அணு 8. அச்சு முதலிய விஷயங்களைப்பற்றி பேசவேண்டியதேயில்லை.

பேரின்பக் கீர்த்தனங்களும் பதிகங்களும்.—இவையும் கவிகுஞ்சர பாரதியார் இயற்றியவை. இதைப்பற்றிப் பேசுவது மிகையாகும். பதிகங்கள் திராக்ஷா பாகமாக இருப்பதுடன் பக்திரஸம் நிறைந்துமனத்தையுருக்கிப் போதனைசெய்யக்கூடியவை.

இந்நூலை யாவரும் படிப்பது நன்மையே பயக்கும்.—இதன் விலை அணா 8.

சேரன் - செங்குட்டுவன்.—இப்பெயருடன் தமிழிலெழுதப்பட்ட சரித்திரகிரந்த மொன்று சமீபத்திற் கிடைக்கப்பெற்றோம். இஃது எழுதியவர், 'செந்தமிழ்'ப் பத்திராசிரியராயிருந்தவரும் சென்னையில் இப்போது நடைபெறும் தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் பிரதம பண்டிதருமான மிஸ்டர். மு. இராகவையங்கார். சிலப்பதிகார மியற்றிய இளங்கோவடிகள் தமையனான சேரன்-செங்குட்டுவனது வாழ்க்கை வரலாறுகளைப் பழைய தமிழ் நூல்களை ஆதாரமாகக் கொண்டும் பல சரித்திர கிரந்தங்கள், சாஸனங்கள் முதலியவற்றைத் துணைக்கொண்டும் இவர், நவீன சரித்திர வாராய்ச்சி முறைவழுவாது இந்நூலில் விளக்கியிருக்கிறார். செங்குட்டுவன் முன்னோராய்ப் பிரசித்திபெற்ற சேரர்களுடையவும், இவன் சுற்றத்தாருடையவுமான வரலாறுகளையும் இவனது போர்ச் செயல்களையும் இவன் காலத்து நிகழ்ந்த கோவலன் கொலை, மணிமேகலை துறவுகளையும் கோவலன் மனைவியாகிய கண்ணகியின் தெய்விகத்தன்மையை நோக்கி முற்காலவழக்கப்படி அவளுடைய பிரதிமையை வகுக்க இமயத்திலிருந்து சிலை எடுத்து வருவதற்கும் அதனுடன் தன் வடநாட்டுப் பகைவரை வென்றுவரும் பொருட்டும் இச்சேரன் உத்தர கோசலம்வரை சென்று பகைவரை வென்று ஜயசீலனாகத் திரும்பியதையும், அப்பத்தினியைத் தன்னாட்டிற் பிரதிஷ்டித்து கௌரவித்ததையும் இவனது சமயம் சமகாலத்தரசர் புலவர் நாடு நகரம், அரசியல் குணதிசயங்களையும் இவன் வாழ்ந்த காலவிசேஷத்தையும் இக்கிரந்தத்தால் செவ்வையாக அறிந்துகொள்ளலாம். செங்குட்டுவனால் தெய்வமாகவணங்கப்பட்ட கண்ணகிப் பிரதிமையின் மாதிரியொன்று இலங்கையிலகப்பட்டதற்கும் பிரதிசாயையும் விரக்கல் மஹாஸதிகற்களின் படங்களும் இந்நூலுட் சேர்த்திருப்பது மிகவும் விரும்பத்தக்கது. சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்தின் செய்யுள் நடையை இதனாசிரியர் இனிய வசனநடையில் எழுதியிருப்பது அடியார்க்கு நல்லாருரை கிடைக்காத அப்பகுதியை நம்மவரெல்லாம் எளிதிற் படித்து மகிழ்தற்கு அநுகூலமாகும். சேரவரசர் தலைநகரமாக நூல்கள் கூறும் வஞ்சி என்பது இப்போது திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் அடங்கிய கருவூரே என்றும், செங்குட்டுவன் காலம் கி-பி. 5-ம் நூற்றாண்டாகவேண்டுமென்றும் ம-ா-ா-ஸ்ரீ இராகவையங்கார் பல ஆதாரங்கள் மூலம் வற்புறுத்துகிறார். இவ்விஷயங்கள் சரித்திரம் வல்லோரால் மிகவும் கவனித்தற் குரியவை யென்றே எண்ணுகின்றோம். இப்புத்தகத்தால், ஒரு பழைய தமிழ் வேந்தனது வாழ்க்கைமட்டுமன்றிப் பண்டைத் தமிழரின் நடையுடை பாவனைகளின் உயர்வும், தமிழ் நாட்டின் சீரும் சிறப்பும் கரதலாமலகமாக விளங்குகின்றன. பண்டை நூல்களில் மறைந்து கிடக்கும் சரித்திர விசேஷங்கள் தமிழ்ப் பண்டிதர்களால் அதிகமாக வெளிவரவில்லை என்ற குறையை இப்புத்தகம் ஒருவாறு மாற்றத்தக்கதென்று சொல்லலாம். கானாடுகாத்தான் மிஸ்டர். பெத்தாச்சிசெட்டியார் அவர்கள் இதுபோன்ற நூல்களுக்குப் பொருளுதவி செய்து ஊக்கப்படுத்திவருவது அவரது சிறந்த தமிழபிமானத்தையும், தேசாபிமானத்தையும் விளக்கும். பெதர் வெயிட் என்னும் விலையுயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பெற்ற இப்புத்தகத்தின் விலை ரூ. ஒன்றே. வேண்டுவோர் 'விவேக போதினி' மானேஜருக்கு எழுதிக்கொள்க.

பக்தியோகம்.—மயிலாப்பூர், ஸ்ரீராமகிருஷ்ண மடத்தின் பிரசுரம்: பக்கங்கள் 103, விலை அணா எட்டு.

காலகதியால் உறங்கிக்கொண்டிருந்த நம் ஸஹோதரர்கள், தம் முயற்சியினாலும்வாக்வன்மையாலும் விழிக்க வைத்த ஸ்ரீ ஸ்வாமி விவேகாநந்தரின் ஆங்கில ப்ரஸங்கத்தின் தமிழ் மொழிபெயர்ப் பாகுமிது. ஆங்கிலத்திலும் தமிழிலும் பாண்டித்தியம் பெற்ற ஸ்ரீமான் மே. சி. தாதாசார்யரவர்களால் மொழி பெயர்க்கப்பட்ட இந்நூல் மிகவுமெளிய இனிய நடையில் பக்தியின் பல ப்ராகாரங்களைப்பற்றி விவரிக்கின்றது. மதாபிமானம் உள்ள ஹிந்துக்கள் யாவரும் படிக்க வேண்டிய சில நூல்களில் இது ஒன்றாகும் என்று கூறுவதனாவசியம்.

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

லால்குடி கல்விப் பொருட்காட்சி.—அடுத்த ஆகஸ்ட்மாதம், லால்குடி ரேஞ்ச் உபாத்திமைச் சங்கங்களை யொட்டி ஒரு வித்தியா காட்சி சாலை திறக்கப்பட்டு நடத்தப்படும். அப்பொழுது அக்காட்சிச் சாலையை திறந்து வைக்க நிர்வாக சபை மெம்பர் கனம் ஸர் சிவஸ்வாமி அய்யரவர்களை கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது. அய்யரவர்களும் இதற்கு முற்றிலும் சம்மதப்படுவாரென நம்புகிறோம். உபாத்தியாயர்களும், மாணவர்களும் இக்காட்சிச் சாலையில் போட்டியாகவித்தியா சம்பந்தமானவும், விவசாய சம்பந்தமானவும்,கைத்தொழில்சம்பந்தமானவும்,தாவரவர்க்க சம்பந்தமாயுமுள்ள சித்திரங்கள் வகைராக்களை மேற்படி காட்சிசாலைக் கனுப்பி, அவைகளின் சிறப்புக்குத் தகுந்தவாறு பதக்கங்களையும், சர்டிபிகேட்டுகளையும் பெறப் பிரயத்தனப்பட இதுவே சமயம். இக்காட்சி விஷயமாக ஊக்கமெடுத் துழைக்கும் இரு கனவான்களும் கல்வியபிவிருத்தியில் அக்கரை கொண்டவர்களும் தவிர, அவர்களில் ஸ்ரீமான் பார்த்தசாரதி நாயக்கரவர்கள் இவ் விஷயக்களில்மிக்க பழக்கமுள்ளவரென்றே சொல்லவேண்டும். ஏனெனில், 1911–ம் ௵ ஏப்ரல்மீ இராமநாதபுரம் ஜில்லா பாளையம்பட்டியில், அவ்வூர் நாடார்கள் பண உதவியைக் கொண்டு ஏறக்குறைய ரூ. 5000 செலவில் ஒருகல்விப்பொருட்காட்சி வெகு விமர்சையாக நடத்திவைத்தவர். அது போல, லால்குடிப் பொருட்காட்சியும் எவ்விதத்திலும் உயர்வாகவே யிருக்குமென்பது எமது நம்பிக்கை.

***

மேஸ்ஸர்ஸ் ராலி பிரதர்ஸ்.— பம்பாயிலுள்ள இக்கம்பெனியார், கள்ளிக்கோட்டைக்குச் சமீபத்திலுள்ள பேரோக் என்னுமிடத்தில் ஒரு காகிதச்சாலை ஏற்படுத்த உத்தேசித்திருக் கிறார்களென்றும், அவர்கள் அவ்விதம் ஏற்படுத்தி நடத்தினால், மிகவும் ஒழுங்காயும், செம்மையாகவும் நடைபெறுமென்றும் டைம்ஸ் பத்திரிகை கூறுகிறது.

திருவிடைமருதூர் மஹா கும்பாபிஷேகம்.—இப்புராதன க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ மஹாலிங்கஸ்வாமிக்கும், ஸ்ரீ பிரஹத் ஸுந்தர குசாம்பிகைக்கும், ஸமஸ்த பரிவார தேவதைகளுக்கும் மிதுனமீ 27௳ (10-7-1916) சோமவாரம் தசமி, சுவாதி நக்ஷத்திரம் $7\frac{1}{2}$ நாழிகைக்கு மேல் $11\frac{1}{2}$ நாழிகைக்குள் ஸிம்ம லக்கினத்தில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். அச்சமயம் சிவநேசச் செல்வர்கள் யாவரும் விஜயம் செய்யும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். திருவாவடுதுறை ஆதீனத்தில் கொடுத்த மத்தியார்ஜுனம் கோயில் கிராம வரும்படியிலிருந்து ஒரு லக்ஷத்துக்கு மேலும், தேவகோட்டை ஸ்ரீமான் மெ. லெ. மெ. ராமநாதன் செட்டியார் தம் சொந்தப் பொருளிலிருந்து ஐந்து லக்ஷத்துக்கு மேலும் செலவு செய்து பலவருஷங்களாக திருப்பணி மிகச் செவ்வையாகச் செய்யப்பெற்று இனிது நிறைவேறியிருப்பது யாவருக்கும் திருப்தியைவிளைவிக்கும். இவ்வைபவத்திற்குசுமார் இரண்டு லக்ஷம் ஜனங்கள் வரை வந்து சேருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

***

புதுவயல், ஞானப்பிரகாசசபை.—இதன்பிரதமவருஷ நிறைவுக்கொண்டாட்டம்சென்ற வைகாசிமீ, 31௳ ஆனிமீ 1௳ (ஜூன்மீ 13,14௳) ஆகிய இரு தினங்களிலும் மிக்க விமரிசையாக நடை பெற்றதென்றும், ஸ்ரீமான் K. சதாசிவ செட்டியாரவர்களின் அக்கிராஸனத்தின் கீழ், பல கனவான்கள் பற்பல விஷயங்களைப்பற்றி உபந்நியசித்தார்க ளென்றும் நம் நிருபர் ஒருவர் எழுதுகிறார்.

***

மானாமதுரை, ஹிந்து லோயர் ஸகண்டரி பாடசாலை.—சிலகாலமாக இப்பாடசாலை நன்கு நடத்தப் பெறவில்லை யென்ற குறையானதுஇப்போதுஒருவாறுநிவர்த்திக்கப்பட்டதெனவே கருதவேண்டும். சென்ற ஏப்ரல் மாதம் முதல்,இப்பாடசாலை ஆறு கனவான்கள் கொண்ட ஒரு கமிட்டியின் நிர்வாகத்தில் வந்திருக்கிறது. இவ்வறுவரும் வக்கீலுத்தியோகத்திலிருப்பவர்கள். இவர்களின் கீழ், இப்பாடசாலை ஓங்கி வளருமென நம்புகிறோம்.

# தேகஸௌகம், பலம், மனோதிடம்




ஆகிய இவை மூன்றும் உலகத்தில் ஜீவிப்பதற்கு வேண்டிய ரொம்ப முக்யமான குணங்களாகும். உமது தேகம் மெலிந்து நடுக்கம் கண்டால் உலககார்யங்களில் எப்படி ஸித்தியடைவீர்? திடமான தேக அமைப்பு இல்லாவிட்டால் குடும்பக் கார்யங்களையும் மற்றத் தொழில்களையும் எப்படி ஸரிவரச் செய்யமுடியும்? நீர் பலமற்றிருந்தால், உம்மிடம் பராக்ரமமும் சக்தியும் குறைந்துபோயிருந்தால்; உமது எண்ணங்கள் நிறைவேறுமோ என்று ஏங்கியிருந்தால் தேக ஸௌகத்துக்கும் பராக்ரமத்துக்கு வழிகாட்டும்.

இந்த விஷயங்களைக் கவனியுங்கள்

ப்ரொபஸர் ஜேம்ஸினுடைய

எலக்ட்ரோ டானிக் பெர்ல்ஸ்

என்னும் மருந்தை சாப்பிட்ட முதல் நாளே பலவீனம் போய்விடுகிறது. தைர்யமும், பலமும், ஸௌகமும் உண்டாகிறது. பசி உண்டாகிறது. ஜீரணசக்தி ஏற்படுகிறது. நரம்பு பலவீனத்தை ஸரிப்படுத்தி நரம்புகளுக்கு பலம் கொடுக்கிறது. 25-மாத்திரைகள் கொண்ட 1 பாட்டில் ரூ. 1-4-0. 40-மாத்திரைகள் கொண்ட பாட்டில் ரூ. 2-0-0

ஆங்கிலோ இண்டியன் ட்ரக் அண்ட் கெமிகல் கம்பெனி, நெ. 16, மார்க்கட், பம்பாய்.
மதராஸ் ஏஜண்டு:—மேதா புருஷோத்தம் மூல்ஜி,
29, சைனபஜார் ரோட், பூக்கடைப்பக்கம், மதராஸ்.

(A. 1819) THE FASCINATING PERFUME

**OTTO DILBAHAR** (Regd.)

எல்லோர் மனதையும் ரமிக்கச்செய்யும்

## ஆட்டோ டில்பஹார்

சில பொருக்கான மல்லிகை ஜாதி புஷ்பங்களிலிருந்து சாராய சம்பந்தமின்றி அதிமதுரமாயும் சுகந்தமும், கொஞ்சநாள் வாசனை நீடித்திருக்கக் கூடியதுமாய் தயார் செய்யப்பட்டிருக்கிறது. உங்கள் கை குட்டைகளில் சில துளிகள்விட, ஓர் நந்தவனத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கும் சுவாசனையை ஒக்கும். மற்றவர் வேறு எவ்வித வாசனையை உபயோகித்திருப்பினும் ஆடோ டில்பஹார்தான் முன்னிற்கும்.

நேர்த்தியான ஸ்டாபர் புட்டி 1-க்கு

| | | | | |
|---|---|---|---|---|
| சிறியது விலை. | 0 | 8 | 0 | வி. பி. 4 அணா ப்ரத்தியேகம். |
| நடுத்தரம் ... | 0 | 12 | 0 | |
| ½ அவுன்ஸ் ... | 2 | 0 | 0 | |

ஆடோ டில்பஹார், வாஸனை கார்டு டஜன் 1-க்கு ... ... 0 10 0

சோல் ஏஜண்டு:—

ஆங்கிலோ இண்டியன் ட்ரக் அண்டு கெமிகல் கம்பெனி, 155, ஜம்மாமஸீத்: பம்பாய்.
மதராஸ்ஏஜண்டு:— மேடா புருஷோத்தம்மூல்ஜி, 29, சைனபஜார் ரோட், பூக்கடை சமீபம், மதராஸ்.

(A. 1818.) Hair Destroyer

**BADSHAHI SOAP**

ரோம ஸம்ஹாரி

பாட்ஷாஹி ஸோப்பு

இதை ஒருதடவை போட்டால் தேகத்தில் எந்த இடத்திலிருந்தாலும் மயிரை சுத்தமாய் எடுத்துவிடும்; வலியுமில்லை; கரைபடுவதுமில்லை. இந்த ஒரு ஸோப்புத்தான் தோலின் வர்ணத்தை பளபளப்பாய் வைக்கிறது.

மூன்று கட்டிகளுள்ள பெட்டி 1-க்கு ரூ. 1-0-0
வி. பி. சார்ஜ் 4 அணா.

தனி ஏஜெண்டு:—

மேடா புருஷோத்தம் மூல்ஜி,
நெம்பர் 29, சைனபஜார் ரோட்,
பூக்கடைப்பக்கம், மதராஸ்.

**Mehta Purushotham Moolji,**
*29, China Bazaar Road, Madras.*

# BENARES AT YOUR DOOR

காசிபட்டு புடவைகள், ரவிக்கைகள், வெண்பட்டு தோவத்தி அங்கவஸ்திரம், முதலிய பட்டாடைகள் வாங்கப் பிரியபடுகிறீர்களா?

நீங்கள் வேறு இடத்தில் வாங்கு முன் எங்களிடம் அழைப்பித்தால் உங்களுக்கு நல்ல லாபமுண்டு. நீங்கள் கொடுக்கும் விலைக்கு சரியான தினுசுகளாயும், நாணயமான சரக்காயும் அடைவீர்கள்.

காசியில் பட்டுவர்த்தகம், கே. எஸ். முத்தைய்யா அண்டு கம்பெனி யென்றால், உலகமுழுதும் நன்கு அறிவர்.

நீங்கள் உங்கள் அருமைப் புதல்விகளுக்கு சம்மானம் செய்ய விருப்பமுண்டா?- அப்படியானால்,

முத்தையாவுடைய பேர்பெற்ற "பித்தளை விளையாட்டு" சாமானை வாங்குங்கள். மிக அழகும், பளபளப்புமுள்ளது. குழந்தைகளின் மனதை விரைவில் குதூகுலப்படுத் தக்கூடிய மாதிரியில் அவ்வளவு அழகாய் அமைந்துள்ளது. ஜோடி 1-க்கு 32 சாமான்க ளடங்கியது.

| | | |
|---|---|---|
| பெரிய சயிஸ் ஜோடி 1-க்கு | ரூ. | 3—8—0 |
| மத்திம சயிஸ் ,, | ,, | 2—0—0 |
| சிறிய சயிஸ் ,, | ,, | 1—8—0 |

எங்கள் கம்பெனி பெரிய கேட்லாக் இனாமாக அனுப்பப்படும்.

☞ K. S. Muthiah & Co., "Silk House" Benares City.

## சர்வதேள் விஷ சஞ்சீவி



கதறிவந்தவன் களிப்புடன் செல்வான்!
விஷந் தீண்டினவன் நிமிஷத்திற் குணமடைவான்!!
குணமில்லாவிட்டால் ரூபாய் 100 இனும் கொடுக்கப்படும்!!!

நண்பர்களே! ஒவ்வொரு வீட்டிலும் தேளினுடைய உபத்ரவம் பொறுக்கமுடியாமல் அவஸ்தைப்படுவதை நாம் அனைவரும் கண்டுவிசன முற நேரிடுவதைப்பற்றி, நாம் அதிக கஷ்டப்பட்டு இதற்காக உயர்ந்த மருந்து கண்டுபிடித்திருக்கிறோம். இது அநேக ஐரோப்பிய டாக்டர்களாலும், தமிழ் வைத்திய பண்டிதர்களாலும், நன்கு மதிக்கப்பெற்றது. எமது மேற்கண்ட லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியை தேள் கொட்டின விடத்தில் உபயோகிக்க உடனே ஒன்றிரண்டு நிமிஷத்திற்குள் குணமடையச் செய்யும். இவ்விஷ சஞ்சீவியை இன்னும் எலி, நாய், பூரான், செய்யான், பாம்பு, நண்டுத்துறக்கா முதலிய எவ்வித விஷ ஜெந்துகள் தீண்டின போதிலும், டைரக்ஷனில் சொன்ன பிரகாரம் உபயோகித்தால் குண மடையலாம்.

மேற் சொன்னவைகளுக்கு உபயோகித்து குணமில்லாவிடில், பணம் வாபீஸ் செய்துவிடப்படும் இந்த லங்கர் மார்க்குள்ள சர்வதேள் விஷ சஞ்சீவியைக் கைப்பற்றுங்கள். இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டியது. ஏனென்றால், ஓர் மனிதனை இரவில் 12 மணிக்கு நித்திரையில் விஷந்தீண்டிவிட்டால், அம்மனிதன் எவ்வளவோ அவஸ்தைப்பட அநேக மருந்துகளையும் மந்திரங்களையும் உபயோகித்தும் பயன்படாமற் போகிறதல்லவா? அதற்காக இவ்விஷ சஞ்சீவி ஒவ்வொரு இல்லத்திலும் அவசியம் இருக்கவேண்டியது.

வேண்டுபவர்கள் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.
விலை பாக்கெட் 1-க்கு ரூ. 0 8 0 டசன் 1-க்கு ரூ. 5 0 0

விலாஸம்:—வி. எ. எஸ். பாணி, நெ. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.

449



அத்தர்களில் உமக்கு விருப்பமுண்டா ?
விருப்பமிருந்தால் உலகெங்கும் பிரசித்திபெற்ற

**Ottomohini**

REGD OTTO MOHINI

REGD

MOHINI-AGENCY BOMBAY No2

## ஓடோ மோஹினி (ரிஜிஸ்டர்ட்)

அத்தரை ஒருதடவை உபயோகியுங்கள். இதைப்பற்றிப் புகழ்வது அவசியமில்லை. ஏனெனில், இது ஏற்கனவே அனேக கனவான்களுடைய மனதைக் கவர்ந்திருக்கின்றது. பொருட்காட்சிச் சாலைகளில் அநேக பொன், வெள்ளி மெடல்கள் பரிசு பெற்றிருக்கின்றது. அநேக வருஷகாலமாய் காரண்டி கொடுத்துக்கொண்டிருப்பது ஓடோ மோஹினி ஒன்றுதான். ஓடோ என்ற பெயருடன் விளங்கும் போலிச் சரக்குகளை வாங்கி ஏமாறாதேயுங்கள். 4-நாட்கள் வரையில் தன் மணம் மாறாதென்றும் அப்படி மாறினால் ரூ. 100 இனாம் கொடுக்கத் தயாராயிருப்பதும் ஓடோ மோஹினி ஒன்றுதான். இது மனதைக் கவரத்தக்க ஆயிரக்கணக்கான புஷ்பங்களின் இனிமையான வாசனையைத் தருகின்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ½ அவுன்ஸ் | புட்டி விலை | ரூ | 2 | 0 | 0 |
| 1 டிராம் | புட்டி விலை | ,, | 0 | 12 | 0 |
| ½ டிராம் | புட்டி விலை | ,, | 0 | 8 | 0 |
| சாம்பில் | புட்டி விலை | ,, | 0 | 2 | 0 |

ஓடோ மோஹினி கார்டு, டஜன், 12 அணா. ஒரு கார்டு 1 அணா

---

அத்தர்களின் ஊற்று என்றால் வேறொன்றுமல்ல. ஆனால்
உலகப் பிரசித்தி பெற்ற

(ரிஜிஸ்டர் செய்தது). **ரோபினியா** என்னும் கூந்தல் தைலம்.

இந்த பரிமளமான கூந்தல் தைலத்தை உங்கள் கூந்தலுக்கு உபயோகித்தால் இது கூந்தலை மிருதுவாக்கி மினு மினுப்புக் கொடுத்து நீண்டதாக வளரச்செய்யும். ஒரு தடவை உபயோகப்பதினாலேயே மிக்க உத்ஸாஹமாகும் அநேகவித மலர்களின் வாசனையைத்தரக்கூடியது.

ஆகையால் இந்த தைலத்தை ஒரு புட்டி வாங்கி உபயோகித்தால் இதனுடைய உண்மை நன்கு விளங்கும்.

ஒரு புட்டியின் விலை ரூபாய் 1—0—0.

---

ஸோல் ஏஜெண்டுகள்:—ஷா பகவான்தாஸ் சுனிலால் & கம்பெனி,
177, சைனாபஜார் ரோட், மதராஸ்

அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற

50 சாமான்கள் இனாம் **ராஜா சுந்தரி ரோஜா** 50 சாமான்கள் இனாம்

**கூந்தல் வளரும் பரிமளத்தைலம்**

**50 இனாம் சாமான்களுடன் டின் 1-க்கு ரூ 1-0-0**

தலைமயிர் அழகாய் இருக்கவேண்டுமென்று விரும்பும் ஸ் ரீகளும், தலைமயிர் உதிர்ந்து போகாம




லிருக்க வேண்டுமென்றுவிரும்புகிற ஸ்திரீகளும், சாதாரணமாய்கடைகளில் கிடைக்கக்கூடிய இழிவான எண்ணெய்களை உபயோகிக்காமல் எங்கள் தைலத்தின் மதுருகாரமுடைய பரிமளத்தைத்தெரிந்து அவைகளை வாங்கி உபயோகிக்கவும். இதின் பரிமளம் சொல்லவும் எழுதவும் முடியாது. தலையில் தடவிசீவிக்கொண்டால் அக்கம் பக்கம் வீடுகளுக்கும் இதின் வாசனை வீசும். கூந்தலை நீளமாய் வளரச்செய்யும். மூளையின் கொதிப்பைத்தணித்து கண்களுக்கு குளிர்ச்சியைத்தரும். சிரசிலுள்ள பல நோய்களையும் நிவர்த்திசெய்து கண்களில் நீர்வடிதல், தலையில் சுண்டு, புண், மயிர்வெடிப்பு. மயக்கம், தலைச்சுற்றல், தலைவலி, சொரிசிரங்கு, மனோவியாகூலம் ஆகிய இவைகளைப் போக்கடித்து, தேக ஆரோக்கியம் தரும் தைலம் இது ஒன்றுதான். 1-புட்டி தருவித்தால் இதின் அருமைதெரியும், அநேக நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றிருக்கிறது. இது தேசமெங்கும் நல்ல பெயர் பெற்றிருப்பதே இதன் புகழ்ச்சிக்கு அத்தாட்சியாகும்.

இனாம் சாமான்களின் விபரம்:—ஸ்திரீகள் தலையில் அணியும் கொண்டைக்கிளி 6, குங்குமச்சிமிழ் 1, மைச்சிமிழ் 1, அழகான முகம்பார்க்கும் கண்ணாடி 1, தாம்பூலமாத்திரைகள் 30, தந்தச்சீப்பு 1, ராஜாராணி கார்னேஷன் பெட்டி 1, ரவிவர்மாபடங்களுள்ள போஸ்ட் கார்டுகள் 6, அத்தர்பில்லை 1, சந்தனப்பில்லை 1 ஸ்திரீகள் மார்பில் அணியும் ராஜாராணி உள்ள சுந்தரமானபுரூச்ஸ் 1.

விலாஸம்:— தைரியலட்சுமி அண்டு கோ, நே. 3, இருளப்பன் தெரு, மதராஸ்.



## ஸ்ரீமத் வால்மீகி

# இராமாயண வசனம்

பண்டித நடேச சாஸ்திரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது.

அழகும், பெருமையும், எளிமையும் ஒருங்கே வாய்ந்த நடைக்கு இவற்றிற்கு நிகரான வேறு புத்தகங்கள் தமிழ்ப் பாஷையில் மிகச் சிலவேயுள்ளன.

மிக விலையுயர்ந்த கனமான ஆண்டிக் காகிதத்தில் அச்சிட்டு, நேர்த்தியான காலிகோவில் அழகாய் பயிண்டு செய்திருக்கிறது.

| | | | |
|---|---|---|---|
| பாலகாண்டம் | ரூபா. | 1 | 12 |
| அயோத்தியாகாண்டம் ... ... ... | ,, | 3 | 0 |
| ஆரணியகாண்டம் ... ... ... | ,, | 1 | 12 |
| கிஷ்கிந்தாகாண்டம் ... ... ... | ,, | 1 | 12 |
| சுந்தரகாண்டம் ... ... ... | ,, | 1 | 12 |
| யுத்தகாண்டம் ... ... ... | ,, | 3 | 8 |
| 6-காண்டமும் சேர்த்துவாங்கினால் முன் விலை ... | ,, | 12 | 8 |

தற்காலம் குறைக்கப்பட்ட விலை ரூபா 10.

**வி. கல்யாணராம ஐயர் அண்டு கோ.,**

புக்செல்லர்ஸ், மதராஸ்.

A. 963

## Aletris cordial

## அல்லெட்ரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத்
தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கும் உபயோகிக்கப்படுவது. ருது அடைய நிற்கும் சிறுமிகளுக்கும்இம்மருந்தேமிகவும்சிறந்தது.

அளவு:—தேயிலைக் கரண்டி மருந்தை, உண்டபின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ண உதகத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

## Celerina

## ஸிலரீனு

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும், ஒரு மணி முன்பு, ஒரு தேயிலைக் கரண்டியளவு நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத் தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக் கேட்டாலாகும் அஜீர்ணம், பல ஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவையாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூளை வஸ்து விருத்தியடைய மிக்க அருமையாகச்செய்யப்பட்டது.

இப்பிரஸித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறுமல்

**RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.**

என்ற லேபிளைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளிலெங்கும் கிடைக்கும்

## சரீரசக்தி, மனோபலம், தேகப்பருமன் முதலிய வைகளை விரும்பிவோர்

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை

உபயோகப்படுத்துங்கள்,

புத்தி திக்ஷணியம், புதியசக்தி இவைகளுண்டாக

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை

உபயோகப்படுத்துங்கள்.

சரீரசம்பந்தமான வியாதிகளை நீக்க

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகளை

உபயோகப்படுத்துங்கள்.

32, மாத்திரைகள் கொண்ட டப்பி 1-க்கு ரூ. **1**.

**வைத்திய சாஸ்திரி மணிசங்கர் கோவிந்தஜீ,**


ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

157, பிராட்வே, 96, மவுண்ட் ரோட், மதராஸ்.

## உமது சத்துருக்கள்

தேகபலயீனம், ஞாபகமின்மை,

மூளைவரட்சி, அஜீரணம்




முதலியவைகள் தான். இவைகளுக்குச் சத்துரு நம்முடைய

### மதனமஞ்சரி மாத்திரைகள்

இம்மாத்திரைகளைக்கொண்டு உம்முடைய சத்துருக்களை எளிதில் வெல்லலாம்.

40 மாத்திரைகளடங்கிய டப்பி விலை ரூ. 1—0—0

விலாஸம்:—ராஜவைத்திய, நாராயணஜீ கேசவஜீ,

ஆயுர்வேதோத்ய ஔஷதாலயம், 20, சீனபஜார் ரோட், மதராஸ்,

## பாலாஜி அண்டு கம்பெனி, காசி

புதிய சரக்குகள் — உடனே எழுதுங்கள் — சகாய விலைகள்

### புதுமாதிரி பட்டுபுடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டுனல் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நிசவு செய்யப் பட்டுள்ளது. சிகப்பு,பச்சை, ரோஜா, பூநீலம், முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளுக்கு அழகான ஜரிகை வேலை செய்யபட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம் புடவை 1-க்கு விலை ரூ 25. 30 35. முதல் 45. வரை.

### பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிப்புக்கு அழகான ஜரிகை வேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில் ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3. முதல் ரூ 5 வரை.

### விளையாட்டுப் பாத்திரம்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32 வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமான.

| | | |
|---|---|---|
| 1 நெ· பெரியசெட் | 1-க்கு | ரூ 3—8. |
| 2 நெ· மத்திமசெட் | 1-க்கு | ரூ 2—0. |
| 3 நெ· சிறு செட் | 1-க்கு | ரூ 1—8. |

விலை விபர கேட்லாக் இனாம்

**BALAJEE & CO., SILK MERCHANTS,**

***Benares City***

4.63




## எமது ஆபீஸில் கிடைக்கக்கூடிய சில புத்தகங்கள்

**பாகவத வினாவிடை: இரண்டாம் பாகம்**
(10, 11, 12-ம் ஸ்கந்தங்கள் அடங்கியது.)

இதில், ஸ்ரீ கிருஷ்ணபகவான் வம்சம், அவர் அவதார காரணம், அவர் அநேகம் லீலைகள்; ருக்மிணி கல்யாணம், யாதவ குலத்திற்கு ரிஷி சாபம் வந்த கதை, யாதவர் நாசம், ப்ரளய ரஹஸ்யம், மார்க்கண்டேயர் வடபத்ரசாயி தர்சனம் கண்டது முதலான விஷயங்கள் எளிய நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்தப் பாகத்திற்கும் 7-அனுபந்தங்கள் உண்டு. சித்திரப் படங்களும் அழகாய் அச்சிட்டு, 10-படங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. விலை ரூபா 1.

**இயற்கை அற்புதங்கள்:**
புதிய பதிப்பு: விலை அணு 8

இது மயிலாப்பூர், பி. எஸ். ஹைஸ்கூல், முதல் உதவிபோதகரான ஆ. ஸீ. கஸ்தூரிரங்கய்யர், பி.ஏ., எல்.டி., அவர்கள் செய்தது. ஸ்கூல் இன்ஸ்பெக்டராயிருந்த ம-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் L. C. வில்லியம்ஸ் பிள்ளை B.A. எழுதிய முகவுரையுடன் கூடியது. இதிலடக்கம்.

1. மழைக்கால்கள், 2. எரிமலைகள், 3. பூகம்பம், 4. வெந்நீர் ஊற்றுகள், 5. கானல் நீரும், அதன் ரூபாந்தரங்களும், 6. வால் நக்ஷத்திரங்களும், 7. எரி நக்ஷத்திரங்களும், பொறி நக்ஷத்திரங்களும், 8. வானவில், 9. நிழலும் கிரகணங்களும், 10. ஹாலிவால் நக்ஷத்திரம், 11. மொழிபெயர்ப்பு விளக்கம்.

இதில் அநேக சித்திரப்படங்கள் ஆங்காங்கு அழகாய் அச்சிட்டுச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை அணு 8.

**கிரிஸெல்டா**
அல்லது 'பொறுமையுள்ள மனைவி'

இப்புத்தகம் பெண்பாலர் அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகங்களில் ஒன்று. இப்புத்தகத்தில் ஒரு பெண் தன் கணவனிடம் நடந்துகொண்ட சிலாகிக்கத்தக்க மாதிரியை விளக்கிக்காட்டியிருக்கிறது. படிக்கப்படிக்க உத்ஸாகத்தைக் கொடுக்கக் கூடியது. இரண்டாம் பதிப்பு. விலை அணு 3.

**சத்தியவல்லி: புதிய பதிப்பு**

ஒரு சிறந்த கற்பனைக் கதை. பீமலா எலேன் எனும்நாவல்களின் நூலாசிரியரான ம-ா,ா-ஸ்ரீ ஆர்.பி. குழந்தைசாமிப் பிள்ளை, பி.ஏ., எல்.டி. அவர்களால் எழுதப்பெற்று சென்னை ஸர்வகலாசாலை முக்கிய பரீக்ஷகரான ம-ா-ா-ஸ்ரீ, ராவ் ஸாகேப் ராமகிருஷ்ண பிள்ளை அவர்கள், எழுதிய முகவுரையுடன் கூடியது. ஸத்தியமே ஜெயம் எனும் படிப்பினையும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் எனும் நீதியையும் கற்பித்தலோடு போதனை புகட்டும் பாகங்களும் இனியநடையில் மனத்தைப் பிரமையுள் ஆழ்த்தும்படியாகக் கற்பனை வர்ணனை இயற்கையே பிரதிபலித்தார் போலிருப்பதும் படிப்பவர் மனதைப் பற்றி இழுக்கும். தர்மஸங்கடங்களிலும் கஷ்டத்திலும் நன்மையையே கைப்பிடிக்க வேண்டுமென்னும் நிலைமையும் ஆழ்ந்த உணர்வோடு காட்டப்பட்டிருப்பதுடன் அக்காலங்களில் மனம் அலைபாயும் விதத்தை விவரித்திருப்பதும் வியக்கத்தக்கது. வாக்கின் நடையும், பாஷையின் போக்கும், யுக்தியின் ஸம்ரசகமும், கதையின் தாட்டியும், மனதை இழுக்கும் வன்மையும் எவரும் வியக்கத்தக்கவை. விலை அணு 12.

**சகுந்தலை**

இது வேதவியாஸ முனிவரது மஹாபாரதத்திலிருந்து எடுத்தெழுதப்பெற்றது. கடிதம் வரைந்த காதை. உள்ளங்கலந்த காதை. புரமுறப் புகுந்தகாதை, பெருமைபெற்ற காதை என்னு மைந்ததிகாரத்துடனிருப்பதன்றிக் காளிதாஸ மஹாகவியியற்றிய அபிக்ஞான சகுந்தலமென்னும் நாடகத்தின் சுருக்கத்தை அநுபந்தமாகப் பெற்றுள்ளது. இனிய நடையில் சிறுவரும்எளிதிலறியும்படி எழுதப்பெற்றுள்ளது. ஆர்ட் பேபரில் அச்சிட்ட 4-அழகிய படங்கள் கொண்டது. விலை அணு 4.

| | | |
|---|---|---|
| பூதத்வ போதினி | ... ... ரூ. | 0 8 |
| சிவமஹாபுராணம் | ... ... | 5 0 |

விலாஸம்:— மானேஜர், 'விவேக போதினி' திருவல்லிக்கேணி, சென்னை.

## சுந்தராங்கி !!

நவீனமாக எழுதப்பட்ட ஒரு கதை !

இந்தப் புஸ்தகம் K. துரைஸாமி அய்யங்கார் அவர்கள் B. A. யால் எழுதப்பட்டது. இதன் முதற்பக்கத்தை படிக்க ஆரம்பித்தவுடன், புத்தகத்தை பூராவும் முடிக்காது கீழே வைக்கமாட்டார்களென்பது நிச்சயம். இது வெகு வேடிக்கையாக, நவரசங்களையும் பொருத்தி, ஆண், பெண், பாலர், முதியவர், சிறியோர், கற்றவர், மற்றவர் ஆகிய யாவரும் படித்து ஆனந்தமடையக்கூடிய விதமாக எழுதப்பட்டிருக்கிறது. இதன் விலை ரூ. 1 என்றாலும், விவேக போதினியின் சந்தாதாரர்கள் இதை சுலபத்தில் பெறும்பொருட்டு நமது நண்பரான இதன் நூலாசிரியரிடத்தில் ஏற்பாடு செய்துகொண்டு, நம் சந்தாதாரர்களுக்கு மாத்திரம் இதை 12-அணுவிற்குக் கொடுக்க உத்தேசித்திருக்கிறோம். 50-பிரதிகளே நூலாசிரியரிடத்திலிருப்பதால், முந்துவது அனுகூலம். இருக்கும் பிரதிகள் சிலவாகிவிட்டால், பிறகு குறைந்த விலைக்கிக்கிடைக்காது. இந்தப்புஸ்தகத்தை நமது துரைத்தனத்தார் நன்கு மதித்து, பாடசாலைகளில் நாளது வருஷத்திற்குக் கட்டாயபாடமாக வைத்திருப்பதே, இதன் சிறப்பை விளக்குவதால், இங்கு அதிகம் எழுதுவது அனாவசியம். புஸ்தகத்திற்கு எழுதுவோர் தம்முடைய ரிஜிஸ்டர் நம்பரைத் தெரிவிக்க வேண்டும்.

## பிரபாவதி

இது வங்காளி பாஷையில் கனத்தங்கிய நரேந்திரநாத சட்டர்ஜீ அவர்கள் இயற்றிய நவினத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. கஷ்டம் கூலிதரும் முயற்சி திருவினையாக்கும் என்னும் படிப்பினையையும், நெடுங்காலங் கடந்தபின் நடக்கும் மணத்தினல் வரும் ஸுகம் இது முதலியவைகளைப்பற்றிய இனிய செந்தமிழ் நவினம். ஸரளமாக எவரையும் எடுத்தபின் கீழ்வைக்கமுடியாமல் படிக்கும்படி செய்யும் திறமையுள்ளது. விலை அணு 4.

ஹநுமப்ரபாவம் ... ... 0 3

## பாகவத வினவிடை : முதல் பாகம்

முதல் ஒன்பது ஸ்கந்தங்கள் அடங்கியது

கபிலவாஸுதேவர், துருவர், பிராசீனபர்ஹிஸ், ரிஷபயோகி, ஜடபரதர், அஜாமிளன் முதலிய மஹான்களின் சரிதையும், சிருஷ்டி விஷயம், வருணாசிரம தருமம் முதலிய விஷயங்களும், தக்ஷயாகம், கஜேந்திர மோக்ஷம் முதலிய உபாக்கியானங்களும் அமைந்திருப்பதன்றி, மஹாப் பிரளயம், சாஸ்திர சிருஷ்டிக் கிரமம், சாஸ்திர புராண சிருஷ்டிகளின் பொருத்தம்; திரிமூர்த்திகளின் ஸமரஸம், நெடுங்கால அளவை ஆகிய இவைகளைப்பற்றிய வியாஸங்களை அநுபந்தமாக உடையது. பரசுராமாவதாரம் வரையுள்ள கதை பொருந்தியுள்ளது. 10-உயர்ந்த சித்திரப் படங்கள் ஸ்கந்தத்திற்கேற்ற வண்ணமடங்கியது. மிக அழகாய் வழவழப்பான காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கின்றன. விலை ரூபா 1.

## திருமயிலைச் சிறப்பு

1. அறுபத்துமூவர் உத்ஸவம், 2. பார்வதிதேவி மயிலுருவம் நீங்கியது, 3. வாயிலார் நாயனர் சரித்திரம், 4. திருவள்ளுவர் சரித்திரம், 5. பேயாழ்வார் சரித்திரம்; இவைகளுடன், இதில் ஸ்ரீ கபாலீசுவரர் கோவில் கோபுரப்படமும், அறுபத்துமூவர் படமும் வழவழப்பான ஆர்ட் பேபரில் அச்சிட்டுச் சேர்க்கப்பட்டுள்ளது. விலை அணு 2.

## சேரன் செங்குட்டுவன்

தமிழரின் பண்டை நாகரிகச் சிறப்பைச் செவ்வையாக விளக்கக்கூடிய சிறந்த தமிழ் சரித்திரப் புத்தகங்களுள் இஃது ஒன்று. இது 'செந்தமிழ்'ப் பத்திராசிரியராயிருந்த மிஸ்டர் மு. இராகவையங்காரால் எழுதப்பெற்றது. கிரௌன் 16 பக்கங்கொண்ட ஸைஸில் 14 பாரங்கொண்டது. பெதர் வெயிட் என்னும் விலையுயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பட்டது. விலை ரூ. 1.

முரளீதரன் ... ... 0 10

வனஜாக்ஷி ... ... 0 8

*Address:—*

**THE MANAGER "VIVEKA BODHINI" TRIPLICANE, MADRAS, S. E.**